379

3

# RAMANI

A HISTORICAL NOVEL

M. ADI & Co.,

MADRAS.

1928. [Price As. 0-7-6.

O,3 R
N23
L80866

# ரமணி

ஒரு சரித்திர சம்பந்தமான நாவல்

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

மதராஸ்

எம். ஆதி அண்ட் கம்பெனி

1923

PRINTED AT THE CHANDRA PRESS, MADRAS.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | ஒரு நந்தவனம் ... ... ... | 1 |
| 2. | புருஷோத்தமர் ... ... ... | 4 |
| 3. | பிராணுபத்து ... ... ... | 7 |
| 4. | பிராண தானம் ... ... ... | 10 |
| 5. | புருஷோத்தமர் நகரடைதல் ... ... | 13 |
| 6. | வீரன் அசௌக்கியமுற்றிருத்தல் ... | 17 |
| 7. | ரமணியின் மனநிலை ... ... ... | 25 |
| 8. | ஓர் இரகசியம் ... ... ... | 46 |
| 9. | சையத் அப்துல்லா ... ... ... | 81 |
| 10. | கௌதமசாக்கிய புத்தன் சரித்திரம் ... | 95 |
| 11. | வீரனுக்குப் பெண் நிச்சயித்தல் ... | 100 |
| 12. | வீரன் பிறப்பு வெளியாதல் ... ... | 104 |
| 13. | ரமணியை வீரன் மணம் புரிதல்... ... | 111 |

180866

# ர மணி

## 1. ஒரு நந்தவனம்

தெய்வலோகத்தில் தேவர்களுக்கு இன்பம் தரும்படி அமைக்கப்பெற்றுள்ள சோலைகள் எல்லாவற்றினும் மிக்க சிறப்பினையுடைய சிங்காரவனம் ஒன்று ஆமது நகரில் இருந்தது. நவரத்தின மணிகளோ என்று பார்ப்போர் நவிலத்தக்க மலர்களின் நறுமணம் நகர முற்றிலும் வீசியது. இன்சுவைக் கனிகளின் கனத்தைத் தாங்கமாட்டாது தாழ்ந்திருக்கும் பழமரங்களில் பலவிதப் பட்சிகள் வாசஞ்செய்தன. குயில்கள் பாடவும், மயில்கள் ஆடவும், தடாகங்களில் வாழும் தண்ணீர்ப் பறவைகள் தத்தம் பேடுகளுடன் விளையாடவும் விளங்கி நின்ற அச்சிங்கார வனத்தில் மாந்தர்கள் களிப்புடன் தங்கிக் காலம் கழிக்குமாறு அழகிய கொடிகளடர்ந்த பந்தல்களில் ஆசனங்கள் பல அமைக்கப் பெற்றிருந்தன.

அழகே ஒரு பெண்ணுருக்கொண்டு இப்பூமியின்கண் வந்துற்றதுபோல, மிக்க வனப்பினையுடைய ஒரு பெண் அவ்வனத்தில் தனிமையாய் உலாவிக்கொண்டிருந்தாள். அவளது ரூபலாவண்ணியத்தையும் நடையுடை பாவனைகளையும் நாம் இங்கு விவரமாக வருணிக்க முயலுவோமாயின், இப்புத்

தகமே அதற்குப் போதாது. அம்மாதின் செந்தாமரை மலர் போன்ற முகமும், முல்லையரும்பு போன்ற பற்களும் பவளம்போன்ற வாயும், நீலோற்பல மலரை ஒத்த கண்களும், கருமேகம் திரண்டு கிடப்பது போன்ற கூந்தலும், தேவ ரம்பையோ என்று அதிசயிக்கத் தக்க தோற்றமும் பார்ப் போர் மனத்தைக் கவர்ந்தன. அவ்வேல்விழியாள் அங்கு உலாவி நின்றதால் அச் சிங்காரவனம் ஒரு தேவதையைப் பெற்றுப் பொலிவடைந்தாற்போ லிருந்தது.

ரமணி என்னும் இனிய பெயரையுடைய அம்மங்கை மலர்களில் சிலவற்றைக் கொய்து அவைகளைத் தொடுக்கு மாறு ஆசனமொன்றில் அமர்ந்தனள். சிறிது நேரமாயின பின், 'ரமணி, ரமணி' என்னும் கூக்குரல் அவ் வனத்தின் ஒரு மூலையிலிருந்து உண்டாயிற்று. அதைக்கேட்டவுடன், ரமணி மாலை தொடுப்பதை நிறுத்தி, தன்னை அவ்வாறு வருந்தி அழைப்பவர் யாரெனத் தெளிந்து, 'அம்மா, இதோ இருக்கின்றேன், இங்குவா' என விடை பகர்ந்தாள். 'குழந்தாய் ரமணி, போஜனம் அருந்தக் காலமாயிற்றே. இன்னும் மாளிகைக்கு வாராது வனத்தில் தாமதித்திருப்ப தேன்?' என்று சொல்லிக்கொண்டே அவளது செவிலித் தாயாகிய சம்யுக்தை அவளிடம் வருவாளாயினள்.

ரமணி:—அம்மணி, விடியற்காலையில் கொஞ்சும் ஒரு பஞ்சவர்ணக்கிளி மாங்கனி யொன்றை அருந்தக் கண்டு, என் வாயில் ஜலம் ஊற, யானும் உடனே தடா கத்தை யடைந்து, தந்தசுத்தி செய்து, கைக்கு எட்டிய கனியொன்றைப் பறித்துப் புசித்தேன். ஆதலால், இப்போது எனக்கு உணவின் மேல் நாட்டமில்லை.

சம்யுக்தை :—குழந்தாய், நீ செய்தது பிசகு. அதிகாலையில் மாங்கனியை அருந்தலாமா? உன் தந்தை இதைக் கேள்வியுற்றால், என்னையல்லவோ கோபித்துக் கொள் வார். நல்லது, போனது போகட்டும், மாளிகைக்கு வந்து சிறிது பாயசமாவது பருகு.

ரமணி :—அம்மா, அப்படியே வருகின்றேன். தந்தை வெகு நாளாய் வாராத காரணம் என்ன? அவரைக் காணுமல் இருக்க என்மனம் தாளவில்லை. சீக்கிரத்தில் வருகிறேன் என்று எனக்கு நயவுரை கூறிச்சென்றவர் இன்னும் வாராதகாரணம்தான் என்னவோ! அம்மா, தந்தை உன்னிடத்தில் ஏதேனும் சொன்னுரா?

சம்யுக்தை :—என் கண்மணி, தந்தையைக் காணுமையால் மனம் வருந்தவேண்டா; அவர் இன்னும் இரண்டுதினங் களுக்குள் வந்து விடுவார். 'சம்யுக்தா, என் செல்வப் புதல்வியாகிய ரமணிக்குச் சில ரத்னுபரணங்கள் வாங்கப்போகிறேன், யான் வருந்துனையும் அவள் என் னைக் காணுமையால் ஏக்கமுற்றிருக்கும்படி அன்ன வளைப் பலவிதத்திலும் ஆனந்தமுறுத்தி வைத்திரு' என்று உன் தந்தை புருஷோத்தமர் எனக்குச் சொல்லிச் சென்றுர். ஆபரணங்களை ஆராய்ந்து பார்த்தல்லவோ கொள்ளவேண்டும். ஆதலால், கண்ணே, நீ கவலையுற வேண்டா.

ரமணி :—என்னை இத்தரணியில் விட்டு உயிர் நீத்த அன்னை யின் ஏக்கம் நீங்க என்னைச் சீராட்டிப் பாராட்டிவரும் என் செவிலித் தாயே, எனக்குப் புதிய ஆபரணங்கள் எதற்கு? எத்தனையோ அணிகலங்கள் அணிவாரின்றிப் பெட்டிகளில் வீணே கிடக்கின்றனவே.

சம்யுக்தை:—'ரமணி, உன்னை ஈன்றெடுத்த தாய் இறந்து விட்டமையால், உன் தந்தை உன்னைப் பலவாறு போற்றிவருகின்றனர். அது இருக்கட்டும். நாம் மாளிகைக்கு ஏகுவோம். ஆதித்தன் தனது தேரை அதி வேகமாகச் செலுத்துகின்றான். போவோம் வா.

இவ்வாறு ரமணியும் அவளது செவிலித்தாயும் சிறிது நேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்து, அச்சிங்கார வனத்தைச் சார்ந்த மாளிகையொன்றை அடையலாயினர்.

## 2. புருஷோத்தமர்

இங்கிலீஷ்காரர் வருவதற்கு முன்னர் இவ்விந்தியா தேசம் சிறு சிறு ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒவ்வோர் அரசனது ஆளுகைக்கு உட்பட்டிருந்ததென்பதை பலரும் அறிவர். வலியோரான அரசர் சிலர், தங்களைச் சுற்றிலும் உள்ள சிற்றரசர்களை வென்று, அவர்களது ராஜ்யங்களைக் கைப்பற்றுவாராயினர். சிற்றரசர்களுக்குள்ளே ஒற்றுமையில்லாமையால் அவர்களுடைய ராஜ்யங்களில் சிலவற்றை ஒன்றின்பின் ஒன்றாய் மகம்மதிய அரசர்கள் கைப்பற்றி ஆண்டு வந்தனர். அவைகளில் ஒன்று ஆமது நகரம். இந்த நகரம் முன்னொரு காலத்தில் எல்லா நகரங்களுக்கும் திலகம் போல் விளங்கியது. கோயில்களும் மடாலயங்களும், அன்னதான சாலைகளும், மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் எங்கும் நிறைந்திருந்தன. இந்த ராஜபுத்திர நகரம் சுல்தான் சாலீம் என்னும் ஒரு மகம்மதிய அரசனது ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இந்து மதத்தைச் சார்ந்தவர்களான ரஜபுத்திரர் அவ்வரசனிடத்

தில் சில உரிமைகளைப் பெற்றிருந்தனர். ஆயினும், அந்நகரத்தில் புத்தமதஸ்தரும் வாசம்செய்திருந்தனர். ரஜபுத்திர இந்துக்கள் புத்தமதக் கோட்பாடுகளை வெறுத்து அம்மதத்தினரை இம்சித்து வந்தார்கள். ஆமது நகரவாசிகளில் பெரும்பான்மையோர் இந்துமதத்தைச் சார்ந்தவர்களாகையால், ராஜ்யபரிபாலன தந்திரங்களை நன்கறிந்த சுல்தான் அவர்களைச் சார்ந்திருப்பதாகவே நடித்துவந்தார். அப்படியிருந்தும், புத்தரில் சிலர் தனவான்களாயிருந்தபடியால் சுல்தான் சாலீம் அவர்களது நட்பையும் அந்தரங்கமாய்த் தேடினர்.

புத்தமதத்தைச் சார்ந்த தனவான்களில் சிறந்தவர் நமது ரமணியின் பிதாவாகிய புருஷோத்தமர். இவர் உண்மையிலேயே புருஷர்களுக்குள் உத்தமராய் விளங்கினார். சகல நற்குண நற்செயல்களும் வாய்ந்த இவரிடத்தில் ஆமது நகரவாசிகள் யாவரும் அன்பு கொண்டிருந்தனர். உயர்குணங்களுக்கு உறைவிடமும், கலைகளுக்குக் களஞ்சியமும், ஈகைக்கு இருப்பிடமுமாய் விளங்காநின்ற இப்புருஷோத்தமரிடத்து, அந்நகரை ஆளும் சுல்தான் சாலீமுடைய சிநேகிதர்களாகிய இந்துக்களும் நீங்காத அன்புடையவர்களாகி, இவரது நல்லொழுக்கங்களைக்கண்டு, இப்பேர்ப்பட்ட உத்தம புருஷனை இம்சித்தல் கொடிய பாவம் எனத் தெளிந்து, நன்மை புரிந்து வந்தனர்.

அக்காலத்திலிருந்த மகம்மதிய அரசர் அனைவரினும் சாலீம் அதிக சிற்றின்பப் பிரியர். அவர் தமது பிதா வைத்துப்போன செல்வத்தை முன் பின் யோசியாது இவ்விஷயத்திலேயே செலவழித்து வந்தார். சூதாட்டம் என்றால் அவருக்கு அதிக பிரீதி. இரவும் பகலும் தாசிகளையே

தமது கொலுமண்டபத்தில் பதுமைகளாக நிறுத்தினர். 'அம்மம்ம! அந் நகரையாளும் சுல்தானுடைய தர்பார் தேவேந்திரனது கொலுவையும் தோற்கடிக்கும்' என ரஜ புத்திரராகிய இந்துக்கள் உரைப்பாராயினர். பார்த்தோர் அன்றிக் கேட்போர் அறிய முடியாத தன்மை யுடையதாய் மிகச் சிறப்புடன் அவ்வரசனது தர்பார் விளங்கிற்று. அந் நகர வாசிகளாகிய இந்துக்களே சாலீமுடைய ராஜரீகத்தைக் கண்டு ஆச்சரிய மடைந்தனர் என்றால், அம்மகத்துவத்தை நாம் எடுத்துரைக்கவும் வேண்டுமோ! இவ்வாறாகச் சுல்தான் சாலீம் தமது திரவியங்களை யெல்லாம் தம் மனம் சென்றவழியே சிற்றின்பங்களின்பொருட்டுச் செலவழித்து வந்தமையால், அவர் சிம்மாசனம் வகித்த கொஞ்சகாலத்திற்குள் தாம் பெற்றிருந்த செல்வமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போய்விட்டன. சுல்தானுக்குத் தமது பரிதாப நிலைமை தெரிந்ததும், தமது அந்தரங்க சினேகிதராகிய புருஷோத்தமரை ஓர் இரவு தமது அரண்மனைக்கு வரவழைத்து தமக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தை ஆதியோடந்தமாய் விவரித்தனர். அந்த க்ஷணமே புருஷோத்தமர் தமது இருப்பிடத்திற்கு ஏகி, பெரிய பணப்பெட்டி யொன்றைக் கொணர்ந்து, அந்த மகிபதிமுன் வைத்தார். இதைக் கண்ட சுல்தான் ஆனந்த பரவசராகிப் புருஷோத்தமரைவிட வேறு சோதரன் இவ்வுலகில் தமக்கில்லையென்று சொல்லி, அவரைத் தமது இருகரங்களாலும் அணைத்து, இன்சொல் கூறி விடைவிட்டனுப்பினர். இவ்வாறாகப் புருஷோத்தமர் ஜனங்களிடத்திலும் அரசனிடத்திலும் புகழ்பெற்று விளங்கினர்.

## 3. பிராணபத்து

ரமணி தனது செவிலித்தாயுடன் மாளிகைக்குச் சென்று ஆடல் பாடலுடன் அந்நாளைக் கழித்தனள். சூரியன், அன்றிரவு நடக்கப் போகின்ற சம்பவத்தைக் காணச் சகியாதவன்போல், விரைவாகத் தனது தேரைச் செலுத்தி மேற்குத் திரையை அடைந்தான். ஆமதுநகரம் முழுவதும் அமைதியுற்றது. அந்நகரவாசிகள் யாவரும் அப்பொழுதுதான் நித்திரைக்குச் சென்றனர். பட்சிகள் சென்று தம் கூடுகளில் பதுங்கின. ஆந்தைகள் மாத்திரம் இரைக்காக அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தன. இலைகள் அசையும் சத்தமுமில்லாமையால் எங்கும் நிசப்தமே நிலை பெற்றிருந்தது.

திடீரென்று அந்நகர் முற்றிலும் ஒரு திகில் உண்டாயிற்று. அமைதி நீங்கி ஆரவாரம் எழுந்தது. திகிலடைந்த மாந்தர் எத்திசையும் ஓடலாயினர். ஆமதுநகரம் அல்லோல கல்லோலம் அடைந்தது. 'புத்தனது மாளிகை தீப்பற்றியது; புருஷோத்தமரது மாளிகை தீப்பற்றியது, தீப்பற்றியது' என்னும் சத்தம் எங்கும் எழுவதாயிற்று. மாளிகைக்கு அருகிலுள்ளவர் மதிமயக்கத்தால் பரிகாரம்தேடாமல் பதறி நின்றனர். மாளிகையிலுள்ளோர், 'இதெங்கே? அதெங்கே, பணப்பெட்டி எங்கே? நகைப்பெட்டி எங்கே?' என்று சொல்லித் தத்தம் பொருள்களை எடுத்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்தனர்.

'ரமணி; ரமணி, என் கண்மணி! எங்கேயிருக்கிறாய்? ஐயோ, பாழும் தீயே! படுபாவித் தீயே! என் கண்ணைக் காணோமே! ரமணி! ரமணி!' என்று சம்யுக்தை கதறினாள்.

கத்தினாள் ; இங்குமங்கும் ஓடினாள் ; ஐயோ ! பாவம், பெண் பிள்ளை என்செய்வாள். ரமணியைக் காணாமல் மூர்ச்சை யடைந்து கீழே விழுந்தாள். இக்கதறலைக்கேட்டு வேலைக் காரர் எல்லோரும் சாமான்கள் எடுப்பதை நிறுத்தி, ரமணி யைத் தேட ஆரம்பித்தனர். ரமணி தனது சயன அறையில் மஞ்சத்தின் மீது அயர்ந்து நித்திரை செய்துகொண் டிருந் தாள். தீப்பற்றும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. தீப்பற்றியது அவளுக்கு வெகுநேரம் தெரியவில்லை. பிறகு, 'ரமணி, ரமணி' என்னும் கூக்குரல் காதில் விழுந்தது. சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுப் படுக்கையை விட்டு எழுந்தாள். மாளிகை முழுவதும் புகைசூழ்ந்திருந்தமை யால், அவள் என்ன செய்வதென்று தெரியாமல் சிறிது நேரம் திகைத்தாள். மாடியைவிட்டுக் கீழே இறங்குவதற்கு வகைதேடினாள். தட்டுத்தடுமாறிப் படிக்கட்டை யடைந்த தும், அதன் அடிப்பாகம் தீப்பற்றி திகிலென் றெரிவதைத் தன் கண்ணாற் கண்டாள். அந்தோ, என்னபரிதாபம்! கண்ட தும், பதைபதைத்து உடல் சிலிர்த்துச் சோர்வடைந்து கீழே விழுந்தாள். பிறகு நடந்த விஷயங்கள் அவளுக்கு ஒன்றும் தெரியாது. ரமணி கிடந்த இடத்தைச் சுற்றிலும் நெருப்புப் பிடித்தது. வேலைக்காரர்கள் தங்களைச் சூழ்ந் திருக்கும் புகையினால் மூச்சுவிட முடியாமலும் என்ன செய் வதென்று தெரியாமலும் தத்தளித்துக்கொண் டிருந்தனர்.

ரமணி அவ்விடத்திலேயே அசைவின்றி மூர்ச்சை யடைந்திருந்தாள். சிறிது நேரத்திற்குள் அக்கொடிய தீ அவளையும் பக்ஷித்துவிடும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ரமணியைக் காணாததினால் யாவரும் அவள் தீயில் மாண்ட னள் என்றே தீர்மானித்தனர். புருஷோத்தமர் இதைக்

கேள்வியுற்றால் அவரது மனநிலை எவ்வாறிருக்குமென்பதை நீங்களே அறிந்துகொள்ளுங்கள். ஆனால் அகில சராசரங்களையும் காத்துக் கருணைபுரியும் அமலனே ரமணியைத் தன் கடைக்கண்ணாற் பார்த்தருளினன் போலும்.

கூட்டத்தில் நின்றுகொண்டிருந்து ரமணிக்கு நேர்ந்த பிராணபத்தைக் கேள்வியுற்ற ஒருவன் திடீரென்று மாளிகைக்குட்சென்று இமைகொட்டும் நேரத்திற்குள் ரமணியைத் தனது கரத்தில் ஏந்திக்கொண்டு வந்து ஜனக்கூட்டத்தின் முன்னிலையில் விட்டுத் தன் வழியே சென்றான். ரமணியைக் கண்டதும் எல்லோரும் ஆனந்தமடைந்து, அவளைப் புடைசூழ்ந்து, அவளுக்குச் சித்த சுவாதீனம் உண்டாக்க வகைதேடினர். 'ரமணி ரமணி' என்னும் சத்தத்தைக்கேட்டுச் சம்யுக்தையும் மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். ரமணியைக்கண்டு ஆனந்தித்து, அவளைத் தன் மார்போடணைத்துச் சிறிது நேரம் அளவளாவிக்கொண்டிருந்தாள். ரமணியைக் கண்டதும் அவளுக்குப் போன உயிர் திரும்பிவந்தது. ரமணியைக்கண்ட சந்தோஷத்தினால் எல்லோரும் அவளுக்கு உபசரணை செய்தார்களேயன்றி, அவளைப் பிராணபத்திலிருந்து இரட்சித்தவனை ஒருவரும் கவனிக்கவில்லை. உபசரணைகளெல்லாம் ஒழிந்தபிறகு ரமணி தீயிலிருந்து எவ்விதம் தப்பினாள் என்று அங்கிருந்தவரை சம்யுக்தை வினவினாள். 'யாரோ வெள்ளுடை தரித்த வாலிபன் ஒருவன் அவளை இரட்சித்தான்' என்று சொன்னார்கள். 'யாரோ, எவனோ, தேவனோ, மனிதனோ' என்று பலவாறு சிந்தித்து, எல்லோரும் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றனர். அக்கொடிய தீயும் அவிந்து குளிர்ந்தது.

## 4. பிராண தானம்

பல்லாண்டுகளுக்கு முன் இந்தியா தேசம் பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்பெற்றிருந்த தென்று முன்னரே தெரிவித்தோம். சுல்தான் சாலீமுடைய அரசாட்சிக்குட்பட்டிருந்த ஆமதுநகர ராஜ்யத்திற்கு அருகில் ரஜபுத்திர ராஜ்யம் ஒன்றிருந்தது. அதை ஆண்டு வந்த ரஜபுத்திர அரசன் சுல்தானுடைய ஆடம்பரங்களையும் உல்லாசங்களையும்கண்டு, அவரைத் தோற்கடிப்பது சுலபமெனத் தெளிந்து, ஆமதுநகரத்தின்மேல் படையெடுத்து வந்தான். இவ்விரண்டு அரசர்களும் கடும்போர் புரிந்தனர். அந்தப் போரில் சுல்தான் ஜயமடைந்து, ரஜபுத்திர அரசனைத் தமக்குக் கப்பம் கட்டும்படி செய்தார். மேலும் ரஜபுத்திரர் பக்கத்தில் முதன்மையாயிருந்து போரை நடத்தினவர்களை அவர் சிறையாக்கித் தமது நகருக்குக் கொண்டுவந்தனர். அந் நகரவாசிகள் அழகுக்கு அழகு செய்வதுபோல் பலவித தோரணங்களாலும் மலர் மாலைகளினாலும் நகரை அலங்கரித்து, வாத்திய கோஷங்களுடன் வெற்றிமாலை யணிந்துவரும் தங்களுடைய அரசரை எதிர்கொண்டு அழைத்தனர். சுல்தான், தமது குடிகளில் பெரும்பான்மையோர் ரஜபுத்திர இந்துக்களாயிருந்தும், தம்மிடத்தில் பாராட்டிவரும் அன்பிற்காக அகமகிழ்ந்து அவர்களுக்கு ஆசிகூறி தன் அரண் மனையை அடைந்தார்.

அக்காலத்தில் போரில் சிறைப்பட்டவர்களைக் கொலை புரிவதே வழக்கம். அவ்வழக்கத்தின்படி தாம் போரில் சிறையாக்கிக் கொணர்ந்த ரஜபுத்திர வீரரைக் கொல்லுவதற்காக ஒரு நாளைக் குறிப்பிட்டிருந்தார். தமது குடிகள்

பெரும்பாலும் ரஜபுத்திரராகையால், அவர்களுக்கு மனக் கிலேசத்தை உண்டாக்கக் கூடாதென்று எண்ணி, இக் கொலைத்தொழிலானது தமது முன்னிலையில் அதிக இரகசியமாய் நடைபெறவேண்டும் என்று ஆஞ்ஞாபித்தார். அக் கட்டளையின்படி குறிக்கப்பட்ட தினத்தில் கைதிகளைக் கொண்டுவந்து அவர் முன்னிலையில் நிறுத்தினார்கள். கொலையாளியும் உருவிய வாளுடன் சுல்தான்முன் தலைவணங்கி நின்றான். அவ்வீரர்களோ, எல்லாவற்றையும் ஆக்கிக் காத்து அழிக்கவல்ல முழுமுதற் பொருளைத் தங்களுடைய உள்ளத்தில் சிறிது நேரம் தியானித்தனர்; சிறிது நேரம் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு கண்ணீர் சொரிந்தனர்; தங்களுடைய உற்றார் உறவினரையும் தேசத்தையும் நினைத்துச் சிறிது நேரம் உள்ளம் உருகினர். பின்பு, சிறிது நேரத்திற்குள் தங்களுடைய மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சாலீமுடைய இஷ்டத்திற்குத் தங்களை ஒப்பித்தனர். உத்திரவும் அளிக்கப்பட்டது. கொலையாளி தனது கொடியதொழிலை ஆரம்பித்தான். ரஜ புத்திர வீரரில் இருவர் சிரச்சேதம் செய்யப்பட்டனர். மூன்றாம் வீரனை வெட்டுவதற்காகக் கொலையாளி தனது வாளை ஓங்கினான். திடீரென்று சுல்தான், 'அடா சேவகா, பொறு, பொறு, சற்றுப் பொறு' என்று சொல்லிக்கொண்டே, தமது ஆசனத்திலிருந்து ஓடி வந்து, ஒருகையினால் கொலையாளி ஓங்கிய கரத்தைத் தடுத்து, மற்றொரு கையில் தலை கவிழ்ந்திருக்கும் வீரனது கரத்தைப்பிடித்து அவனைத் தூக்கி, 'இவனைக் கொலைபுரிய எனக்கு மனம் வரவில்லை; இவனது முகச்சாயலை நோக்குங்கால் அநேக வருஷங்களுக்கு முன் காணாமற்போன என் சகோதரனை ஒத்

திருக்கின்றான். ஆதலால், இவனைக் கொலைசெய்ய எனக்கு மனமில்லை' என்று சொல்லி, அவ் வீரனை அழைத்துக் கொண்டு மற்றோரிடம் சென்றடைந்தார். அடைந்ததும் சுல்தான் அவ்வீரனை நோக்கி, 'நீயார்? எந்த ஊர்? உன் வரலாறு என்ன?' என்று பலவாறு வினவலானார். அந்த ரஜபுத்திரவீரன் அக்கேள்விகளுக்குத் தக்கவாறு மறுமொழி கூறி, தனக்கு உயிர் தந்த தாதாவைப் பெரிதும் புகழ்ந்து வாழ்த்தி, விடைபெற்று வெளியே சென்றான்.

இவன்தான் பிரதாப்சிங். இவன்தான் ரமணியைத் தீயினின்றும் இரட்சித்தவன். பிறருக்குத் தீமைபுரிபவர் அதமர் என்றும், தீமைபுரியாது இருப்பவர் மத்திமர் என்றும், நன்மை புரிபவர் உத்தமர் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால், பிரதாப்சிங் என்பவனோ தீமை புரிபவருக்கும் நன்மைபுரியும் உத்தம குணத்தையுடைய ஒரு ரஜபுத்திர வீரன். இவன் அதிக பராக்கிரமம் வாய்ந்தவன், சௌந்தரியவான், மங்கையர்பால் மதிப்பும் மாண்பும் உடையவன்; பலசொல்லி என், எல்லா நல்லொழுக்கங்களும் இவனிடத்தில் குடிகொண்டிருந்தன. சுல்தான் அளித்த பொருளைக்கொண்டு பிரதாப்சிங் ஆமது நகரிலேயே சிலநாள் வாசம் செய்தான். புத்தமதத்து உத்தமரான புருஷோத்தமரது மாளிகை தீப் பற்றியதால் நகரமுற்றிலும் திரண்டுபோவதைக் கண்ட இவனும் அவர்களுடன் அவ்விடத்தை அடைந்தான். அம்மாளிகையை வீரன் அடைந்திராவிடில் நமது கதை இதனோடு முடிவு பெற்றிருக்கும். இவ்வுலகில் இவனைப்போன்ற இனிய குணங்களுடையவர் ஒருவருமிலர் என்று அந்நகரம் மெச்சும்படி தனது இன்னு

யிரைப் பொருட்படுத்ாது புருஷோத்தமரது புதல்வியின் உயிரைக் காப்பாற்றினுன். மாளிகை தீப்பற்றிய அன்றிரவு சம்யுக்தை, ரமணி உயிர் தப்பிய விதத்தைக் கேட்டு அவளை இரட்சித்தவன் யாவன் என்று அறியும் பொருட்டு வெள்ளுடை தரித்தவனைத் தேடிக்கொண்டு வெளியே செல்வாளாயினள்.

---

## 5. புருஷோத்தமர் நகரடைதல்

புருஷோத்தமர் தமது புதல்வியாகிய ரமணிக்கு ஆபரணங்கள் கொள்ளும்பொருட்டு வெளியே சென்றிருந்தனர் என நாம் முன்னரே தெரிவித்தோம். அவ்வணிகளை அடையப் பல விடங்களுக்குச் சென்றிருந்தமையாலும், சென்ற விடங்களிலுள்ள புத்தமடாலயங்களைத் தரிசித்து வந்தமையாலும் அவர் தாம் குறித்த காலத்தில் வரக் கூடவில்லை. ரமணி தனது பிதாவைக் காணுமல் ஏக்கமுற்றிருந்தனள். அவள் சில வேளைகளில் உப்பரிகையிலுள்ள சாளரமொன்றை யடைந்து தன் பிதா வரும் வழியையே பார்த்துக்கொண்டிருந்தாள். சிலவேளைகளில் சிறிது தூரம் போய்ப் பார்த்துவர அவள் சம்யுக்தையை அனுப்பினுள். இப்படி ஒருநாள் சம்யுக்தை ரமணியால் அனுப்பப் பெற்று வெளியேசென்றிருக்கும்போது, தொலை தூரத்தில் ஒரு வண்டி அதிவேகமாய் ஆமது நகரைநோக்கி வருவதைக்கண்டாள். அவ் வண்டி கிட்டினவுடன், வருபவர் புருஷோத்தமர்தான் எனத்தெளிந்து, அவரை யெதிர்கொண்டழைக்குமாறு விரைந்து சென்று தலைகுனிந்து நமஸ்கரித்து அவரது வருகைக்கு அதிக காலம் சென்ற காரணத்தைப் பணிவுடன் வினவினுள்.

புருஷோத்தமர்: — அம்மா, நான் பலவிடங்களுக்குச்சென்று ஆபரணங்களைக் கொண்டதுமன்றி வரும்வழியிலுள்ள பல க்ஷேத்திரங்களையும் பல மடாலயங்களையும் தரிசித்து வந்தேன். ஆதலால், குறித்த தினத்தில் வரக்கூடவில்லை. அஃதிருக்கட்டும், என் கண்மணி ரமணி க்ஷேமமா யிருக்கின்றாளா? உன்னை அடிக்கடி தொந்தரவு செய்யும் தலைவலி எப்படி இருக்கிறது? நமது வேலைக்காரர்களும் அயலகத்தாரும் சௌக்கியமாயிருக்கின்றனரா?

சம்யுக்தை:—ஐயனே, குழந்தை க்ஷேமமாயிருக்கின்றாள். நானும், வேலைக்காரர்களும் இன்னும் மற்றவர்களும் க்ஷேமம்தான், ஆயினும்......

புருஷோத்தமர்:—சம்யுக்தா, சொல்வதைச் சீக்கிரம் சொல், தாமதமேன்? ஆயினும்...என்ன நேர்ந்திருக்கிறது?

சம்யுக்தை:—கெடுதியொன்றும் நேரவில்லை. மாளிகையின் பின்புறத்தில் தீப்பற்றியது. விபத்து விளையும் முன்னமே எல்லாரும் வந்து தீயை அணைத்துவிட்டனர்.

புருஷோத்தமர்:—ஆ, தீயா பற்றியது! இருக்கட்டும். அவன் அநுமதியின்றி ஓரணுவும் அசையாது. விபத்து ஒன்றும் விளையாதது விமலன் கருணையே.

சம்யுக்தை:—விமலன்கருணையேயன்றி வேறொன்றும்இல்லை. ஐயனே, ரமணி தீயினின்றும் தப்பினது தங்களுடைய தவப்பயனே யாகும்.

புருஷோத்தமர்:—சம்யுக்தா, என் செல்வப் புதல்வியா தீயினில் மாளவிருந்தனள். ஆ, ஈசா! எல்லாம் உன்

னுடைய செயலே. நின் பாதமே தஞ்சமென்றிருக்கும் தொண்டருக்கு நீ காட்டும் அன்பே அன்பு. இவ்வாறாகப் புருஷோத்தமர் கடவுளது கருணையை வியந்து அவரைத் தமது உள்ளத்தில் துதித்துக் கொண்டே மாளிகையை அடைந்தனர்.

பூங்கொம்போ, பவளக்கொடியோ இங்கு நின்றிருப்பது எனக் கண்டோர் வியக்குமாறு ரமணி உப்பரிகையின் சாளரத்தில் நின்றுகொண்டு தனது பிதா வரும் வழியையே வெகுநேரம் இமைகொட்டாமல் நோக்கிக்கொண்டிருந்தாள். அவர் வரவைக்கண்டமாத்திரத்தில் சடுதியில் உப்பரிகையை விட்டு இறங்கி, அவரை எதிர்கொண்டழைக்க ஓடினாள். ஓடி அடைந்ததும், அவள் அவரது கழுத்தைக் கட்டிக்கொண்டு தன்னை நெடுநாள் பிரிந்திருந்ததற்குக் காரணம் என்னவென்று வினவினாள். புருஷோத்தமரோ தமது செல்வப் புதல்வியை இருகரங்களினாலும் தழுவி முத்தமிட்டுத் தன் புதல்வியைத் தீயினில் மாளவைக்காது உயிருடன் காணும்படி செய்த கடவுளின் கிருபையைச் சிந்தித்து சிறிது நேரம் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

'ஓ கருணைவாரியே, உன்றன் கருணைப் பெருக்கத்தை யான் என்னவென்று நவில்வேன். பாவியேன் செல்வப் புதல்வியைத் தீயினால் அழிக்காது காத்தனையே!'

'ஏ பரம்பொருளே, இதற்குப் பிரதியுபகாரமாக நினக்கு யான் என் செய்யவல்லேன்' என்று பலவாறு புருஷோத்தமர் எம்பிரானைத் துதித்துக்கொண்டே, ரமணியை ஒரு கரத்தில் அணைத்துப் பற்றியவராய் மாளிகைக்குள் சென்றனர். போஜனமருந்தியபின் ஆசனத்தில் அமர்ந்து,

ரமணியைத் தமக்கருகில் அமர்த்தி, மாளிகையில் தீப்பற்றி யதையும் தம்புதல்வி தீயினின்றும் தப்பின வரலாற்றையும் விவரமாய்த் தமக்குத் தெரிவிக்கும்படி சம்யுக்தையைக் கேட்டனர். நடந்த செய்திகளை ஆதியோடந்தமாக சம்யுக்தை சொல்லியபின்பு, அம்மூவரும் பின்வருமாறு சம்பாஷித்துக்கொண்டிருந்தனர்.

**புருஷோத்தமர்** :—சம்யுக்தா, என் கண்மணியைத் தீயினின்றுங் காப்பாற்றிய அவ்வெள்ளுடை தரித்த வாலிபன் யார்? அவனெங்கே?

**சம்யுக்தை** :— ஐயனே, அவ்வாலிபன் எவனென்று அறியுமாறு சில நாட்களாய் நான் அலைந்துகொண்டிருந்தேன். அவனை நான் காணவில்லையாயினும், வெள்ளுடைதரித்த வாலிபன் ஒரு ரஜபுத்திர வீரனென்றும் கொஞ்சகாலத்திற்கு முன் நடைபெற்ற போரில் சிறையாக்கப்பட்டுச் சுல்தானது கருணையால் இந்நகரில் உயிர்வாழ்ந் திருக்கிறனென்றும் நம் நகரவாசிகள் கூறுகின்றனர்.

**புருஷோத்தமர்** :—சம்யுக்தா, அவனது இருப்பிடம் எங்கென்று உணர்ந்தனையா? அவனைக்கண்டு என் காணிக்கையை அவன்பால் செலுத்துமாறு அவாவுகின்றேன்.

**சம்யக்தை**—அவனதிருப்பிடம் தெரியவில்லை. அவன் வந்ததும், ரமணியைத் தீயினின்று தப்புவித்ததும், உடனே அகன்றதும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றன. அவன் எங்குச் சென்று மறைந்தனனோ, எங்கிருக்கின்றானோ எவரும் அறியார்.

இதைக் கேள்வியுற்ற புருஷோத்தமர் அவ்வீரனை எவ் விதத்திலாவது தேடி அடைந்து, அவனுக்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்யுமாறு தீர்மானித்தனர்.

## 6. வீரன் அசௌக்கியமுற் றிருத்தல்.

மறுநாள் புருஷோத்தமர் சம்யுக்தையை யழைத்து, 'சம்யுக்தா, அவ்வீரன் எங்கிருக்கின்றனன் என்பதைத் தெரிந்து வருகின்றனையா? அவனது உதவியின்றி என் புதல்வி பிழைத்திருப்பது அரிதாதலின், அவனைக் காணு திருக்க என்னால் முடியவில்லை. ஆதலால், யான் எவ்விதத்தி லாவது அவனிருப்பிடத்தைக் கண்டடைய வேண்டும், இல்லையாயின் என்னைவிட நன்றியறிவற்றவர் ஒருவருமிரார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு"

என்ற நீதிநெறியின்படியே, யான் நிர்ப்பாக்கிய முள்ளவனு வேன் என்பது திண்ணம். சம்யுக்தா, யான் என் மனை வியை இழந்த நாள் முதல் இன்றளவும் நீ என் சகோ தரியைப்போல இருந்து, என்னையும் என் அருமைப் புதல் வியையும் சம்ரக்ஷணை செய்துகொண்டு வருகின்றமையால் என் வேண்டுகோளுக்கிணங்கி எனக்கோர் உபகாரம் செய் வாய் என்று நினைக்கிறேன். அஃதென்னவெனில், யான் அந்த ரஜபுத்திரவீரனைக் காணும்படி நீ உதவி புரிவதே' என்று சொன்னார். அதுகேட்டுச் சம்யுக்தை, 'அப்படி யானால், அவனது இருப்பிடத்தை யறியும் பொருட்டு யான் முதலில் சென்று பார்த்து வருகின்றேன்' என்று சொல்லி விடைபெற்று வெளியே சென்றாள்.

ஆமது நகரம் ஒரு சிறு நகரமன்று. அங்கே அநேகம் பெரிய வீதிகளும், சிறிய சந்துகளும் நிறைந்திருந்தன. ஒவ்வொரு வீதியிலும் நூற்றுக்கணக்கான வீடுகளிருந்தன. பாவம், சம்யுக்தை என்ன செய்வாள்! வீதிதோறும் சென்றாள். வீடுதோறும் நுழைந்தாள். ஆங்குள்ள அன்ன தான சாலைகளையும் சத்திரம் சாவடிகளையும் போய்ப் பார்த்தாள்; வீரனைக் கண்டாளில்லை. வழியில் நேர்ப் பட்டார் யாவரையும் வினவினள். 'இந்நகரில் எங்கிருக்கின்றனன் ரஜபுத்திர வீரன்?' என்றான் ஒருவன். 'சீ! சீ! உனக்கென்ன கண் தெரியவில்லையா? அவசரமாய்ப் போகும்போதுதானா கேள்வி கேட்கிறது' என்றான் இன்னொருவன். 'என்னடி புத்தியில்லாதவளே, வீரன் எங்கிருக்கிறான் என்று பார்ப்பதுதானா என் வேலை. அந்த வீதியில் வினவினபோது, "எனக்கொன்றும் தெரியாது" என்று சொன்னேனே, மறுமுறையும் இந்த வீதியிற்கண்டு என்னை வினவுகிறாயே. இன்னொரு முறை என்னை எங்கே யாவது கண்டு வினவுவாயாகில் தாடைமேல் அறைவேன் என்று நினைத்துக்கொள்' என்றான் சோம்பித்திரியும் சோணாசலம் என்பவன் ஒருவன்.

'மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்'

என்றபடி, சம்யுக்தை இந்தக் கஷ்டங்களை யெல்லாம் சகித்துக்கொண்டு வீரனைக் கண்டடைவதிலேயே கண்ணும் கருத்துமுள்ளவளாய்ப் பல வழிகளிலும், மற்றும் பல இடங்களிலும் தேடிக்கொண்டே சென்றனள். மாளிகையைவிட்டுப்

புறப்பட்டு வெகு நேரமாகிவிட்டது. சம்யுக்தையினது கால்களும் சோர்வுற்றன; ஆயினும், 'அவனைக் காணாது நாம் திரும்புவோமாகில் புருஷோத்தமர் மனவேதனை கொள்வரே, அதற்கு நாம் என் செய்வது' என்று சொல்லி, அவள் வீரனைத் தேடுவதை விட்டொழித்தாள் அல்லள். சிறிதுநேரம் தேடிய பின்பு, நடையின் கடூரத்தால் அவளது உடல் கொதிப்புற்றமையால், 'மறுமுறை நாளை வந்து அவனைத் தேடி யடைவோம்' என்று சொல்லித் தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு, சம்யுக்தை மாளிகைக்குத் திரும்புவாளாயினள். திரும்புகையில் சம்யுக்தை, களைப்புற்று ஒரு மரத்தடியில் சிறிதுநேரம் உட்கார்ந்தாள் அப்பொழுது ஆண்டி ஒருவன் அவ்வழியே சென்றான். அவனை நோக்கி சம்யுக்தை, 'ஐய, வெள்ளுடை தரித்த ஒரு ரஜபுத்திரவீரனை நீர் எங்கேயாவது கண்டதுண்டா?' என்று கேட்டாள். அதைக்கேட்ட அந்த ஆண்டி, நின்று சற்று நிதானித்து, 'ஆம் அம்மணி, வெள்ளுடை தரித்த சுந்தரன் ஒருவன் ஆங்கிருக்கும் ஒரு சத்திரத்தில் வியாதியால் பீடிக்கப்பட்டுக் கிடக்கின்றான். நீ என் பின்னே வருவாயாகில், அவனிருக்கும் இடத்தைக் காண்பிக்கிறேன்' என்று பட்சத்தோடு மறுமொழி பகர்ந்தான். இதைக் கேள்வியுற்ற சம்யுக்தை புதிய பலம் பெற்றவளாய் உடனே எழுந்திருந்து ஆண்டியைநோக்கி, 'ஐயனே, வந்தனம்; இந்த க்ஷணமே உம்மை யான் பின்பற்றி வருகிறேன்' என்று சொல்லி, அவன்பின் சென்றாள். சத்திரம் அவர்கள் கண்ணுக்குத் தோன்றினதும், ஆண்டி, சம்யுக்தைக்கு அதைத் தன் விரலால் சுட்டிக்காட்டி விடைபெற்று விலகினான். சம்யுக்தை அதிக ஆவலுடன் சத்திரத்தின் உள்ளே சென்றாள். சென்றதும், விசாலமான கூடத்

தின் ஒரு புறத்தில் கம்பளத்தின்மீது படுத்து அயர்ந்து நித்திரை செய்யும் வெள்ளுடைதரித்த வாலிபன் ஒருவனைக் கண்ணுற்ருள். அவனது இரு கால்களும் அதிகமாய்க் கொப்புளித்திருந்தன. அவ்வேதனையினல் அசௌக்கியமுற்ற அவ்வீரன் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தான். 'அந்தோ! என்ன பரிதாபம்! இந்தப் பரோபகாரிக்கு இப்படிப்பட்ட நிலைமை வந்துற்றதே! இவனது உடம்பில் கொப்புளங்கள் உண்டாவானேன்? இவன் வியாதியால் பீடிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? ஒருவேளை சரீர பராமரிப்பு இல்லாததினலோ! அல்லது, அந்நிய நகரவாசியாகிய இவனுக்கு இந்நகரின் சீதோஷ்ண ஸ்திதி ஒத்துக் கொள்ளாமையினலோ! அல்லது, ரமணியைத் தீயினின்றும் தப்புவித்த காலத்தில் அத் தீயின் கொடுமை இவனது சரீரத்தில் தாக்கியதினலோ! ஏதும் தெரிந்திலது. ஐயோ! பாவம், உதவி செய்வார் ஒருவருமில்லைபோல் தோன்றுகிறது. இவனே இப்பொழுது அயர்ந்து நித்திரை செய்கிறுன். இவனது இருப்பிடத்தையும் நாம் கண்டுகொண்டோம். இனி இங்கு நாம் தாமதியாமல், உடனே புருஷோத்தமரிடம் சென்று எல்லாவற்றையும் சொல்லுவோம்' என்று சம்யுக்தை தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, அவ்விடத்திருந்து புறப்பட்டு மாளிகைக்குத் திரும்பிச் செல்வாளாயினள்.

வீரனது இருப்பிடத்தையும் அவனது அசௌக்கியத்தையும் சம்யுக்தையின் மூலமாய்க்கேள்வியுற்ற புருஷோத்தமர், 'ஆ! இதென்ன பரிதாபம். அப் பரோபகாரி உதவியற்று கிடக்கின்றுன்! அவனை நாம் நம்மிடம் கொணர்ந்து ஆதரிக்காவிடில் நம்செய்கை, செய்ந்நன்றி கொன்ற தீமையின்

பாற்படுமே!' என்று சொல்லி, அவனை அழைத்து வருமாறு உடனே புறப்பட்டனர். அவர் போனபின்பு சம்யுக்தையும் ரமணியும் பின்வருமாறு வீரனைப்பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

**ரமணி** :-அம்மா சம்யுக்தா, என்னைத் தீயினின்று தப்புவித்த அவ்வுத்தம புருஷர் அசௌக்கியமுற்றிருப்பதற்குக் காரணம் என்ன? அவரது சரீரம் ஏன் கொப்புளங்களால் பீடிக்கப்பட் டிருக்கிறது?

**சம்யுக்தை** :—ரமணி, என்ன காரணமோ எனக்கும் தெரியவில்லை. அவ்வீரன் தனது தேகத்தை நன்றுய் அபிமானிக்காதிருந்ததனுலோ! அல்லது, இந்நகரின் உஷ்ணம் ஒத்துக்கொள்ளாமையினுலோ! அல்லது, என் கண்மணி, உன்னை அக்கொடிய தீயினின்று ரக்ஷித்தபொழுது அத் தீ அவனது தேகத்தில் தாக்கியதினுலோ, என்னவோ எனக்கொன்றும் புலப்படவில்லை.

**ரமணி** :—அம்மணி, அவரது தேக அசௌக்கியத்திற்குக் காரணம் என்னவென்று இப்பொழுதுதான் அறியலானேன். என் நிமித்தமாகவே அவர் வியாதியாயிருக்கிறுர் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. தீயின் கொடுமையினுலேயே கொப்புளங்கள் உண்டாயிருக்க வேண்டும்.

**சம்யுக்தை** :—ஆம், ஆம், அதுதான் காரணமாயிருக்கும். பாவம், உதவிசெய்வார் ஒருவருமின்றி அவர் அசௌக்கியமுற்றிருத்தல் மிகவும் பரிதாபம்.

**ரமணி** :—நம்மை விபத்தின்று விலக்கியவர்களை ஆதரிப்பது நமது கடமையல்லவா. நன்மை கடைப்பிடித்தலில்

கருத்துடைய என் பிதா அவ்வுத்தமருக்குத் தகுந்த உபசாரம் செய்வார் என்று நான் நினைக்கிறேன்.

சம்யுக்தை:—'கண்மணி, அதற்குச் சந்தேகமுண்டா. அவ் வீரன் நம் மாளிகையில் தங்கியிருப்பதற்குச் சில ஏற்பாடுகள் செய்யவேண்டும்' என்று சொல்லிவிட்டு ரமணியைவிட் டகன்றனள். ரமணியின் மனமானது தன்னைக் காப்பாற்றினவனைப் பற்றிய கவலை யுற்ற தாய்த் தாமரையிலைமேற்பட்ட தண்ணீர்த் துளிபோல் தத்தளித்துக்கொண்டிருந்தது.

இது இவ்வாறாக, புருஷோத்தமர், ரஜபுத்திரவீரனது இருப்பிடத்தை யடைந்து, அவன் அயர்ந்து நித்திரை செய்யக் கண்டனர். நித்திரை செய்பவனைத் தொந்தரவு செய்யலாகாதென்று கருதி அவர் அவனருகில் அமைதி யுடன் அமர்ந்து பின்வருமாறு தமக்குள்ளே சொல்லிக் கொண்டனர்.

'ஆ, என்ன விபரீதம்! பரோபகாரி இப்பாடுபடலா மோ! ஓ பரமேசுவரா, கிருபாநிதி, அடியேனுடைய செல்வப் புதல்வி ரமணியைத் தீயினின்று இரட்சித்த இவ் வுத்தமன் கொப்புளங்களால் வருந்துவது ஏற்றதாமோ? எல்லா நல்லொழுக்கங்களும் குடிகொண்டிருக்கும் இவனது தேகம் பார்வைக்கு விகாரமாயும் துர்க்கந்தம் வீசுவதாயுமுள்ள புண் களுக்கு இடமாகலாமோ? நன்மை புரிவதிலேயே நோக்கம் கொண்டிருக்கும் இவனது மனம் கிலேச முறலாமோ? பராம ரிப்பவரின்றி இச் சத்திரத்தில் இவன் பதங்குலைந்திருக்கின் றனனே, ஐயோ பாவம்! இங்குள்ள ஆண்டிகளெல்லாம் அன்னத்திற்கு வெளியே சென்றமையால் இவ் வீரன் தனி

மையாயிருந்து தவிக்கின்றனன். பல்லாண்டுகளாய் இவ்விடத்தில் வாசம் செய்யும் வௌவால்களின் துர் நாற்றம், நோயாளி சுவாசிக்கத்தக்க தல்லவே. இன்றைக்கோ நாளைக்கோ இடியும் என்று எதிர் பார்க்கத்தக்க இப் பாழ் மண்டபம், மனித சஞ்சாரத்திற்கு உரியதாகுமோ? இவ் வாலிபனை உற்று நோக்குங்கால் உயர்குலத்தில் உதித்தவன் போல் காண்கிறான். சூரியனது சுடருக்குமுன் விளக்கினது ஒளி எதிர்நிற்க முடியாததுபோல் அழகில் மன்மதனும் இவனுக்கு ஒப்பாகமாட்டான் என்பது உறுதி' என இவ் வாறு புருஷோத்தமர் தமக்குள்ளே சொல்லிக்கொண்டிருக் கும்பொழுது, வீரன் திடுக்கிட்டு விழித்து, தனக்கருகில் யாரோ ஒருவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, 'ஐயா, நீர் யார்? அடியேனை நாடிவந்து, இங்ஙனம் அமர்ந்திருக்கும் காரணமென்ன?' என்று மெல்லிய குரலோடு மிக்க பணி வுடன் புருஷோத்தமரை வினவினான்.

'அப்பா, ஜீவகோடிகளனைத்தையும் படைத்துப் பாதுகாக்கும் பரம்பொருள் ஒன்று உளதே, அது உன்னை ஆதரிக்குமாறு என்னை உன்பால் அனுப்பியுளது. ஆதலால், தடை யொன்றும் சொல்லாமல் எழுந்து எனதிருப்பிடம் வருவாய்' என்று புருஷோத்தமர் பகர்ந்தனர்.

**வீரன்:**—ஐயனே, என்னால் உமக்குக் கஷ்டம் எதற்கு? அவரவர் முற்பிறப்பில் செய்த புண்ணிய பாவங்களுக் குத் தக்கபடி யல்லவா இப்பிறப்பில் பலனடைகிறார் கள். ஆதலால், நான் முற்பிறப்பில் என்ன பாவம் செய்தேனோ! இப்போது இவ்வாறு வருத்த மடைந் திருக்க ஈசன் என் தலையில் விதித்தான்.

புருஷோத்தமர் :—ஓ உத்தமகுணாளா, நீ யார்? உன் பெற்றோர் யாவர்? உன் பதி யெது? நீ இங்ஙனம் வந்து தனித்திருப்பதற்குக் காரணமென்ன?

வீரன் :—ஐயனே, யான் ஒரு பரதேசி, என்பெயர் பிரதாப் சிங்; என் பெற்றோர், சில வருஷங்களுக்குமுன் இறந்துவிட்டனர். எனக்கு உறவினரும் இல்லை. வயிற்றுப் பிழைப்புக்கு யான் சேனையில் அமர்ந்தேன். யுத்தத்தில் சிறையாக்கப்பட்டு இந்நகரத்திற்கு வரலானேன். சுல்தானுடைய கிருபையால் நான் கொல்லப்படாமல் இன்னும் உயிர்பெற்றிருக்கிறேன். என்னைவிட தௌர்ப்பாக்கியமுற்றவன் இவ்வுலகில் ஒருவருமில்லை.

புருஷோத்தமர் :—'அப்பா, நீ ஒன்றுக்கும் கவலைப் படவேண்டாம். நான் உன்னை என் மகன்போல் பாவிப்பேன். எழுந்து என்னுடன் வா' என்று சொல்லி, அவனைத் தூக்கிச் சிறிது தூரம் நடத்திக் கொண்டு வந்து, பின்பு அவனை ஒரு வண்டியில் அமர்த்தி மாளிகையை யடையலானார்.

மாளிகையில் அவனுக்கென்று அறை யொன்றை வேலைக்காரர்கள் நன்றாய்ச் சுத்தம் செய்துவைத்தார்கள். அவ்விடத்தில் மிருதுவான மெத்தையுள்ள கட்டிலொன்று இடப்பட்டது. நோயாளி மகிழ்ச்சியோடு காலம் கழிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வண்டியும் மாளிகைக்கு அருகில் வந்தது. சூரியனது வரவை யெதிர்நோக்கும் தாமரை மலர்போல் ரமணி சாளரத்தின் வழியாய் வீரனது வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். புருஷோத்தமர் வீரனுக்குக் கைலாகளித்து உள்ளே அழைத்துச் சென்ற

னர். அவனுக்கென்று பலவித சௌகர்யங்களுடன் ஏற்படுத்தப்பட் டிருக்கும் அறைக்கு அவனைக்கொண்டுபோய் மெத்தையின்மீது படுக்க வைத்தார். ரண வைத்தியத்தில் முற்றிலும் தேர்ச்சிபெற்ற வைத்தியன் ஒருவனை உடனே அழைத்து வர வேலையாட்களுக்குக் கட்டளை யளித்தார். 'ஆ, இஃதென்ன ஆச்சரியம், தீப் பற்றியது இம்மாளிகை யல்லவா?' என்று வியப்புற்ற வீரன் படுக்கையிலிருந்தான்.

## 7. ரமணியின் மனநிலை

பொழுது விடிந்தது. பரந்த பூமியிலுள்ள அந்தகாரமானது நீங்கும்படி வெய்யோன் கிழக்கில் உதித்தான். ஆமதுநகரவாசிகள் யாவரும் நித்திரையை விட்டெழுந்து காலக்கடன்களைச் செய்யத் தொடங்கினர். பட்சிகள் ஒய்யாரமாகப் பாடிக்கொண்டு தங்கள் இருப்பிடங்களை விட்டுப் பறக்கலாயின. கொடிபோன்ற இடையை யுடைய மங்கையர் அதிகாலையில் குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணீர் கொண்டுவரத் தடாகத்தை யடைந்தனர். கைகளை வீசிக்கொண்டு அவர்கள் நடக்கும் நடையினது ஒயிலை நாம் என்னென்று சொல்லுவது! கீரியைக் கண்ட பாம்பு பதுங்குவதுபோல், சூரியனைக் கண்டு மேகங்கள் சிதறிப் போயின.

ரமணி அதிகாலையில் படுக்கையை விட்டெழுந்து சிங்கார வனத்தை யடையலானாள். அன்று பூத்திருக்கும் புஷ்பங்களின் பரிமளம் எத்திசையிலும் பரவி நின்றது.

மலர்களிலுள்ள மதுவை யருந்த தேனீக்கள் அவைகளைச் சுற்றிலும் மொய்த்துக்கொண்டு ரீங்காரம் செய்தன. மது வுண்டு மதங்கொண்ட சில வண்டுகள் ரமணியினது முகம் செந்தாமரை மலரோ என எண்ணித் தியங்கலாயின. கணவனது வரவை முகமலர்ச்சியோடு எதிர்நோக்கும் பத்தினிபோல் தடாகத்திலுள்ள தாமரை மலர்கள் சூரியனைக்கண்டு மகிழ்வுடன் மலர்ந்து நின்றன. இதைக் கண்ணுற்றாள் ரமணி, 'ஆஹா, தாமரையானது சூரியன்மேல் எவ்வளவு காதல் கொண்டிருக்கிறது! கணவனைக் கண்டு களிப்புறும் காதலிபோல் இரவியைக் கண்டு இது இன்புறுகின்றதே!' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். உடனே வீரனைப் பற்றிய எண்ணம் அவள் மனத்தில் தோன்றிற்று; பெருமூச் செறிந்தாள். செந்தாமரையை நாணச் செய்கின்ற அவளது முகம் வாடலுற்றது. சோர் வடைந்தாள். சிங்கார வனத்தைவிட்டு மாளிகைக்கேகினாள். இதற்கெல்லாம் காரணமென்ன? வீரனது குணாதிசயங்களையும் அழகையும் கண்ட ரமணி இப்பேர்ப்பட்ட உத்தமனைத் தனக்கு நாதனைப் பெறவேண்டுமென்ற எண்ணத்தால் அன்று முழுவதும் அவனையே இடைவிடாது நினைத்துக் கொண்டிருந்தாள். தான் விரும்பிய பொருளை யடைவது எவ்விதம் என்று சிந்தித்துப் பெருமூச்செறிந்தாள். அவளது மனோதுக்கத்தை யறிந்து அவளை ஆற்றித் தேற்றுவார் ஒருவரும் இலர். அவளுடைய மனநிலைமையை அறியப் பிறர் வல்லவர்களாய் இருந்தாலல்லவோ அவளைத் தேற்ற முயலுவர். சகல ஜீவகோடிகளுக்குள்ளும் அந்தர்யாமியாய் விளங்கா நிற்கும் விமலன் ஒருவனன்றி அவளது நிலையையறியவல்லவர் எவர்? வீரனே அதை அறிந்தா னில்லையானால் பிறர்

அறிந்து அவளைத் தேற்றுவதால்தான் யாதுபிரயோஜனம்? ரமணி, நாணத்தால் சம்யுக்தையிடத்திலும் இதைச் சொல்லாமல், பகல் முழுவதும் நினைந்து நினைந்து உள்ளம் உருகினாள்.

இரவி மேற்குதிசையை யடைந்தனன். இரவும் வந்தது. ரமணியினது மனத்தைத் தன் வெப்பத்தினால் பாதிப்பது நன்றல்லவென்று சூரியன் விரைவில் மறைந்தனன் போலும். நகரவாசிகள் யாவரும் மனக்கிலேசம் கிஞ்சித்துமில்லாமல் நித்திரை போயினர். எங்கும் அமைதியா யிருந்தது. ஆனால், ரமணிக்கு அன்றிரவு கண்ணுறக்கமில்லை; அவள் துன்பமுற்று வருந்தினாள். உடல் வாடி, உயிர் சோர்வுற்று, மெல்லிய பூவிதழ்களாலாகிய பாயலானது தனதுடல் வெப்பத்தினால் கருகும்படி அதன்மேல் படுத்தாள். கண்ணிமைகளைத் தன் இரு கரங்களினாலும் இறுகப் பொத்தினாள். தூக்கம் வரவில்லை. கண்ணுறக்க மில்லாததினால் கலக்கமுற்றிருந்தனள். வீரனைப்பற்றிக் கவலையுற்றவளாய் ரமணி தன் மெத்தையின்மீது படுத்துக்கொண்டு பின்வருமாறு சிந்திக்கலானாள்.

'என்னைத் தீயினின்றுங் காப்பாற்றின வீரனை யான் கண்ணுற்றது முதற்கொண்டு என் மனம் அதிக கவலை யுற்றிருக்கின்றதே! அந்த வீரனது அழகிற்கேற்ப எல்லா நற்குணங்களும் அவரிடத்தில் குடிகொண் டிருக்கின்றனவே! ஆதலினால், அவரே எனக்கேற்ற மணாளர். ஒரு பெண்ணுயிர்க்காகத் தன்னுயிரையும் பாராது தத்தம்செய்த உத்தம புருஷனல்லவா அவளுடைய மணமாலைக்குரியவன்; அவனல்லவா பர்த்தாவாகப் பாத்தியதை யுடையவன். அவ்வுத்தமனைத் தவிர்த்து வேறு புருஷனைக் கணவனாக நான்

தெரிந்துகொள்வதைவிடக் கலியாண மில்லாமல் கன்னிகையா யிருத்தலே உத்தமம்' என்று ரமணி தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். ஆயினும், புருஷோத்தமருடைய சம்மதத்தினலல்லவோ அது நடைபெறவேண்டும். புத்தமதத்தரான அவர், இந்துவாகிய ரஜபுத்திர வீரனுக்குத் தமது மகளை மணம்புரியச் சம்மதம் அளிப்பாரோ? காரியம் இவ்வாறாக, ரமணியினது தீர்மானத்தினல் என்ன பிரயோசனம்? இவ் வெண்ணங்களெல்லாம் அவள் மனத்தில் தோன்றின நெருப்பில்பட்ட தளிர்போல் வாடலுற்றாள். மைதீட்டப்பெற்ற அவளுடைய கண்களிலிருந்து பெருகின நீரின் பிரவாகத்திற்கு அளவில்லை. சத்தமிட்டு அழுதால் தனது மனோதுக்கத்தை ஒருவாறு தீர்த்துக்கொள்ளலாம் என்று எண்ணினள். ஆயினும், தனது அழுகுரலைக்கேட்டு யாராவது ஓடிவந்தால் அவர்களுக்கு என்ன பதில் சொல்லுவதென்று திகைத்தாள். சத்தமிட்டு அழ வெட்கப்பட்ட ரமணி, கண்ணீர் ஆறாய்ப் பெருகப் பொருமிப் பொருமித் தனது மனோவேதனையை அதிகப்படுத்தினள். அப்போது, நிலவு பகல்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தது. சந்திரன் தன் குளிர்ச்சி பொருந்திய கிரணங்களைச் சாளரங்களின் வழியாய்ச் சயனக் கிருகத்தில் செலுத்தினன். சந்திரன் உதிக்கும் காலத்தில் கடலானது அதிகமாய்க் கொந்தளிப்பதுபோல் மங்கையருடைய மனமும் கொந்தளிப்படையும். 'ஐயோ! பாழான வெண்ணிலவே! நீயுமா என்னைத் துன்புறுத்தவேண்டும்!' என்று ரமணி அதைப் பார்த்து நிந்தித்தாள். அந்தோ, என்ன பரிதாபம்! ஆமதுநகரம் முழுவதும் அமைதலுற்றிருக்க, ரமணியினது மனம்தானு இவ்வாறு வேதனையடையவேண்டும். அழுது அழுது, அவ

னுடைய முகமும் வீங்கலுற்றது. பாயலின்மீது இடப்பெற்றிருந்த தலையணைகள் கண்ணீர்ப் பெருக்கத்தால் நனைந்து போயின. உடல் சோர்வுற்றதினால் ரமணி தன்னை அறியாமலே தூங்கிவிட்டாள்.

வீரனும் சௌகரியமாய் நித்திரை செய்தான். கட்டிலில் இடப்பெற்றிருக்கும் மிருதுவான மெத்தையானது நித்திரைக்கு வசதியாயிருந்தது. இரவிலும் வீரனுக்குப் பணிவிடை செய்யும்பொருட்டு வேலைக்காரர்கள் விழித்துக்கொண் டிருந்தார்கள். கவலையற்ற மனத்தனாய் வீரன் நித்திரை செய்தான். விழித்துக்கொண் டிருந்த வேலைக்காரர்கள் வீரனுடைய அறைக்கு வெளியில் உட்கார்ந்து கொண்டு பின்வருமாறு சம்பாஷித்துக்கொண் டிருந்தனர்.

அண்ணா, இந்த வீரன் யார்?

அப்பா, மாளிகை தீப்பற்றிய காலத்தில் ரமணியை அத் தீயினின்று காப்பாற்றின வாலிபர் இவர்தான்.

இவர் ஆமது நகரத்தில் வசிப்பவராகத் தோன்றவில்லையே! இவர் எந்த ஊர்? இவருடைய பெயர் என்ன?

இவருடைய பெயர் பிரதாப்சிங். இவர் ஒரு ரஜபுத்திரவீரராம். கொஞ்சகாலத்துக்கு முன், நமது அரசனாகிய சுல்தான் சாலீம், ஒரு ரஜபுத்திர அரசனோடு சண்டைக்குப் போனது உனக்குத் தெரியுமல்லவா? அந்தச் சண்டையில் சுல்தான் ஜயமடைந்து, அந்த ரஜபுத்திர அரசனைத் தமக்குக் கப்பம் கட்டும்படி செய்ததுமல்லாமல் எதிரி பக்கத்தில் முதன்மையா யிருந்து போரை நடத்தியவர்களைச் சிறையாக்கிக்கொண்டும் வந்தார். அவர்களில் ஒருவர் இந்தப் பிரதாப்சிங். இவர் ஒரு ரஜபுத்திர வீரர்.

அண்ணா; இவர், சுல்தானால் சிறையாக்கப் பெற்றவரா, இரார். உலகத்தில் பிராதப்சிங் என்று எத்தனையோ பேர் பெயர் வைத்திருப்பார்கள். இங்கு வியாதியாய்க் கிடக்கும் பிரதாப்சிங் வேறொருவர் போலும் ஏனென்றால், போரில் சிறைபட்டவர்களைச் சுல்தான் கொலை புரிவது வழக்க மல்லவா? மேலும், அண்ணா, இந்தப்போரில் சிறைபட்ட வர்களையும் சுல்தான் இரகசியமாய்க் கொன்று விட்டார் என்று நான் கேள்விப்பட்டேன். ஆகையால், இவர் வேறொ ருவர் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

அப்பா, நீ சொல்வதெல்லாம் வாஸ்தவந்தான். ஆயி னும் நடந்த காரியம் உனக்குத் தெரியாது. சுல்தான் எல்லா ரஜபுத்திர வீரர்களையும் கொல்லும்படி உத்தரவு செய்தது உண்மையே. ஆமது நகரத்தை ஆண்டுவரும் சுல்தான் சாலீ முக்குச் சையத் அப்துல்லா என்னும் பெயர் கொண்ட ஒரு சகோதரன் உண்டென்பதும், பல வருஷங்களுக்குமுன் வேட்டை மார்க்கமாய்ச் சென்ற அவர் இன்னும் திரும்பி வரவில்லை யென்பதுவும் இந்நகரவாசிகள் யாவரும் அறிவர். பிரதாப்சிங் என்னும் இவ் வீரன் தமது சகோதரனாகிய சையத் அப்துல்லாவின் சாயலா யிருக்கிறார் என்று சுல்தான் இவரைக் கொலைபுரிய மனமில்லாமல் மன்னித்து, அவ ருக்கு வேண்டிய பணமும் கொடுத்து, தம்மை அடிக்கடி வந்து பார்க்கும்படி சொல்லி விடைகொடுத்து வெளியே யனுப்பினாராம்.

அப்படியா சமாசாரம். அந்தச் சிங்கத்தினுடைய வாயி லிருந்து இவ்வீரர் தப்பித்துக் கொண்டு வந்துவிட்டார். நல்ல அதிர்ஷ்டசாலி போலிருக்கிறது.

அப்படியல்ல அப்பா, இதெல்லாம் கடவுளுடைய செயல். அவனன்றி ஓர் அணுவும் அசையாதென்பது உனக்குத் தெரியாதா? ரமணியைத் தீயினின்றும் காப்பாற்றும் பொருட்டே கடவுள் இவ்வீரனைச் சுல்தானுடைய கையிலிருந்து காப்பாற்றினர். சுல்தான் இவ்வீரனைக் கொலை புரிந்திருந்தால், ரமணி நிச்சயமாய்த் தீயில் மாண்டே யிருப்பாள்.

என்ன அண்ணா அப்படிச் சொல்லுகிறாய்! நீ இல்லையா நானில்லையா? இன்னும் மற்ற வேலைக்காரர்கள் இல்லையா? ரமணி தீயில் மாண்டுபோக நாமெல்லாம் சும்மா இருப்போமா?

ஆமாம் போதும், போதும். நம்முடைய வீரத்தன்மையை வெளியிலுமா சொல்லவேண்டும். மாளிகை தீப்பிடித்ததும் நீ அரைமைல் தூரத்திற்கு அப்புறம் போய் நின்றுகொண்டிருந்தாயாமே. நீ தான் அப்படி யென்றால், என்னுடைய தைரியத்தைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஒரு சிறிய பெட்டியை யெடுத்துக்கொண்டு ஓடிவரும்போது அந்தப் பெட்டி கீழே விழுந்தது. அதன்பேரில் நான் விழுந்தேன். அன்றுபட்ட காயம் இன்னும் ஆறவில்லை. மற்ற வேலைக்காரர்களோ மதிமயக்கத்தால் என்ன செய்வதென்று தெரியாமல், ஒருவன் ஓடிச் சுவரில் மோதிக்கொள்வதும், ஒருவன் கற்றூணைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்வதும், ஒருவன்பெட்டியிலுள்ள சாமான்களை யெல்லாம் எடுத்து வெளியில் போட்டுவிட்டு வெறும் பெட்டியை யெடுத்துக்கொண்டு ஓடுவதும், ஆகிய இவைபோன்ற அன்று இராத்திரி நடந்த வேடிக்கைகளை இப்போது நினைத்தாலும் எனக்குச் சிரிப்பாயிருக்கிறது. இப்படிப்பட்ட

வேலைக்காரர்கள்தானு தீயில் பாய்ந்து ரமணியைக் காப்பாற்றப் போகிறவர்கள். இவ்வீரன் அன்றிரவு இவ்விடத்தில் இல்லாவிட்டால் ரமணியினுடைய கதி என்னவா யிருக்குமோ ? அப்போது என் மனத்தில் இருந்த பயம் உனக்கென்ன தெரியும். உன்னையும் என்னையும் படைத்த அந்த ஈசுவரனுக்கல்லவோ தெரியும்.

நீ சொல்லுகிறது உண்மைதான். ஆயினும், பிரதாப்சிங் யுத்தவீரன் அல்லவா ? நாம் எல்லாம் வேலைக்காரர்கள் தாமே.

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், வீரனுடைய படுக்கை அறையிலிருந்து ஏதோ சத்தம் வந்ததுபோலிருந்தது. உடனே, தலைமை வேலைக்காரன் அவ்வறைக்குள் சென்றான். கொஞ்சநேரத்திற்குள் அவன் வெளியே வந்து, 'வீரனுக்குத் தாகமாயிருக்கிறதாம்' என்று சொல்லி, உடனே பாலைக் காய்ச்சி, சர்க்கரையிட்டு அதைக்கொண்டுபோய் அவனுக்குக் கொடுத்தான். வீரன் அதைப் பருகினபிறகு தாகவிடாய் தீர்ந்து மறுமுறையும் அயர்ந்து நித்திரை செய்தான். அப்பால் வேலைக்காரர்கள் தங்கள் சம்பாஷணையை ஆரம்பித்தனர்.

இவ் வீரனுடைய சரீரம் ஏன் கொப்புளித்திருக்கிறது ?

ஒருவன் :—அதிக உஷ்ணத்தினுல்போலும். பால், மோர், தயிர், நெய் முதலியவைகளை நித்தம் உபயோகித்து வந்தால் அந்த உஷ்ணம் உடனே தணியும்.

இன்னொருவன் :—படை, சிரங்கு, புண், கொப்புளம் இவைபோன்ற வியாதிகள் கெட்ட இரத்தத்தினுல் உண்டாகுமேயன்றி வேறொன்றினுலும் உண்டாகாது.

மற்ருெருவன் :—இல்லை, இல்லை, ஒருபோதுமில்லை. நீங்கள் எல்லாம் உண்மையான காரணத்தை யறியாமல் உளறிக்கொண்டிருக்கிறீர்கள். இவ்வீரன் தீயில் பாய்ந்து ரமணியைக் காப்பாற்றின காலத்தில், அத்தீயின் உஷ்ணம் இவனுடைய கால்களில் அதிகமாய்த் தாக்கினபடியால், இப்போது அவற்றில் கொப்புளங்கள் தோன்றியிருக்கின்றன. கொப்புளங்களின் வேதனையினுல் வீரன் அசௌக்கியமுற் றிருக்கிருன். இதுவே காரணம்; தன்னுயிரையும் பாராது ரமணியினுடைய உயிரைக் காப்பாற்றின இவ்வுத்தம புருஷனுக்கு நம்முடைய எஜமானராகிய புருஷோத்தமர் என்னசெய்தால் தகாது.

அண்ணு, ரமணியினுடைய உயிரைக் காப்பாற்றினது இவ்வீரனுனபடியால் அப் பெண்ணை இவருக்கே கன்னிகா தானம் செய்துகொடுப்பது நியாயம் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஆமாம், அதுதான் நியாயம். ஆயினும், புருஷோத்தமர் தமது நண்பராகிய குலசேகரப் பிரபுவினுடைய மகன் ராஜசேகரனுக்கு ரமணியை மணம் செய்து கொடுப்பதாகச் செய்தி பிறந்திருக்கிறது.

அவனுக்கா! அந்த துஷ்டப் பயலுக்கா ரமணியைக் கொடுக்கப்போகிருர்கள்! அதைவிட அப்பெண்ணைப்பாழ்ங் கிணற்றிலே தள்ளினுலும் நல்லதாயிற்றே. அவன் நுழையாத தாசிவீடு கிடையாது. அவன் குடிக்காத மதுபானம் இல்லையே. தகப்பனுருக்குத் தெரிந்து பாதி; தெரியாமல் பாதி பணத்தை யெடுத்துக்கொண்டுபோய் இவ்விதமான கெட்ட காரியங்களில் செலவழித்து வருகிருன். ரமணியை அவ

னுக்குக் கொடுப்பதைவிட ஒரு குட்டிச் சுவருக்குக் கட்டி வைக்கலாமே.

அப்படியா? யார்தான் யோக்கியன்? இக்காலத்தில் சகல ஜனங்களும் பணத்தையும் அழகையும் அல்லவோ முக்கியமாய்க் கவனிக்கிறார்கள். இராஜசேகரன் வாலிபன் ஆனதினால் இப்பேர்ப்பட்ட காரியங்களைச் செய்கிறான்; கல்யாணமாகி விட்டால், அப்பால் அவனுக்கே புத்திவந்து விடாதா. மேலும், அவனைத் தவிர இந்த நகரத்தில் வேறு யார் இருக்கிறார்கள்? கௌதமன் இருக்கிறான்; மிகவும் நல்ல பையன், நன்றாய் வாசித்தவன், நற்குணமுடையவன்; ஆனால், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுக்கும் ரமணியினுடைய அந்தஸ்திற்கும் பொருத்தமில்லை என்றே புருஷோத்தமர் அந்த ஏற்பாட்டைத் தள்ளி விட்டார். பிறகு அவர் சுந்தரப் பிரபுவுக்காவது ரமணியை மூன்றாந் தாரமாகக் கொடுக்க யோசித்தார்.

ஐயோ! அந்த 50 வயது கிழவனுக்கா? இன்னுமா அவன் கலியாணம் செய்துகொள்ள ஆசை கொண்டிருக் கிறான்? நம்முடைய எஜமானுக்குப் பணப்பித்துப் பிடித் திருக்கிறது. இரத்தினப் பதுமைபோலிருக்கும் ரமணிக்கு அக் கிழவனைக் கலியாணம் செய்துகொள்ளப் பிரியம் இராதே.

ரமணிக்கும் பிரியமில்லை, சம்யுக்தை யம்மைக்கும் பிரியமில்லை. ஆகையால்தான், புருஷோத்தமர் அந்த ஏற் பாட்டையும் தள்ளிவிட்டார்.

அப்படியானால் இராஜசேகரனுக்குத்தான் அப் பெண் ணைக் கொடுப்பார்போ லிருக்கிறது; பாவம், தலைவிதி யைத் தடுக்க யாரால் முடியும். பணமும் அழகும் இரு

ந்து என்ன பயன். நல்ல குணங்களுள்ள கணவனாக அல்லவோ இருக்கவேண்டும். எனக்குத் தெரிந்தது என்ன வென்றால், ரமணிக்கு ஏற்ற நாயகன் இவ்வீரனே யன்றி வேறொருவருமிலர். இவனைப்போன்ற உத்தம புருஷனை இந்த உலக முழுவதும் தேடினாலும் காணமுடியாதே. அழகில்தான் குறைவா ? என்ன கம்பீரமான தோற்றம்! ரமணியினது உயிரைக் காப்பாற்றினவனும் இவ்வீரனே. இவரைத் தவிர்ந்து ரமணிக்கு வேறு நாயகனைத் தேடுவது புத்தியீனம்.

நீ சொல்வதெல்லாம் வாஸ்தவமே. ஆயினும், புத்த மார்க்கத்தைச் சேர்ந்த புருஷோத்தமர் தம் மகளை இந்துவாகிய ராஜபுத்திரவீரனுக்குக் கன்னிகாதானம் செய் வாரா ? யாராயிருந்தால் என்ன, குணம்தானே முக்கியம்.

இவ்வாறு வேலைக்காரர்கள் வெகுநேரம் சம்பாஷித் துக்கொண்டிருந்து உறக்கம்கொண்டனர். வீரனும் அயர் ந்து நித்திரைசெய்துகொண்டிருந்தான். ஆனால் ரமணிக்கு நித்திரையிலும் இளைப்பாறுதலில்லை. வீரனைப்பற்றிய எண்ணமே அவள் மனத்தில் குடிகொண்டிருந்தது. தன் விருப்பத்தின்படி அவனுக்கே தன்னைக் கன்னிகாதானம் செய்த தாகவும், அவனோடு கூடி வாழ்ந்திருப்பதாகவும் ரமணி கனவுகண்டு, 'நாதா, உங்களைப்பிரிந்து ஒரு க்ஷண மும் உயிர் வாழ்ந்திருக்கமாட்டேன், நீங்கள் என்னை மணந் திராவிட்டால் தீயில்மாண் டிருப்பேன் நாதா !' என்று பிதற்றிக்கொண்டிருந்தாள்; பெருமூச்செறிந்தாள். அல்ல லுற்றுப் பாயலின்மீது புரண்டாள்; கடைசியாகச் சோர் வடைந்து நித்திரை செய்தாள்.

பொழுது விடிந்தது. மாளிகையிலுள்ள யாவரும் நித்திரையை விட்டெழுந்தனர். ரமணியோ இன்னும் நித்திரையை விட்டு எழுந்திருக்கவில்லை. காலை போஜனம் அருந்தக் காலமானபடியால் நித்திரையிலிருந்து எழுப்பச் சம்யுக்தை அவளுடைய படுக்கை அறைக்குள் சென்றாள். அவள் கூந்தல் அலங்கோலமாய்ப் பரந்திருந்தது. செந்தாமரை இதழ்கள் போன்ற அவளுடைய கன்னங்களின்மேல் கண்ணீர் தாரை தாரையாய் வழிந்திருந்தது. களங்கமில்லாத பூரண சந்திரன் போன்ற அவளுடைய முகம் வாடியிருந்தது.

‘அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்’

என்பதுபோல், ரமணி, ஏதோ மனவருத்தத்தினால் வேதனையுறுகிறாள் என்று சம்யுக்தை தெரிந்துகொண்டாள். உடனே அவளை நித்திரையிலிருந்து எழுப்பித் தன் மார்போடணைத்து, அவ்வாறு அவள் பதங்குலைந்து நித்திரை செய்வதற்குக் காரணம் என்னவென்று அன்புடன் வினவினாள். ரமணிக்குத் தூக்கம் ஒரு பக்கம்; துக்கம் ஒரு பக்கம். பாவம் என்ன செய்வாள். என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்தாள். பின்பு சம்யுக்தை அவளை அந்தச் சமயம் தொந்தரவுசெய்து கேட்பது நல்லதல்ல என்று எண்ணி அவளை அழைத்துக்கொண்டு போய்க் காலைக்கடன்களை முடிக்கச்செய்து அவளுடன் சிங்கார வனத்தை யடைந்தாள். அவ்விடத்திலும் ரமணி ஆறுதல் அடைந்தாளில்லை. சம்யுக்தையோடு அவள் ஒன்றும் பேசவில்லை. ஒருவரிடத்தில் முறையிட்டுக் கொள்வதால் என்ன பிரயோஜனம். வீரன் ஒருவன் தவிர, பிறர்

அவள்மேல் இரக்கம் கொண்டு, என்ன அன்பான வார்த்தைகள் பேசினலும் என்ன? அன்பான வார்த்தைகள் பேசுவார்களே ஒழிய அவள் வீரன்மேல் அந்தரங்கமாய்க் கொண்டிருக்கும் காதலே அறிய வல்லவர் ஒருவருமிலர். ரமணி அவனை யடைவதற்கு வழியறியாமல் அவனையே அனுதினமும் நினைத்து ஏங்கி ஏங்கி ஊண் உறக்க மற்றிருந்தனள். அவனுக்குக் குற்றேவல் புரிந்தாவது அவனுடைய சமுகத்திலிருக்க ஆசைகொண்டாள். அந்தப் பாக்கியமும் அவளுக்குக் கிடைக்கவில்லை. தன் பிதா தன்னை இராஜசேகரனுக்குக்கொடுக்க விருப்பங்கொண்டிருப்பதும் அவளுக்குத்தெரியவந்தது. 'வெந்த புண்ணில் வேலிடுவதுபோல' அவ்விஷயம் அவளுடைய மனத்தை வேதனைசெய்தது. வீரனைத் தவிர வேறு ஒருவனையும் மணம் புரிவதில்லை யென்னும் மனவுறுதிகொண்ட ரமணி தனது தந்தை அவனைத் தவிர்த்து வேறு யாரையாவது தனக்குக் கணவனுக்க நியமிக்கும்பட்சத்தில் ஆற்றிலாவது குளத்திலாவது விழுந்து உயிரை மாய்த்துக்கொள்வதென்று உறுதிகொண்டாள்.

'உயிருதவி செய்தவற்கொன் றுற்றக்கால் உணர்வுடையோர்
செயிரறுதம் முயிர்அளித்தும் செய்ந்நன்றி கடன் கழிப்பார்'

என்பதுபோல், தீயினின்று தனதுயிரைக் காப்பாற்றின வீரனுக்கே அதைப் பிரதிஷ்டைசெய்ய ரமணி தீர்மானித்தாள். சூரியனைவிடச் சந்திரன் குளிர்ச்சி பொருந்திய கிரணங்களே யுடையவனு யிருந்தபோதிலும் தாமரையானது சூரியனையே தனக்கு நாயகனுக வரித்துக் கொண்டது போல் இராஜசேகரன் வீரனைவிட ஐசுவரியத்தில் சிறந்தவனு

யிருந்தபோதிலும் நமது கதாநாயகி அவ்வீரனையே தனக்கு நாயகனாகத் தெரிந்துகொண்டது மெச்சத் தக்கதே.

நாளுக்கு நாள் பிரதாப்சிங் கொடிய வியாதியினின்றும் குணமடைந்து வந்தான். இரண வைத்தியத்தில் முற்றிலும் தேர்ச்சிபெற்ற வைத்தியர்கள் அவனுடைய கால்களிலுள்ள கொப்புளங்களை ஆற்றினார்கள். மாலினி கையில் அவனுக்குச்செய்த உபசாரங்களுக்கும் உபகாரங்களுக்கும் அளவேயில்லை. சம்யுக்தையும் மற்றுமுள்ள வேலைக்காரர்களும் வீரனுக்கு எவ்வளவோ பணிவிடை செய்தபோதிலும் அவையெல்லாம் புருஷோத்தமருக்குக் குறைவாகவே காணப்பட்டன. வீரன் தமக்குச்செய்த உபகாரத்திற்குத் தமக்குள்ள சொத்து சுதந்தரங்கள் அனைத்தையும் அவனுக்குக் காணிக்கையாகச் செலுத்துவதாயிருந்தாலும் அது அவருக்குச் சம்மதமே.

ஒருநாள் வீரன் தன்னுடைய படுக்கையின் மீது சாய்ந்து கொண்டு பின்வருமாறு சிந்திக்கலானான்:

'நான் யார்? என்னை இவ்வாறு பராமரித்துவரும் இப்புண்ணியர் யார்? நான் தீயினின்று காப்பாற்றின மங்கை யாவள்? நான் பிறந்தது எவ்விடம்? வளர்ந்தது எவ்விடம்? உத்தியோகம் வகித்தது எவ்விடம்? வியாதியால் பீடிக்கப்பெற்றுப் பராமரிக்கப்படுவது எவ்விடம்? ஏழையாகிய என்னை இவ்வாறு போற்றிவரும் இவர்களுக்குக் கடவுள்தான் அருள்புரிய வேண்டும். ஆயினும், என் மனமோ உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைப்பதுபோல் பல நினைவுகள் கொள்வதாயிருக்கிறதே. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா? தரித்திரனாகிய நான் பிரபுவினுடைய மகளாகிய ரமணியின்மேல் ஆசைவைப்பது நியாய

மல்லவே. மேலும் தங்கையைப்போல் என்னைச் சில நாளாக ஆதரித்து வந்த புருஷோத்தமருடைய மகளை நான் மணம்புரிய நினைப்பது துரோகமல்லவா? நான் இன்னும் இம்மாளிகையில் கொஞ்சகாலம் தாமதித்து இருப்பேனு யின் என் மனம் ரமணிக்கே அடிமையாய்விடும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ஆகையால், நான் இப்பொழுதே புரு ஷோத்தமரிடம் சென்று விடைபெற்று வெளியேபோவேன்' என்று பிரதாப்சிங் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். வியாதியினின்றும் அவன் பூர்ண சுகமடைந்தபோதிலும் அவனுடைய சரீரத்தில் நல்ல பலம் இல்லை. ஆயினும், சோத னைக்கு விலகி நிற்பதே மேன்மையென்று அவன் எண்ணி னான். உயிரை யளித்தாயினும் பிறருக்குஉபகாரம் செய்யும் மனமுடைய அப்பரோபகாரி தான் விரும்பிய ஒரு பொருளை யடைவதற்கு இன்னொருவருக்கு இரண்டகம் நினைப்பானோ! நினைக்கமாட்டான். வீரன், வேலைக்காரன் ஒருவனையழைதது, 'அப்பா, நான் புருஷோத்தமரைக் காண ஆசையுள்ளவனு யிருக்கிறேன் என்பதைப்பற்றி நீ அவரிடம் சென்று தெரி விப்பாய்' என்றான். வேலைக்காரன் சென்று தெரிவித்ததும், புருஷோத்தமர் வீரனுடைய அறைக்கு வந்தார். உடனே வீரன் அவருக்குத் தலைவணங்கி நமஸ்காரம் செய்து, அவரை நோக்கி, 'மேன்மை வாய்ந்த ஐயனே, இதுவரையில் தாங்கள் என்னிடம் பாராட்டிவந்த அன்பிற்குப் பிரதியுப காரமாக ஏழையாகிய யான் என் செய்ய வல்லேன்! ஆதர வற்று அகதியாய் வியாதியில் கிடந்த என்னைத் தாங்கள் அன்புடன் ஆதரித்து வந்ததற்காக எல்லாம் வல்ல இறை வனே தங்களுக்குச் சம்பூர்ணமாய் அருள் புரிவாராக. கடவுளுடைய கிருபையாலும், தங்களுடைய பேருதவியா

னும் யான் இப்போது பூரண சுகமடைந்திருக்கிறேன். தாங்கள் எனக்குத் தயவுசெய்து விடைகொடுக்கும் பட்சத்தில் எனதிருப்பிடம் செல்லச் சித்தமாயிருக்கிறேன்' என்ருன். எதிர்பாராத இவ்வார்த்தைகளைக் கேட்ட புருஷோத்தமர் அதிக விசனமடைந்தார். 'அப்பா, பிரதாப்சிங், நீ என்னை வரவழைத்து என்மனம் வருந்தும்படி இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கூறுவாய் என்று நான் நினைக்கவேயில்லை. உன்னை நான் கண்டடைந்தது முன் பிறப்பில் செய்த புண்ணியத்தின் பலன் என்றல்லவோ ஆனந்தமடைந்திருந்தேன். திடீரென்று நீ விடைபெறுவது என் மனத்திற்கு மிக சஞ்சலத்தைத் தருகிறது' என்று புருஷோத்தமர் அதிக மனவருத்தத்தோடு மறுமொழி பகர்ந்தார். வீரன், என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்தான். அப்பால் தன் மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு புருஷோத்தமரை நோக்கி, 'ஐயா உங்களுடைய ஆதரவில் எவ்வளவு நாள் தான் நான் இருப்பது. நீங்கள் இதுவரையில் என்னிடம் பாராட்டிவந்த அன்பிற்கே பிரதியுபகாரம் செய்ய எனக்கு வல்லமையில்லாதபோது என் வாழ்நாள் எல்லாம் உங்களிடமிருந்து உங்களைத் தொந்தரவு செய்ய எனக்கு மனமில்லை. கடவுள் எனக்குக் கைகால் முதலிய அவயவங்களை அளித்திருக்கிருர். அவைகளை நான் எனக்கும் பிறருக்கும் பயன்பட நல்ல வழிகளில் உபயோகப்படுத்தி என் வாழ்நாட்களைக் கழிக்கவேண்டுமே யல்லது தம்மைப்போன்ற பிரபுக்களின் தயவைக்கொண்டு ஆனந்தமாய்க் காலம் கழிப்பது ஏற்றதன்று. ஆகையால், தயவுசெய்து விடையளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்' என்ருன். இவ்வார்த்தைகளைச் செவியுற்ற புருஷோத்தமர் அவனுடைய

மேன்மையான குணத்தைக்கண்டு வியப்படைந்து அவனை நோக்கி, 'அப்பா, உன்னைப்போன்ற உத்தமர் இவ்வுலகில் இருப்பது அரிது. நீ எங்களோடிருப்பது எங்களுக்குப் பெரும் பேருக இருக்கிறது. உனக்கு விடையளித்து அனுப்ப எனக்கு மனமில்லை. ஆயினும், நீ அடிக்கடி எங்களிடம் வந்து எங்களை ஆனந்திக்கச் செய்வதாக வாக்களிப்பாயாகில் உனதிஷ்டப்போல் போய்வரலாம்' என்ருர். வீரன் மாளிகையை விட்டுப் புறப்பட ஆயத்தமானுன்.

வீரனையே இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருந்த ரமணியினுடைய உடம்பு நாளுக்கு நாள் மெலிவடைந்தது. அவள் ஊண் உறக்கமற்றனள். ஆடை ஆபரணங்களை வெறுத்தனள். ரமணி நாளுக்குநாள் மெலிவதையும், உணவு ஆடை ஆபரணங்கள் முதலியவற்றை அவள் வெறுப்பதையும் கண்ட சம்யுக்தை, அவள் மனத்தில் ஏதோ வேதனை இருக்கிறதென்று அறிந்து, அவளைப் பலவிதமாய்த் தேற்ற முயன்ருள்; முயன்ற முயற்சிகள் எல்லாம் அவலமாயின. அப்பால், சம்யுக்தை அவளுடைய மனவேதனையின் காரணத்தை யறியுமாறு விஷயங்களை நன்ருய் ஆராய்ந்து பார்க்கத் தீர்மானங்கொண்டு, தனக்குள்ளே பின்வருமாறு ஆலோசிக்கலானுள். ரமணியினுடைய மனத்தை வருத்துவது எது? தேகம் திடமற்றிருக்குமாயின் ஆடை ஆபரணங்களை வெறுப்பதற்குக் காரணமில்லையே. மனவேதனையைச் சகிக்க முடியாதவள்போல் அடிக்கடி பெருமூச்செறிகிருள். விடியற்காலையில் அவளைப் பார்த்தால் அவளுடைய கண்கள் கோவைப்பழம்போல் சிவந்து வீங்கியிருக்கின்றன. இரவுமுழுவதிலும் அழுதுகொண்டிருப்பாள் போலும். இவ்வாறு அவளுடைய மனம் வேதனையுறுவதற்

குக்காரணம் அற்பகாரியமாயிராது. அதையறியும்பொருட்டு நாம் அவளை எவ்வளவு வருந்திக்கேட்டபோதிலும் சொல்லுகிறாளில்லையே. என்ன செய்வது, அவளுடைய மனத்தை வருத்துவது எதுவென்று அறிந்தாலல்லவோ அதற்குப் பரிகாரம் தேட முயற்சி செய்யலாம். நாம் அவளுக்குச் செய்கிற உபசாரங்கள் எல்லாம் அவளுடைய வேதனையை யதிகப்படுத்துகின்றதே. விஷயங்களை நன்றாய் ஆராய்ந்து பார்த்தால் வீரன் மாளிகைக்கு வந்த நாள்முதல் ரமணி இந்நிலைமையிலிருக்கிறாள்; இவள் ஏதோ அவன்மேல் அந்தரங்கமான காதல் கொண்டிருக்கிறாள்போலிருக்கிறது.

புருஷோத்தமர் அவளை இராஜசேகரனுக்கு மணம் செய்விக்கப்போகிறார் என்று நான் அவளிடம் சொன்னபோது, அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகினதற்கு இதுவே பெரிய முகாந்தரம். வீரன் மாளிகையைவிட்டுப் புறப்பட்ட பின்பு அவனைத் தான் இனி அடைய முடியாதென்னும் எண்ணத்தினால் ஏக்கமுற்று உயிரை மாய்த்துக்கொண்டாலும் கொள்வாள்; இதற்கென்ன செய்வது. இதற்குப் பரிகாரம் தேடுவதெப்படி? தான் காதல்கொண்டிருக்கும் வீரனைத் தனக்கு நாயகனாகப் பெறமுடியாதென்னும் எண்ணமே அவளுடைய மனத்தை வேதனைப்படுத்துகிறது. இவற்றை யறியாமல் புருஷோத்தமர் தம்முடைய புதல்வி ஏதோ அசௌக்கியமுற்றிருக்கிறாள் என்றெண்ணி வைத்தியர்களை வரவழைத்துச் சிகிச்சை செய்யச் சித்தமாயிருக்கிறார். மனநோய்க்கு மருந்து கொடுக்க யாராலாகும்? மேலும் புருஷோத்தமர் தமது நண்பராகிய குலசேகரப் பிரபுவினிடம் சென்று அவருடைய மகனாகிய இராஜசேகரனை ரமணிக்கு நாயகனாக்கச்

செய்யும் ஏற்பாடுகள் எல்லாம் அவளுடைய மனோ வேதனையை அதிகப்படுத்துகிறது. வீரனைத் தனக்கு நாயகனாகப்பெறாவிடில் ரமணி அவனுடைய ஏக்கத்தினால் மரணமடைவாள் என்பதற்குச் சந்தேகமில்லை. அவனுக்கே அவளைக் கன்னிகாதானம் செய்வது நல்லதென்று எனக்குப் புலப்படுகிறது. ரமணியினுடைய உயிரைக் காப்பாற்றினவனாதலால் அவனுக்கே அவள் உரியவள். அழகிற்கும் எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடம்போன்ற அவ்வாலிபனைவிட ரமணிக்கு ஏற்ற நாயகன் வேறு எவன்? இராஜசேகரன், பிரபுவினுடைய மகனானபோதிலும் புருஷோத்தமருடைய அந்தஸ்திற்குத் தகுந்த மருமகனானபோதிலும், அவன் நற்குணங்கள் உடையவன் அல்லன். அவனுக்கு ரமணியைக் கலியாணம் செய்துகொடுப்பதைவிட அவளைப் பாழ்ங் கிணற்றிலே தள்ளுவது உத்தமம். அவனை மணம்புரிந்தால் ரமணிக்குச் சந்தோஷமே யிராது. ஒரு வண்டியில் பூட்டப் பெற்றிருக்கும் இரண்டு மாடுகளும் ஒற்றுமையோடு நடந்தாலல்லவோ அவ் வண்டி செல்லக்கூடும். அவற்றில் ஒன்று சண்டியாயிருக்குமானால் வண்டி நடப்பது அசாத்தியமாகும். அதுபோல, இல்லறத்தை நடத்திவரும் நாயகனும் நாயகியும் நற்குண நற்செயல்கள் அமைந்தவர்களாய் ஒற்றுமையோடு கூடிச் சுகித்திருந்தாலல்லவோ இல்லறம் அவர்களுக்கு இன்பமுடையதாகும். ஆகையால் அவளுடைய விருப்பத்தை நிறைவேற்ற நாம் முயற்சி செய்தல் அவசியமாகும் என்று சம்யுக்தை தனக்குள்ளே தீர்மானம் செய்தாள். பின்பு அவள் ரமணியிடம் சென்று அவளை நோக்கி, 'அம்மா ரமணி, யாருமற்ற அகதியைப்போல் நீ தனிமையாய் வேதனைப்பட்டுக்கொண் டிருப்

பது நல்லதல்ல. உன்குறையை உன்னுடைய பிதாவிடத்திலாவது என்னிடத்திலாவது சொல்லக்கூடாதா? நாங்கள் உன் மனக்குறையைத் தீர்க்கமாட்டோமா?' என்றாள்.

ரமணி:—என் குறையைத் தீர்க்க உங்களால் முடியவே முடியாது. கடவுள் ஒருவரன்றி மனிதரால் ஆகக் கூடிய காரியம் அன்று. விதியை விலக்க ஒருவராலும் ஆகாது.

சம்யுக்தை:—'கண்மணி, நீ சொல்வது உண்மையே. ஆயினும், கடவுள் தாமே நேரில் ஒரு காரியத்தைச் செய்வதில்லை. மனிதர்களைக்கொண்டே அவர் தம் சித்தத்தை நிறைவேற்றுகிறார். ரமணி, உன்னை ஈன்றெடுத்த தாய் இறந்துவிட்டமையால், இப்போது நான்தான் உன் தாய். உன்னுடைய மனக்குறையை உன் தந்தையிடத்தில் சொல்லாவிடினும் உன் தாய்க்குப் பதிலாயிருக்கும் என்னிடத்திலாவது சொல்லிக் குறையாற்றிக் கொள்ளக்கூடாதா? கண்மணி, நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டா. உன்னுடைய மனத்தை வேதனைப்படுத்தும் காரியத்தை என்னிடம் சொல்லுவாயாகில், உன் குறையைத் தவிர்த்து உன்னை இன்புறச்செய்வேன். நாளுக்கு நாள் உனது தேகம் மெலிவதைப் பார்க்க என்னால் சகிக்க முடியவில்லை. நீ இடைவிடாது பெருமூச்செறிவதையும், ஊண் உறக்கமற்றிருப்பதையும் கவனித்தால் உன்னுடைய மனத்தை வருத்துவது அற்பகாரியமன்று என்று தெரியவருகிறது. ஆதலால், என் கண்மணி, ஒன்றையும் ஒளியாமல் உன்னை வேதனைப்படுத்துவது இன்னதென்பதை எனக்குத் தெரிவிப்பாய்' என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கேள்வியுற்ற ரமணி சம்யுக்தை யினுடைய கழுத்தைத் தன் இருகரங்களினாலும் தழுவிக் கொண்டு தன் மனத்திலுள்ள துக்கத்தை யடக்கமுடியாமல் கண்ணீர் ஆறாய்ப்பெருகச் சத்தமிட்டழுதாள். அப்போது சம்யுக்தை அவளைத் தன் மார்போடணைத்துக்கொண்டு, தன்னுடைய கண்களிலும் கண்ணீர் ததும்பாநிற்க, ரமணி யினுடைய கண்ணீரைத் தன் முன்றானையினால் துடைத்துக் கொண்டிருந்தாள். அப்பால், சம்யுக்தை தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு ரமணியை நோக்கி, 'அம்மா, நீ இவ்வாறு வருந்துவது நல்லதன்று; உன் மனத்தை வேத னைப்படுத்துவது இன்னதென்று எனக்குத் தெரிவிப்பா யாகில் என்னாலியன்ற முயற்சிசெய்து உன்னை இன்புறச் செய்வேன்; நீ ஒன்றுக்கும் கவலைப்படவேண்டா' என்றாள். இதைக்கேட்ட ரமணி மனத்தில் துக்கம் நிறைந்தவளாய் வாய்குழற உடல் நடுங்கச் சம்யுக்தையை நோக்கி, 'என் பிதா, என்னை இராஜசேகரனுக்குக் கொடுக்கப் போகிறார் என்று நான் கேள்விப்பட்டேன். தீயினின்று என்னைக் காப்பாற்றின வீரனைத் தவிர வேறு ஒருவனையும் நான் மணம்புரியமாட்டேன். என் பிதா இராஜசேகரனை மணம்புரியக் கட்டாயப் படுத்துவாராகில் எனது உயிரை மாய்த்துக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்' என்று தட் டுத்தடுமாறி எடுத்துரைத்தனள். சம்யுக்தை அதைச் செவியுற்று ரமணியை நோக்கி, 'அம்மா ரமணி, நீ வருந்த வேண்டா. நீ காதல் கொண்டிருக்கும் வீரனுக்கே உன்னைக் கன்னிகாதானம் செய்யும்படி உன்னுடைய பிதாவிடத்தில் நான் உனக்காகப் பரிந்து பேசுவேன்' என்று சொல்லி, அவளை ஒருவாறு தேற்றினாள்.

## 8. ஓர் இரகசியம்

மறுநாள் சம்யுக்தை புருஷோத்தமரிடம் சென்று அவரை நோக்கி, 'ஐயா, நான் உங்களிடத்தில் ஒரு முக்கியமான காரியத்தைப்பற்றிப் பேசவந்திருக்கிறேன். அது நம்முடைய கண்மணியாகிய ரமணியைப்பற்றியதே. ஏற்ற காலத்தில் தக்க நாயகனைத்தேடி மணம் செய்விப்பது பிதாவினுடைய கடமையல்லவா?' என்றாள்.

புருஷோத்தமர், 'சம்யுக்தா நீ சொல்வது உண்மைதான். ரமணியினுடைய கலியாணத்திற்காக நான் எவ்வளவோ ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறேன். நேற்றுக்கூட எனது நண்பராகிய குலசேகர பிரபுவினிடம் சென்றிருந்தேன். அவருக்கும் ரமணியைத் தமது மகனாகிய இராஜசேகரனுக்கு மணம்புரிவிக்க நிரம்ப சந்தோஷம். அப்பிரபுவை நம்முடைய சம்பந்தியாகப்பெறுவது நம்முடைய பாக்கியமல்லவா? சம்யுக்தா, நீ இராஜசேகரனைப் பார்த்திருக்கிறாயா? அவனே நமது புதல்விக்கு ஏற்ற மணாளன். அவனைவிட நம்முடைய அந்தஸ்திற்குத் தகுந்த மாப்பிள்ளை ஆமதுநகரம் முழுவதிலும் இல்லை' என்றார்.

**சம்யுக்தை**:—'அப்படியானால் இராஜசேகரனுக்கா ரமணியைக் கொடுக்க யோசித்திருக்கிறீர்கள். ரமணியை அவனுக்குக் கொடுப்பதைவிட அவளையொரு பாழ்ங்கிணற்றில் தள்ளிவிடலாமே! நற்குணமென்ற வாசனையே அவனிடத்தி லில்லாதிருப்பதை யுணர்ந்தும் அவனுக்கு ரமணியைக் கொடுக்க நினைப்பதா? வேறொருவரும் உங்களுக்கு அகப்படவில்லையா?' என்று கேட்டாள்.

புருஷோத்தமர் :—'சம்யுக்தா, இராஜசேகரன் நற்குண முடையவனென்றல்லவோ நான் கேள்விப்பட்டேன்.

உலகம் பலவிதம். நல்லவனைக் கெட்டவன் என்றும், கெட்டவனை நல்லவன் என்றும் பலவாறாக உலகத்தார் சொல்லுவார்கள். ஆதலால், நாமே நேரில் பார்த்தாலொழிய மற்றவர்களுடைய சொற்களைக்கேட்டு ஒருவனைக் கெட்டவனென்று நாம் தீர்மானம் செய்யக்கூடாது. உலகத்தவர் யாரைத்தான் நல்லவர் என்று புகழ்ந்து பேசுகிறார்கள்! அப்படியிருக்க, இராஜசேகரனை மற்றவர்கள் சொல்வதைக் கேட்டுக் கெட்டவன் என்று நாம் தீர்மானிப்பது நல்லதன்று' என்றார்.

சம்யுக்தை:—'ஐயா, அவனுக்குக் கல்வியறிவு என்பது கிஞ்சித்துமில்லை. நம்முடைய வேலைக்காரர்கள் எல்லாரும் அவனுடைய கெட்ட நடத்தைகளைப்பற்றி விஸ்தாரமாகப் பேசுகிறார்கள். வேண்டுமானால் உங்கள் முன்னே சொல்லச் சிலரை அழைத்து வரட்டுமா? அப்படிப்பட்டவன்தானா ரமணிக்கு நாயகனாகவேண்டும். வேறொருவருமில்லையா? எந்த விஷயத்தில் அவன் ரஜபுத்திர இந்துவான பிரதாப்சிங் என்பவனைவிட மேன்மையானவன். ரமணியினுடைய உயிரைக் காப்பாற்றின வீரனுக்கே அவளைக் கன்னிகாதானம் செய்துகொடுப்பது உத்தமம். அழகிற்கும் ஆண்மைக்கும் சகல நற்குணங்களுக்கும் உறைவிடமாய் விளங்கா நின்ற அந்த உத்தமனே ரமணிக்குத் தகுந்த நாயகன்' என்றாள்.

புருஷோத்தமர்:—'சம்யுக்தா, நீ சொல்வது சரிதான். ஆயினும், பிரதாப்சிங் இந்துமார்க்கத்தைச் சேர்ந்தவனாயிற்றே. நான் உயிரோடிருக்கையில் என் கண்முன்பாக ரமணியை ஓர் இந்து மதத்தினனுக்கு மணம் புரிவிப்பதில்லை என்பது என் தீர்மானம். ஆகையால், ரமணியைத் தீயினின்றும் காப்பாற்றின வீரனை என்னுடைய மகனாகப் பாவிக்கிறேன்' என்றார்.

சம்யுக்தை:—'ஐயா, நான் ஒன்று சொல்லுகிறேன், என்னை மன்னிக்கவேண்டும். ரமணி உங்களுக்கு வளர்ப்புப் பெண்தானே! அவளுடைய பெற்றோர் ரஜபுத்திர இந்துக்கள் என்று நீங்களே ஒரு காலத்தில் எனக்குச் சொல்லியிருக்கிறீர்கள். ரஜபுத்திர இந்துக்களுடைய புதல்வியாகிய ரமணியை ரஜபுத்திர இந்துவாகிய பிரதாப்சிங் என்பவனுக்கு ஏன் கன்னிகாதானம் செய்யக்கூடாது?' என்றாள்.

சம்யுக்தை தன் வாழ்நாட்களைப் பெரும்பாலும் புருஷோத்தமருடனே கழித்தவள். அவளே அவருடைய குடும்ப காரியங்கள் அனைத்தையும் கவனித்து வந்தவள். புருஷோத்தமரும் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய விரும்பினால், சம்யுக்தையோடு கலந்து பேசாமல் செய்து முடிக்கமாட்டார். புருஷோத்தமருடைய முன்னோர் ஜபல்பூர் என்னும் நாட்டிலே வசித்தவர்கள். இந்நாடு ஆமது நகரத்திற்கு வடக்கே வெகு தூரத்தில் இருக்கிறது. புருஷோத்தமரும் இந்நாட்டைச் சேர்ந்தவரே. இவருடைய முன்னோர்கள் ஜபல்பூரில் கோடீசுவரர்களா யிருந்தமையால் அதிக கீர்த்தி பெற்றிருந்தார்கள். அப்போது அந்நாட்டை ஆண்டுவந்த மன்னர்களும் இவர்களிடத்தில் பேரன்பு பூண்டுவந்தார்கள் என்றால், இவர்களுடைய சிறப்புச் சொல்லாமலே விளங்கும். அத்தகைய புகழ்வாய்ந்த குடியிற் பிறந்தவர் புருஷோத்தமர். அவர் ஜபல்பூரிலிருந்த காலத்தில் தமது முன்னோர்களைப்போல இந்து மார்க்கத்தை யனுசரித்து வந்தார். அப்போது சம்யுக்தையும் அவருடன் ஜபல்பூரில் வசித்து வந்தாள். குடும்பத்திலுள்ள சகல ரகசியங்களையும் புருஷோத்தமர் அவளிடம் ஒளியாமல் உரைப்பது வழக்கம். ரமணி அவருடைய புதல்வியல்லள் என்பது

அவளுக்குத் தெரியும். சம்யுக்தை சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடன் புருஷோத்தமருடைய முகம் வெண்டாமரை மலர்போல் வெளுத்தது. கண்களில் நீர் ததும்பிற்று. அவளுடைய வார்த்தைகள் அவருடைய உள்ளத்தில் அம்பு போல் தைத்தன. அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்தார்.

ரமணி, புருஷோத்தமருடைய புதல்வியல்லள்! ரமணி அவருடைய புதல்வியல்லளாயின் வேறு யாருடைய புதல்வி? அவளைப் பெற்றோர் யாவர்? அவள் புருஷோத்தமரிடம் வந்தது எவ்விதம்? இவ்வினாக்களுக்குப் புருஷோத்தமர்தான் விடையளிக்க வேண்டும். ஆனால், அது அவருக்குச் சுலபமான காரியமன்று. அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று. பல வருடங்களுக்குமுன் நேர்ந்த ஏதோ ஒரு செய்தி அவருடைய மனத்தைச் சஞ்சலப் படுத்துவதுபோலிருந்தது. 'ரமணி உம்முடைய மகள் அல்லளே, ராஜபுத்திர இந்துவான ஒருவனுடைய புதல்வியை அம்மார்க்கத்தைச் சேர்ந்த வீரனுக்குக் கன்னிகாதானம் செய்தால் என்ன?' என்னும் கேள்விக்கு மறுமொழியுரைக்கப் புருஷோத்தமருக்கு நாவெழவில்லை. ஆயினும், சம்யுக்தைக்குச் சமாதானம் சொல்லித்தானே தீரவேண்டும். புருஷோத்தமர் தம்முடைய மனத்தை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டவராய் சம்யுக்தையைத் தமக்கருகில் வரச்சொல்லி, அவர்களைத் தவிர வேறொருவரும் அவ்விடத்தில் இல்லை யென்று உணர்ந்தபிறகு, அவளை நோக்கிப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்:

'சம்யுக்தா, நான் என்னவென்று பதிலுரைப்பேன். நீ கேட்ட கேள்வியானது என் மனத்தை அதிகமாய் வருத்து

கிறது. இப்போது உன்னை என் சகோதரியைப்போலப் பாவித்து நான் உனக்கு அறிவிக்கப்போகிற விஷயத்தை உன் மனத்தில் இரகசியமாய் வைத்துக்கொள். நமது ரமணி யிடத்திலும் சொல்லாதே. ஜபல்பூரில் வசித்துவந்த எனது முன்னோர்கள் இந்துக்கள் என்று உனக்குத் தெரியும். அவர்களைப்போல நானும் அந்நாட்டில் வசித்திருந்த காலத் தில் இந்துவா யிருந்தேன். அதன் பிறகு புதிய மதமாகிய புத்தமதமானது இந்து மதத்தைவிட மேன்மையுடைய தென்று எனக்குத் தெரிந்ததும், இந்த நூதன மார்க்கத்தில் எனக்கு உண்டான அபிமானத்தால் என்னுடைய முன் னோர்கள் அனுசரித்து வந்த இந்து மார்க்கத்தை விட்டுப் புத்தமதக் கோட்பாடுகளை அநுஷ்டிக்க ஆரம்பித்தேன். ஜபல்பூரிலுள்ள என்னுடைய சிநேகிதர்கள் நான் செய் வது பெரிய குற்றமென்று சொன்னார்கள். நான் ஏற்ற படி பல முகாந்தரங்களை அவர்களுக்கு எடுத்துக்காட்டி எனக்குப் புத்த மதத்திலுள்ள விருப்பத்தை விவரித்தேன். அவர்களோ என்னுடைய நியாயங்களுக்குச் சம்மதியாமல் என்னை அன்று முதல் வெறுக்க ஆரம்பித்தனர். அக்காலத் தில் ஜபல்பூரை ஆண்டுவந்த ரஜபுத்திர அரசன் நான் புத்த மதக் கோட்பாடுகளை யனுசரிப்பதைக் கேள்விப்பட்டு ஒரு நாள் என்னிடம் வந்து என்னுடைய முன்னோர்களும் அவ ருடைய முன்னோர்களும் நண்பர்கள் என்றும், அவ்விதமாக வே அவரும் என்னிடத்தில் அன்பு வைத்திருப்பதாகவும், புத்தமார்க்கம் கடவுளற்ற மார்க்கம் என்று தாம் அதை வெறுக்கிறபடியால் அவருடைய நண்பனாகிய நான் அப்ப டிப்பட்ட மார்க்கத்தில் இருப்பது தமக்குப் பிரியமில்லை யென்றும், மேலும் அவருடைய நட்பை நான் விரும்பினால்

180866

உடனே இந்துவாக வேண்டுமென்றும் சொன்னார். அப்போது நான் அவருக்குப் பல நியாயங்களை யெடுத்துக்காட்டியும் அவர் திருப்தியடையாமல் கோபத்துடன் எனது இருப்பிடத்தைவிட்டுப் புறப்பட்டார். அன்றுமுதல் அவ்வரசன் எனக்கு நயமாகவும் பயமாகவும் புத்திபுகட்டத் தமது ஆட்களை என்னிடம் அனுப்பிவந்தார். நான் கடைசியாக அவர்களை நோக்கி, 'மதசம்பந்தமான விஷயத்தில் நான் அரசனுக்குங் கட்டுப்பட்டவன் அல்லன்' என்று சொல்லி, இனி அவர்கள் இவ்விஷயத்தை மேற்கொண்டு என்னிடம் வரக்கூடாதென்று திட்டம் செய்தேன். இதைக் கேள்வியுற்ற அரசன் என்மேல் கோபங்கொண்டு எனக்கு எவ்விதத்திலாவது கெடுதி செய்யவேண்டும் எனத் தீர்மானங்கொண்டான்போலும். ஒருநாள் நான் ஏதோ ஒரு முக்கியமான காரியத்தின்பொருட்டு வெளியே சென்றிருந்தபோது ஜபல்பூர் அரசன் சில உண்மையுள்ள வேலைக்காரர்களைத் தன்னிடம் அழைத்து எனதருமை மனைவி கோமளத்தையும் புதல்வியாகிய ரமணியையும் இரவில் இரகசியமாய்க் கொல்லும்படி அவர்களுடன் ஆலோசனை செய்தானும். அவ்விதம் அவர்கள் தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றும் பட்சத்தில் அவர்களுக்குத் தகுந்தபடி சம்மானம் செய்வதாகவும் வாக்களித்தானும். அரசனுடைய உத்தரவின்படி அக்கொலைபாளர்கள் ஒருநாள் நள்ளிரவில் எனது மாளிகையிலுள்ள பின்கதவை உடைத்து என் மனைவியும், ஐந்துவயது குழந்தையாயிருந்த ரமணியும் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்த சயனக் கிருகத்தில் சத்தம் செய்யாமல் நுழைந்து, அவர்களைத் தங்களுடைய கத்திக்கு இரையாக்கினார்கள். சம்யுக்தா, என்ன செய்வது! விதியை

O73 R
N23

விலக்க யாரால் முடியும். முற்பிறப்பில் நான் என்ன பாவம் செய்தேனோ, யாருக்குச் சதி செய்தேனோ, எவ்வித தீமை புரிந்தேனோ, இப்பிறப்பில் நான் எனது அருமை மனைவி யையும் புதல்வியையும் இழக்க ஈசன் என் தலையில் விதித் தான். நடந்த சம்பவத்தை எனக்குத் தெரிவிக்க எனது வேலைக்காரர்கள் உடனே நானிருக்கும் இடத்தை வந்தடைந் தனர். சம்யுக்தா, அச்சம்பவத்தைக் கேட்டவுடன் பாவியா கிய நான் பட்ட துயரத்தை என்னவென்று சொல்வேன். மூர்ச்சை யடைந்து கீழே விழுந்ததுதான் எனக்குத் தெரி யும். வேறொன்றும் தெரியாது. எனதிருப்பிடம் வந்து சேர் ந்து இரண்டுமூன்று நாட்களாகச் சித்த சுவாதீனமில்லாமலே யிருந்தேன். யாரோ திருடர்கள் மாளிகையில் இரகசியமாய் நுழைந்து ஆபரணங்களை எடுத்துக்கொள்ள என் மனைவி யையும் மகளையும் கொன்றுவிட்டார்கள் என்று வேலைக் காரர்கள் எனக்குத் தெரிவித்தார்கள். அன்று முதல் இவ் வுலகத்தின்மேல் பற்றில்லாதவனாய்த் துறவறம் அடையச் சித்தங் கொண்டிருக்கும்போது ஒருநாள் ஜபல்பூர் அரசனு டைய வேலைக்காரன் ஒருவன் என்னிடம்வந்து ஓர் இரகசிய மான விஷயத்தை எனக்குத் தெரிவிக்க வந்திருப்பதாகச் சொன்னான். உடனே நான் அவனை ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று, அவன் என்னிடம் பேச விரும்பின இரகசியம் என்னவென்று வினவினேன். அரசனுடைய வார்த்தைகளை நான் கேளாமல் புத்தமார்க்கத்தை யனு சரித்து வந்தபடியால் அவன் என்மேல் கோபங்கொண்டு எனக்கு எவ்விதத்திலாவது தீமைபுரியச் சதி யாலோசனை செய்ததாகவும், அந்த ஆலோசனையின்படி சில வேலைக்காரர் கள் நான் அவ்விடம் இல்லாத காலத்தில் ஒருநாள் நள்ளி

ரவில் பின்கதவின் வழியாய் என் மாளிகையினுள்ளே நுழைந்து, அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்த என்மனைவியையும் புதல்வியையும் கொன்றுவிட்டதாகவும், தானும் நூதன மார்க்கத்தை இரகசியமாய் யனுசரித்து வருகிறபடியால் அம்மார்க்கத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு நேர்ந்த விபத்தை எவ்விதத்திலாவது தெரிவிக்க விருப்பங்கொண்டு என்னிடம் வந்ததாகவும் சொன்னான். என் மனைவியும் மகளும் திருடர்களால் கொலையுண்டார்கள் என்று எண்ணியிருந்த எனக்கு இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே ஒருவிதமான துக்கமும் மூர்க்கமும் ஒருங்கே உண்டாயின. அக்கொடுங்கோன் மன்னனுக்கு எவ்விதத்திலாவது புத்தி புகட்ட அந்த க்ஷணமே தீர்மானம் கொண்டேன். அக்காலத்தில் அவ்வரசனுக்கு இரண்டு வயதுள்ள பெண்மகவு ஒன்றிருந்தது. எனதருமைப் புதல்வியை அவன் கொன்றுவிட்டபடியால் அவனும் தன் புதல்வியை இழக்க வகைதேட ஆலோசித்தேன். ஆயினும், அவனைப்போன்ற பாதகனாய் அந்தச் சிசுவைக் கொல்ல எனக்கு மனமில்லை. ஆயினும், அவனுக்குப் புத்தி புகட்டுவது அவசியமாகத் தோன்றிற்று. ஆதலால், இவ்விஷயங்களை யெல்லாம் என்னிடம் தெரிவித்த அரசனது வேலைக்காரனுடைய உதவியினால் அக்குழந்தையை ஓர் இரவில் இரகசியமாய் அரசனுடைய அரண்மனையிலிருந்து எனதிருப்பிடத்திற்குக் கொணர்ந்தேன்.

'கொடுங்கோன் மன்னர்வாழும் நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே'

என்றபடி, உடனே அன்றிரவு நான் என் சொத்துக்களையும் அந்தக் குழந்தையையும் எடுத்துக்கொண்டு ஜபல்பூரைவிட்

டேச் சுமார் 14 வருஷங்களுக்கு முன், சுல்தான் சாலீம் அரசாண்டுவரும் ஆமதுநகரம் வந்தடைந்தேன். அக் குழந்தையைக் கொல்ல எனக்கு மனமில்லாதபடியாலும் என் புதல்வியின் சோகத்தைத் தீர்க்க எனக்கு வேறு குழந்தையில்லாமையாலும் அந்தக் குழந்தைக்கு மாண்டுபோன எனதருமைப் புதல்வியின் நாமமாகிய 'ரமணி' என்னும் பெயரையே சூட்டி, அதை என் புதல்வியைப்போல நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருகிறேன். ஜபல்பூரில் எனக்கு நேர்ந்த துன்பத்திலிருந்து ரஜபுத்திர இந்துக்களைக் கல்நெஞ்சமுள்ள கபடர்கள் என்றறிந்து அன்று முதல் வெறுக்க ஆரம்பித்தேன். நான் உயிரோடிருக்கையில் என் வளர்ப்புப் பெண்ணாகிய ரமணியை அம்மார்க்கத்தைச் சேர்ந்த ஒருவனுக்கும் கொடுப்பதில்லை யென்னும் தீர்மானமும் செய்தேன்.

'சம்யுக்தா, ரஜபுத்திர வீரனாகிய பிரதாப்சிங் நற்குண நற்செயல்கள் உள்ளவன் என்பதற்கு ஆக்ஷேபம் இல்லை. ரமணியைத் தீயினின்றுங் காப்பாற்றினவனானபடியால் அவனுக்கே அவளைக் கன்னிகாதானம் செய்வது நியாயம். ஆயினும், என் தீர்மானத்தை என்னால் மாற்ற முடியவில்லையே, அதற்கு நான் என்ன செய்வேன். கேவலமான ஸ்திதியிலிருப்பவனாக இருந்தபோதிலும் ரமணியை ஒரு புத்தமதத்தினனுக்குக் கொடுப்பேனே யொழிய இந்துமார்க்கத்தைச் சேர்ந்த ஒருவனுக்கும் அவளைக்கொடுக்கமாட்டேன். ஆகையால், சம்யுக்தா, நீ அவ்வீரனைப்பற்றிக் கவலைப்படவேண்டா. அவன் எனக்குச் செய்த பேருதவிக்காக ரமணியைத் தவிர எனக்குள்ள வேறு எதைக்கேட்டாலும் நான் அதை அவனுக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்' என்றார்.

இவைகளை யெல்லாம் அதிக விசனத்தோடும் பொறு மையோடும் செவியுற்ற சம்யுக்தை தனது நோக்கம் நிறை வேறாததைக்கண்டு மனவேதனையோடு புருஷோத்தமரை விட்டுப் பிரிந்தாள். இதுவரையில் ரமணியை யாரோ ஓர் ஏழை இந்துவினுடைய மகள் என்று நினைத்திருந்த சம்யுக் தை அப்போதுதான் அவள் கீர்த்திவாய்ந்த ஜபல்பூர் அரச னுடைய அருந்தவச் செல்வப் புதல்வி யென்று அறிந்து கொண்டாள்.

வீரனையே தனக்கு நாயகனைப் பெறவேண்டுமென அவன்மேல் அந்தரங்க காதல்கொண்ட ரமணி அவனை அடைவதற்கு வழிவகையறியாமல் ஊண் உறக்கமற்றதினால் நாளுக்கு நாள் உடல் மெலிந்து கொடியவியாதிக்கு உட்பட் டாள். அவ்வியாதியினுடைய உண்மையான காரணம் சம் யுக்தைக்கு மாத்திரம் தெரியுமேயொழிய வேறெவருக்கும் தெரியாது. புருஷோத்தமர், கைதேர்ந்த அநேக வைத்தி யர்களை வரவழைத்து, இரத்தவிருத்தி செய்யும் பல ஔஷ தங்களை அவளுக்குக்கொடுத்தார். சம்யுக்தை ரமணியினு டைய மனநோயை யறிந்து அவளைப் பல அன்பான வார்த் தைகளால் தேற்றினாள். மனநோய்க்கு மருந்துண்டோ? புரு ஷோத்தமர் அதனை யறியாமல் ரமணிக்கு மருந்துகளைக் கொடுத்து வருவதால் யாது பயன்? வீரனுக்குத் தன்னைக் கன்னிகாதானம் செய்வதாகப் புருஷோத்தமர் வாக்களிக் கும் பட்சத்தில் அவளுடைய கொடியவியாதி பஞ்சாய்ப் பறந்துவிடும். ரமணி வீரனை நினைத்து ஏக்கமடையாதபடி சம்யுக்தை அவளுக்கு எவ்வளவு ஆறுதல் சொன்னபோதி லும், அவளுடைய மனத்திலிருந்த வீரனைப்பற்றிய எண் ணத்தை அகற்ற முடியவில்லை. அவளுக்குச் செய்யப்படும்

சைத்திய உபசாரங்கள் எல்லாம் நெருப்பில் வார்த்த நெய்போல, அவளுற்ற நோயை மேன்மேலும் வளரச் செய்தன. ஆதலால், சம்யுக்தை ஓர் உபாயம் செய்தாள். அவள் ரமணியிடம் சென்று, அவளை நோக்கி, 'அம்மா, ரமணி, நீ ஒன்றுக்கும் கவலைப்படவேண்டா. உன் பிதா உன்னை வீரனுக்கே கன்னிகாதானம் செய்யத்தக்க ஏற்பாடுகளை நான் தேடுவேன். ஆதலால், நீ இப்போதே உன் கவலையை ஒழித்துவிடு. வீரனே, உன்னை மணம் புரிவான். நீ இந்த நிலைமையில் இருப்பதைப் பார்க்க என்மனம் சகிக்கவில்லை; உன் கவலைகளையெல்லாம் விட்டுவிட்டுச் சந்தோஷமாக இருப்பின் நான் உன் இஷ்டத்தை நிறைவேற்றி, உன்னை இன்புறச் செய்வேன். இதைப்பற்றி நீ சிறிதும் சந்தேகம் கொள்ளாதே' என்று அன்புடன் மொழிந்தாள். ஆழ்ந்த துக்கசாகரத்தில் அமிழ்ந்து கரை காணுமல் கிடக்கும் ரமணியினுடைய மனம் இதைக்கேள்வியுற்றதும் எப்போதாவது ஒருகாலத்தில் வீரனையடைந்து உயிர் வாழ்ந்திருக்கலாம் என்ற எண்ணத்தினால் சந்தோஷமடைந்தது. ஆனந்தத்தினால் ரமணி கண்ணீர்சொரிந்தாள். ஒளி மழுங்கி இருந்த அவளுடைய கண்கள் பிரகாசமடைந்தன. வாடியிருந்த அவளுடைய முகம் களங்கமற்ற பூரணசந்திரன்போல் பிரகாசமுற்றது. சம்யுக்தை மொழிந்த வார்த்தைகளைக்கேட்டு ரமணி தனக்கு உண்டான ஆனந்தத்தினால் பாயலை விட்டு எழுந்திருந்து சம்யுக்தையைப்பார்த்து, 'அம்மா சம்யுக்தா, வீரனை நான் அடையப்போகிறதில்லை யென்றும் அதனால் இவ்வுலகத்தில் நான் உயிர் வாழ்ந்திருப்பதற்கில்லை யென்றும் நினைத்திருந்தேன். நீ இப்போது மொழிந்த தேறுதலான வார்த்தைகளைக்கேட்டு என் மனம் ஆனந்த

சாகரத்தில் அமிழ்ந்து கிடக்கிறது. இவ்வுபகாரத்திற்குப் பதிலாக நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யப்போகி றேன். அதற்குத் தகுந்த பிரதியுபகாரம் என்னால் செய்ய முடியாமற் போனபோதிலும், உன்னுடைய நற்குணத்தையே எந்நாளும் என் உள்ளத்தில் சிந்தித்துக்கொண்டிருப்பேன்' என்றாள்.

சம்யுக்தை: 'என் கண்மணி, கைம்மாறுகருதியா நான் உனக்கு உதவிபுரிய எண்ணங் கொண்டேன். நீ உன் கொடிய வியாதியினின்றும் சுகமடைந்து முன்போல் இன் புற்றிருப்பாயாகில் அதுவே எனக்குப்போதும். ரமணி, உன்னுடைய தாய்க்குப் பதிலாக நான் இருப்பதால் உன் னுடைய சுகத்தை நாடுவது என் கடமையல்லவா?' என்றாள்.

வீரனைத் தனக்கு நாதனாக அடையமுடியா தென்று ஏக்கங்கொண்டிருந்த ரமணியைச் சம்யுக்தையினுடைய வார்த்தைகள் ஆனந்தமடையச் செய்தன. நாளுக்கு நாள் அவள் கொடிய வியாதியினின்றும் குணமடைந்து வந்தாள். உண்மையான காரணத்தை உணராமல், புருஷோத்தமர் ரமணிக்கு இரத்த விருத்தியுண்டாகும்படி பல மருந்துகளைக் கொடுத்து வந்தமையால் அம்மருந்துகளின் குணத்தினா லேயே அவள் சுகமடைந்து வருகிறாள் என்று எண்ணினார். ஆனால், சம்யுக்தையினுடைய சாதுரிய வார்த்தைகளே அவ ளுடைய மனநோய்க்கு மருந்தாயிற்று. அன்று முதல் ரமணி சம்யுக்தையைத் தன் பெற்ற தாயினும் பெரிய தாயாய் நேசித்து வந்தாள்.

புருஷோத்தமருடைய மாளிகையை விட்டுப் புறப் பட்ட வீரன் வியாதியினின்று சுகமடைந்தபோதிலும்,

தான் முன் பெற்றிருந்த வலிமையை அடைந்தானில்லை. ஆயினும், நற்குணங்கள் பொருந்திய அவனுக்கு ஒரு பிரபுவினுடைய வீட்டில் சோம்பேறியாய்க் காலம் கழிக்கப் பிரியமில்லை. கடவுள் தனக்கு அளித்துள்ள கைகால் முதலிய அவயவங்களை நல்வழிகளில் உபயோகப்படுத்தி, நற்காரியங்களைச் செய்து, தெய்வபக்தியும், பரோபகார சிந்தையும் உடையனாய்க் காலம் கழிக்கவேண்டுமென்பதே அவனுடைய நோக்கம். ஒருவனுக்குக் கண், செவி, கை, கால்முதலிய அவயவங்கள் இருந்தும் தனக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் வழிகளில் அவைகளை உபயோகப் படுத்தாமல் திரிவானாகில் அவனை நாம் 'நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்' என்றே சொல்லவேண்டும். பிரபுக்களிடத்தில் இச்சகமான வார்த்தைகளைப்பேசி அவர்களுடைய தயவைப்பெற்றுச் சதா அவர்களுடைய சம்ரக்ஷணையி லிருந்துகொண்டு ஒன்றுக்கும் உதவாமல் பூமிக்குப்பாரமாய் உல்லாசமாய்க் காலம் கழிக்கும் ஆண்பிள்ளைகள் இவ்வுலகத்தில் அநேகர் உளர். ஒரு வேலையும் செய்யாமல் வேதாந்தங்கள் பல பேசிக்கொண்டு 'செடிவைத்தவன் தண்ணீர் வார்க்கமாட்டானா?' என்று திரியும் சோம்பேறிகள் பலர். அத்தன்மையுள்ள சோம்பேறிகளுக்கு அன்னதான சாலைகள் அமைத்து, விவேகமின்றி விருந்திடுவது புண்ணியத்தின் பாற்படுமோ?

வீரன் மாளிகையைவிட்டுப் புறப்பட்டு, முன் தங்கியிருந்த சத்திரத்தை அடைந்தான். அக்காலத்தில் ஆண்டிகள் சிலர் அவ்விடத்தில் அமர்ந்திருந்தனர். வீரனைக் கண்டதும் அவர்கள் ஆனந்தமடைந்து அவனுக்கு நல்வரவு கூறினார்கள். 'ஐயா, சௌக்கியம்தானா? இவ்வளவு நாளாக எங்குச் சென்றிருந்தீர்?' என்று ஒருவன் வீரனை வினவினான். 'ஐயா,

என்னவென்று சொல்வேன், கடவுளுடைய திருச்செயலை! ஒரு புண்ணியவான் இவ்விடம்வந்து நோயாளியாய்க்கிடந்த என்னைத் தமது இருப்பிடத்திற்கு அழைத்துச்சென்று அன்புடன் ஆதரித்தார். அந்த உத்தமர் ஏழையாகிய என்னிடத்தில் கைம்மாறு ஒன்றும் கருதவில்லை. எல்லாம் வல்ல இறைவன்தான் அவருக்கு அருள்புரியவேண்டும்' என்று வீரன் மறுமொழி யுரைத்தான். வீரனிடத்தில் அந்த ஆண்டிகள் அனைவரும் அன்பு கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன், வீரனைநோக்கி, 'ஐயா, நீங்கள் இந்நகருக்கு வந்து வெகு நாளாகிறதே, உம்முடைய உற்றார் பெற்றாரையும் உம்முடைய ஊரையும்விட்டு இவ்விடத்தில் தனித்திருப்பதற்குக் காரணமென்ன?' என்றான். அதற்கு வீரன் 'ஐயா, நான் ஒரு பரதேசி. எனக்கு உற்றாரும் இல்லை, பெற்றாருமில்லை. சொந்த ஊரென்று எனக்கு ஓர் ஊரும் இல்லை. இந்நகரை நான் அடைவதற்கு முன்பு ஒரு ரஜபுத்திர அரசனுடைய சேனையில் யுத்தவீரனாயிருந்தேன். இந்நகரையாளும் சுல்தானுக்கும், அந்த ரஜபுத்திர அரசனுக்கும் யுத்தம் நேர்ந்த காலத்தில் சுல்தானால் நான் சிறை பிடிக்கப்பட்டு இந்நகருக்குக் கொண்டுவரப் பட்டேன். அந்த சுல்தான் கிருபையால் நான் இன்னும் இவ்விடத்தில் உயிரோடு வாழ்ந்திருக்கின்றேன்' என்றான்.

'இவ்வீரன் யார்?' என்ற கேள்விக்குத் தகுந்த பதில் இன்னும் வெளிவரவில்லை. தாழ்மையே தனக்குத் தகுதியாகப்பெற்றுள்ள ஓர் அரசிளங் குமாரனோ இவன், அல்லது உண்மையிலேயே அவன் உரைத்ததுபோல் உற்றார் பெற்றார் அற்ற அகதிதானோ! அவனது வரலாற்றை அறிந்தவர் அமது நகரத்தில் ஒருவருமில்லை. அவனைப்பற்றி ஒருவ

ருக்கும் ஒன்றும் தெரியாது. ஆமது நகரத்தில் கொஞ்ச காலமாய் வசித்து வரும் ரஜபுத்திர வீரனாகிய பிரதாப்சிங் யார்? என்ற கேள்விக்குத் தகுந்த விடையளிப்பவர் அங்கு ஒருவருமில்லை. வீரனும் தன்னுடைய உண்மைகளை ஒருவருக்கும் தெரிவிக்கவில்லை. அவனுடைய வரலாறு இரகசியமாயிருந்தது. அந்தச் சத்திரத்தில் வசித்த ஆண்டிகளும் அவனுடைய வரலாற்றையறியத் துணியவில்லை. எல்லாம் மறைபொருளாயிருந்தது. ஆண்டிகளெல்லாம் அன்னத்திற்காகச் சத்திரத்தைவிட்டு வெளியகன்ற பின்பு வீரன் அவ்விடத்தில் தனிமையாயிருந்தான். அப்போது பல எண்ணங்கள் அவனுடைய மனத்தில்தோன்றின. ஆமது நகரத்தில் எப்படி நான் உயிர்வாழ்ந்திருப்பது. புருஷோத்தமருடைய வேண்டுகோளையும் மறுத்து அவர் மாளிகையையும் விட்டு வெளிப்போந்தேன். இப்போது ஜீவனத்திற்கு என்ன செய்வது? எவரிடம் சென்று யாசிப்பது? யாசிப்பதைவிட பட்டினியால் உயிர் விடுவதே மேன்மை. வயிறுவளர்க்க வேலை செய்தே தீரவேண்டும். எவரிடம் சென்று நான் வேலைசெய்வது. எந்த வேலையில் வல்லவன் என்று நான் வெளியில் சொல்வது. ஆயினும், ஒன்று செய்வேன், சுல்தான் சாலீமிடத்தில் சென்று தம்முடைய ராணுவத்தில் என்னை ஒரு யுத்தவீரனாகச் சேர்த்துக்கொள்ளும்படி நான் விண்ணப்பம் செய்வேன். என்னைக் கொலையாளியினுடைய கைக்குத் தப்புவித்து என்னுயிரைக் காப்பாற்றின அவர் என் வேண்டுகோளுக்கிரங்கி என்னை ஆதரிக்கமாட்டாரா.' என்று வீரன் தனக்குள்ளே ஆலோசித்து, சுல்தானிடம் சென்று, அவருடைய சேனையில் உத்தியோகம் செய்யச் சித்தங்கொண்டான். சத்திரத்திலுள்ள

ஆண்டிகளெல்லாம் மீண்டும் வந்த பிறகு வீரன் தன்னுடைய தீர்மானத்தை அவர்களுக்குத் தெரிவித்தான். அவர்களும் அதை ஆமோதித்தனர். மறுநாள், வீரன் அதிகாலையில் எழுந்திருந்து, காலக்கடன்கள் யாவும் முடித்து வெண்மையான வஸ்திரத்தை யணிந்துகொண்டு சுல்தானுடைய அரண்மனையை நோக்கிச் சென்றான்.

அந்த சுல்தான் அரண்மனை ஆகாயமட்டும் அளாவி நின்ற உயர்ந்த மதில்களால் காவல்செய்யப்பெற்றிருந்தது. மதிலைச்சுற்றிலும் பகைவர் வந்தடையா வண்ணம் ஆழமான அகழியொன்று அமைந்திருந்தது. அரண்மனை வாயிலானது சித்திரம் தீர்ந்த இருப்புக்கதவினால் அடைக்கப்பெற்றிருந்தது. வாயிலுக்கு முன்னே இரண்டு வீரர்கள் வெகு ஜாக்கிரதையாய்க் கைகளில் உருவிய வாளுடன் காவல் செய்துகொண்டிருந்தார்கள். ரஜபுத்ர வீரனாகிய பிரதாப் சிங் அரண்மனையை யடைந்தான். அரண்மனை வாயிலைக் காவல் செய்துகொண்டிருந்த சேவகரில் ஒருவனை நோக்கி, 'ஐயா, நான் சுல்தானைக் காண விரும்புகிறபடியால் தயவு செய்து என்னை உள்ளே விடுவீரா?' என்று கேட்டான்.

**சேவகன் :—** 'சுல்தானைக் காணவிரும்புகிற யாவரையும் நாங்கள் உள்ளே விடுவதில்லை. உம்முடைய அலுவல் இன்னதென்று தெரிவித்தால் அதை அவரிடம் தெரிவித்து அனுமதிபெற்று வந்து உம்மை உள்ளே விடுவோம். அவருடைய அனுமதியின்றி நாங்கள் யாரை யாவது உள்ளே விடுவோமாகில், எங்களுக்கு உத்தியோகம் போய்விடும்' என்றான்.

**வீரன் :—** 'ஐயா, யான் ஒரு ரஜபுத்திர வீரன். சுல்தானுடைய ராணுவத்திற் சேர விருப்பங்கொண்டு வந்தி

ருக்கிறேன். இந்த விருப்பத்தை அவரிடம் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். இதுதான் என் அலுவல்' என்றான்.

சேவகன்:—'ஐயா, அப்படியானால் அதற்கு இது இடமன்று. சேனையில் உத்தியோகம் வேண்டுமானால் சேனைத்தலைவரிடம் போகவேண்டும்' என்றான்.

வீரன்:—'ஐயா, அது ஒழுங்கா யிருந்தபோதிலும், சுல்தானிடம் சென்று என் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்வதில் குற்றமொன்று மில்லையே' என்றான்.

இவ்வாறு அம்மூவரும் அரண்மனைக்கு வெளியில் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் திடீரென்று வாயிலின் இருப்புக்கதவு திறக்கப் பெற்றது. ஒரு வீரன் ஆயுதபாணியாய்க் குதிரைமேல் சவாரி செய்துகொண்டு வெளியே வந்தான். 'சுல்தான் வருகிறார்' என்று பறை சாற்றினார்கள். கொஞ்ச நேரத்திற்குள் ஆயுதபாணிகளாய்ப் பல யுத்த வீரர்கள் குதிரைகளின்மேல் சவாரி செய்துகொண்டு வெளியே வந்தார்கள். வாயுவேகம் மனோவேகமாய்ச் செல்லக்கூடியதும், அசுவ லக்ஷணங்கள் அனைத்தும் அமையப் பெற்றதும், தங்க அணிகலன்களால் அலங்கரிக்கப்பெற்ற சேணங்களுடையதுமான இரண்டு குதிரைகள் அழகிய இரதம் ஒன்றை இழுத்துக்கொண்டு வந்தன. அந்த இரதத்தில் சுல்தான் சாலீம் வீற்றிருந்தார். இரதம் தன்னருகில் வந்ததும் பிரதாப்சிங் சுல்தானுக்குத் தலை வணங்கி நமஸ்கரித்தான். சுல்தானுடைய பார்வை வீரன்மேல் பட்டதும், அவர் இரதத்தை நிறுத்தச் சொல்லித் தமது சகோதரனாகிய சையத் அப்துல்லாவைக் கண்டதுபோல் உள்ளத்தில் ஆனந்தமடைந்து, வீரனைத்தமக்கருகில் வரவ

ழைத்து அவனுடைய விருப்பம் என்னவென்று அன்புடன் வினவினர். பிரதாப்சிங் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்ததும், சுல்தான் ஆனந்தமடைந்து, தாம் மீண்டும் வருகிறவரையில் அரண்மனையில் தங்கி யிருக்கும்படி ஆஞ்ஞாபித்தார் இரதத்தைப் பின்தொடர்ந்து வந்த வேலைக்காரர்கள் பலர் சுல்தானை வழிவிட்டனுப்பிய பின்னர், வீரனைத் தங்களுடன் அழைத்துக்கொண்டு அரண்மனையை யடைந்தனர். சுல்தான் வீரனிடம் பாராட்டின அன்பைக் கண்ணுற்ற வேலைக்காரர்கள் அவனுடைய தயவைப் பெறும் பொருட்டு, அவனுக்கு அன்னபானுதிகள் அளித்துப் பணிவிடை செய்தார்கள். வேறு சிலர், ஒரு பக்கத்தில் அமர்ந்து பின் வருமாறு சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள்.

இந்த வீரன் யார்? இவன் மீது சுல்தான் எவ்வளவு அன்புகூர்ந் திருக்கிறுர். இவனைக்கண்டதும் இரதத்தை நிறுத்தி அன்புடன் சில வார்த்தைகளைச்சொல்லி அரண்மனைக்கு அனுப்பினுர். இவன் அதிர்ஷ்டசாலி என்பதற்கு ஐயமில்லை.'

இவ்வீரனின் பெயர் பிரதாப்சிங். இவன் ஒரு ரஜபுத்திரவீரனும். கொஞ்ச காலத்திற்கு முன் நடைபெற்ற போரில் சிறையாக்கப்பெற்று இந் நகர்க்கு வரலாயினுன். அதற்கு முன் அவனுடைய வரலாற்றைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது. இவ்வீரன் சுல்தானுடைய சகோதரனுகிய சையத் அப்துல்லாவைப்போ லிருக்கிறுன் என்று அவனைக் கொலைபுரிய மனமில்லாமல் அன்றுமுதல் அவனிடத்தில் அன்புகூர்ந் திருக்கிறுர்.

இவ்வீரனை உற்றுநோக்குங்கால் உயர்குலத்தில் உதித்தவன்போல் தோன்றுகிறது. ஒரு வேளை இவன் சையத்

அப்துல்லாவின் மகனு யிருக்கலாமோ என்று அவனைப் பார்த்தவர்கள் சந்தேகிப்பதற்கு இடமுண்டு. அவருடைய சாயலையே இவ்வீரன் பெற்றிருக்கிறான்.

'சையத் அப்துல்லா இப்போது எங்கே?'

'பல்லாண்டுகளுக்கு முன் வேட்டையாடச் சென்றவர் இன்னும் திரும்பி வரவில்லை. அவரைக் காணுமல் சுல்தான் பல நாள் ஏக்கமுற்றிருந்தார். இப்போது அவருடைய இருப்பிடம் தெரியவில்லை. அவரைக் கண்டடைவதற்குச் சுல்தான் செய்த முயற்சிகளெல்லாம் அவலமாயின. பிறகு, தமது சகோதரனைத் தேடுவதை யொழித்தார். காட்டிலுள்ள கொடிய ஜந்துக்களுக்கு அவர் இரையாகி மடிந்திருக்கலாமென்று சிலர் எண்ணுகிறார்கள். உயிரோடிருக்கிறாரென்றும் இறந்துவிட்டார் என்றும் ஒருவராலும் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை. இவ்வீரனைச் சுல்தான் கண்ணுற்ற காலத்தில் பல்லாண்டுகளுக்குமுன் காணுமற்போன தமது சகோதரனையே கண்டடைந்ததைப்போல் ஆனந்தமடைந்தார்.

இவ்வீரன் ஒருவேளை அப்துல்லாவின் மகனு யிருக்கலாமென்று சந்தேகிக்க இடமுண்டென்று சொன்னீரே! இவ்வீரன் ரஜபுத்திரனுயிற்றே, இவன் எப்படி அவருக்கு மகனு யிருக்கலாம்?'

இவ்வாறு அரண்மனையிலுள்ள வேலைக்காரர்கள் சம்பாஷித்துக்கொண் டிருக்கும்போது, 'சுல்தான் வருகிறார்' என்று பறை சாற்றப்பெற்றது. வேலைக்காரர்கள் குறிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றனர். வீரன் தனிமையாய் ஓரிடத்தில் இருந்தான். சுல்தான் அரண்மனைக்குவந்து வெகுநேரமாயிற்று. வீரனைத் தம்முடைய சமுகத்திற்கு இன்னும்

வரவழைக்கவில்லை. அவர் சேனைத்தலைவரோடு சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார் என்று சமாசாரம் வந்தது. சிறிது நேரம் சென்றபின்பு ஒருவன் வீரனிடம் வந்து, அவனை நோக்கி, 'ஐயா, சுல்தான் உம்மைத் தம்முடைய சமுகத்திற்கு உடனே வரச்சொன்னார்' என்றான். உடனே, பிரதாப்சிங் தன்னுடைய உடையைச் செவ்வைப்படுத்திக்கொண்டு சுல்தான் வீற்றிருந்த சபாமண்டபத்திற்குள் சென்று தன் தலை வணங்கி நின்றான். வீரனைக் கண்ணுற்றதும், சுல்தான் சேனைத்தலைவரை நோக்கி, 'நண்பரே, இவ்வீரன் பல்லாண்டுகளுக்கு முன் காணாமற்போன நம்முடைய சகோதரனாகிய சையத் அப்துல்லாவைப்போலிருக்கிறான் பார்த்தீரா?' என்றார். அதனைக் கேட்ட சேனைத்தலைவர், 'ஆம் மகிபதி!' என்றார்.

சுல்தான்:—'வேட்டையாடச் சென்றவன் இன்னும் திரும்பிவாராதகாரணம் என்னவோ? கானில்வாழும் கொடிய ஜந்துக்கள் அவனைக் கொன்று தின்றுவிட்டனவோ, அல்லது வழியறியாமல் வெகுதூரம் சென்று எவ்விடத்திலாவது அகதியாய் வசிக்கின்றனனோ? என்னவோ, ஒன்றும் தெரியவில்லை. அவனைக் கண்டடைய நாம் பல ஒற்றர்களைப் பல இடங்களுக்கு ஏவியும், நாம் செய்த முயற்சிகளெல்லாம் அவலமாயின. நமது தாயார் அவனைக் காணாமல் ஏக்கமுற்றே இறந்தாள். இவ்வீரனுடைய முகச் சாயலுக்கும் அப்துல்லாவின் முகச் சாயலுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. அவனைப் பார்த்தவர்களெல்லாம் இவ் வீரன் ஒருவேளை அவனுடைய புத்திரனாயிருக்கலாமோ என்று சந்தேகிப்பதற்கு இடமுண்டு. நண்பரே, நமது சகோதரனாகிய அப்துல்லா வேட்டைக்குப் புறப்படும்போது சரியாய்

இவ்வீரனுடைய வயதுள்ளவனு யிருந்தான். இவனை நாம் முதலில் கண்ணுற்றபோது, நம்முடைய சகோதரனை நாம் காணுமல் பல வருஷங்கள் சென்றபோதிலும் அவன் எவ்வளவு யௌவனமும் அழகும் வாய்ந்தவனுய்ப்புறப்பட்டானே அவ்வண்ணமே கடவுளுடைய கிருபையால் திரும்பி வந்துவிட்டான் என்று நாம் சந்தேகித்தோம். ஆனுல், இவனுடைய பெயரை நாம் அறிந்த பின்பு நம்முடைய சந்தேகம் நீங்கிற்று. நமது தாயார் இப்போது வாழ்ந்திருப்பா ராகில் இவ்வீரனை அப்துல்லாவென்று எண்ணித் தம்முடன் வைத்துக்கொள்வார்கள்.

சேனைத்தலைவர் :—மகிபதி, தாங்கள் கூறுவது உண்மையே. எல்லாம் கடவுள் செயல்; நம்மால் என்ன முடியும்.

சுல்தான் வீரனைத் தமக்கருகில் வரவழைத்து அவனை நோக்கி, 'பிரதாபா, கொஞ்ச காலத்திற்குமுன் நடைபெற்ற போரில் உன்னுடைய கீர்த்திப் பிரதாபத்துக் குரிய செயல்களை நம்முடைய நண்பர் கண்ணுற்றதாக அவரே நம்மிடத்தில் உனக்காகப் பரிந்துபேசுகிருர். ஆகையால் நாம் உன்னை நமது சேனைக்கு உதவித் தளகர்த்தனுக நியமிக்கச் சித்தங் கொண்டிருக்கிறேம். அதற்கு நீ என்ன சொல்லுகிறுய்?' என்றுர்.

பிரதாப்சிங் :—'மன்னரே, அடியேன் தங்களிடம் கூற வேண்டியது ஒன்றுமில்லை. தாங்கள் ஏழைமீது அவ்வளவு தயை பாராட்டியது அடியேன் பாக்கியமே. ராஜபக்தியோடும் உற்சாகத்தோடும் தேவரீருக்கு உழைக்க யான் கடமைப்பட்டிருக்கிறேன்' என்றுன்.

சுல்தான் :—'பிரதாபா, உன்னுடைய விசுவாசத்தைப் பற்றி நாம் சந்தேகிப்பதில்லை. உன்னிடத்திலுள்ள மேன்மை

யான குணங்களை உன்னுடைய தோற்றமே தெரிவிக்கிறது' என்றார்.

வீரன், கடவுளுடைய கருணையை நினைந்து வியப்படைந்தவனாய் சுல்தானிடம் விடைபெற்று அரண்மனையை விட்டுப் புறப்பட்டான். வீரனைச் சுல்தானுடைய ராணுவத்திற்கு உதவித்தளகர்த்தனாக நியமித்தசமாசாரம் அரண்மனை முழுவதும் உடனே பரவிற்று. வீரன் அரண்மனையைவிட்டு வெளியே புறப்பட்ட காலத்தில் அவன் எதிரில் தோன்றின வேலைக்காரர்களெல்லாம் அவனுக்குத் தலை வணங்கி நமஸ்காரம் செய்தார்கள். அரண்மனைவாயிலைப் பாதுகாக்கும் சேவகர், வீரனுடைய வரவிற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று வாயிற் கதவு திறக்கப் பெற்றது. யுத்தவீரர்களில் சிலர் தன்னைப் புடை சூழப் பிரதாப்சிங் வெளியே வந்தான். வீரன் அரண்மனைக்குள் போகத் தடைசெய்த சேவகர் இப்போது அவனைக்கண்டதும் தலை வணங்கி பணிந்து நமஸ்காரம் செய்தார்கள். எல்லாரும், 'உதவித் தளகர்த்தரே; வாழ்க, வாழ்க' என்று ஆசி கூறி, அவனை வழிவிட்டு அனுப்பினார்கள். தெய்வ பக்தியுடனும், பரோபகார சிந்தையுடனும், ஆண்மையுடனும் ஜீவிப்பவர்களுக்குக் கடவுள் காட்டும் அன்பு இதுவே. பிரதாப்சிங் சுல்தானுடைய ராணுவத்தில் யுத்தவீரனாக அமரும்படி அவரிடம் சென்று விண்ணப்பம் செய்ய, யுத்த வீரர்களுக்கெல்லாம் மேலான பதவி அவனுக்குக் கிடைக்கும்படி கடவுள் அநுக்கிரகம் புரிந்தார்.

அரண்மனையை விட்டுப் புறப்பட்ட வீரன் சத்திரத்திலுள்ள தன்னுடைய வஸ்திரங்களைக் கொண்டுவரும்படி அவ்விடம் சென்றான். அவனைக் கண்டதும், ஆண்டிகள்

'ஐயா, வாருங்கள், வாருங்கள், போனகாரியம் ஜயம்தானா?' என்று, அவனை அன்புடன் வினவினார்கள். வீரன் அவர்களை நோக்கி, எல்லாம் வல்ல இறைவனுடைய கிருபையால் போனகாரியம் ஜயந்தான். சுல்தான் என்னைத் தமது ராணுவத்திற்கு உதவித் தளகர்த்தனாக நியமித்தார்' என்றான். ஆண்டிகள் அதைக்கேட்டதும் தங்களுடைய மனத்தில் தோன்றின ஒரு ஆச்சரியத்தினால் என்ன செய்வதென்று தெரியாமல் எல்லாரும் எழுந்திருந்து வீரன் முன் தலைவணங்கி நின்றார்கள். வீரன் அவர்களைப் பார்த்து, 'உத்தம குணம் வாய்ந்த பெரியோரே, இந்தக் கோலம் என்னத்திற்கு? உங்களுடைய அன்பே எனக்குப் போதும், அமருங்கள்' என்று சொல்லி, தானும் அவர்கள் நடுவில் அமர்ந்து, சிறிதுநேரம் அன்புடன் அவர்களோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தான். அப்போது ஆண்டிகளில் ஒருவன் அவனைநோக்கி, 'மேன்மைவாய்ந்த ஐயனே, உங்களுடைய மனத்தாழ்மையை நாங்கள் என்னவென்று சொல்லுவோம். சுல்தானுடைய ராணுவத்தின் உதவித் தளகர்த்தருக்கும், அன்றாடம் அன்னத்திற்குப் பிச்சையெடுக்கும் ஆண்டிகளுக்கும் எவ்வளவு வித்தியாசம்! உங்களுடைய மேன்மையான குணங்களுக்கு இதற்கும் மேலான உத்தியோகம் உங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்பது எங்கள் விருப்பம்' என்றான்.

பிரதாப்சிங் சத்திரத்திலுள்ள ஆண்டிகளோடு சிறிது நேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்த பின்பு, அவர்களிடம் விடைபெற்றுத் தனக்கென்று ஏற்பட்டிருக்கும் மாளிகைக்குச் சென்றான். இவ்வாறு பிரதாப்சிங் தனக்குக் கிடைத்த மேலான உத்தியோகத்தைச் சில நாள் வகித்து வந்தனன்.

ரமணிக்கு வீரனையே நாயகனுக்கத் தீர்மானம்கொண்ட சம்யுக்தை புருஷோத்தமரிடம் எவ்வளவு பரிந்து பேசின போதிலும் தன்னுடைய காரியம் சித்திக்க வில்லையென்று கண்டு, வேறு ஓர் ஏற்பாடு செய்ய ஆரம்பித்தாள். 'வீரன், ரமணிக்கு நாயகனுக வேண்டுமானுல்; அவனே அதற்குவேண்டிய முயற்சி தேடவேண்டும். ரமணியை மணம்புரிய அவனுக்குப் பிரியமிருக்குமோ! இராதோ! நாம் அவனிடம் சென்று அவனுடைய எண்ணத்தை அறியவேண்டும். ரமணி அவன்மேல் கொண்டிருக்கும் காதலின் மிகுதியை அவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும். மேலும், ரமணி, புருஷோத்தமருடைய புதல்வியல்லள் என்றும் தெரிவிக்க வேண்டும். இவ்விஷயங்களை யெல்லாம் நாம் அவனுக்குத் தெரிவித்தால்தான் அவன் ரமணியை மணம்புரிய முயற்சி செய்வான்.

'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்' என்னும் முதுமொழி பொய்யாகாது. இராஜ சேகரனுடைய குணத்தை யறியாமல், புருஷோத்தமர் ரமணியை அவனுக்குக் கொடுக்கத் தீர்மானித் திருக்கிருர். அப்படியானுல் அவள் சீக்கிரத்தில் இறந்துபடுவாள் என்பதற்குச் சந்தேகமில்லை. அவள் தன்னுடைய யௌவனபருவத்தில் இறந்து போவதற்குக் காரணம் புருஷோத்தமரே. ஆகையால், இவ்விஷயங்களை யெல்லாம் நன்ருய் ஆராய்ந்தறிந்த நாம் உடனே வீரனிடத்தில் சென்று ரமணியினுடைய மன நிலையையும் அவள் ரஜபுத்திர வீரனுடைய புதல்வி என்பதையும் அவனுக்குத் தெரிவித்து, ரமணியை மணம்புரிய முயற்சி செய்யுமாறு அவனை நாம் ஏவி விடவேண்டும்' என்று, சம்யுக்தை தனக்குள்ளே தீர்மானித்து வீரனைக்

கண்டையைப் புறப்பட்டாள். அவனுடைய இருப்பிடம் சத்திரந்தான் என்று நினைத்துச் சம்யுக்தை சத்திரத்தை நோக்கிச் சென்றாள். அவ்விடத்திலுள்ள ஆண்டிகளெல்லாம் அன்னத்திற்கு வெளியே சென்றிருந்தார்கள். வீரனையும் அவ்விடத்தில் காணேம். சம்யுக்தை உடனே மாளிகைக்குத் திரும்பாமல், 'இவ்விடத்திலுள்ள ஆண்டிகளைக் கண்டாவது வீரனது இருப்பிடத்தைப்பற்றி அவர்களை விசாரிப்போம்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு ஆண்டிகள் வருகிற வரையில் அவ்விடத்தில் தங்கியிருந்தாள். கொஞ்ச நேரத்திற்குள் அவர்களும் வந்து சேர்ந்தார்கள். வந்தவுடனே சம்யுக்தை அவர்களை நோக்கி, 'இந்தச் சத்திரத்தில் சில நாட்களுக்கு முன் வியாதியாய்க் கிடந்தவீரனை இன்னவிடத்தில் காணலாமென்று தயவுசெய்து நீங்கள் சொல்லுவீர்களா?' என்று வினவினாள். அவர்களில் ஒருவன், 'அம்மா, சில நாட்களுக்குமுன் அவ்வீரர் இவ்விடத்தில் தான் தங்கியிருந்தார். ஆனால், சுல்தான் அவரைத் தமது சேனைக்குத் தளகர்த்தராக நியமித்தபடியால் அவருக்கென்று அமைக்கப்பெற்றுள்ள மாளிகையில் வசித்து வருகிறார்' என்று மறுமொழி சொன்னான். இவ் வார்த்தைகளைக் கேட்டவுடன் சம்யுக்தைக்கு உண்டான சந்தோஷத்திற்கு ஓரளவில்லை. அச்செய்தியை உடனே ரமணிக்குத் தெரிவிக்க ஆசைகொண்டாள். ஆயினும், தான் வந்தநோக்கம் இன்னும் நிறைவேறாததைக் கண்டு, அங்கிருந்த ஆண்டிகளில் ஒருவனை நோக்கி, 'ஐயா, தயவுசெய்து நீர் என்னை வீரனதிருப்பிடத்திற்கு அழைத்துச் செல்வீரா?' என்று பணிவுடன் வினவினாள். உதவித்தளகர்த்தருடைய தயவைச் சம்பாதிக்க விருப்பங்கொண்ட ஆண்டி, உடனே அதற்கு

உடன்பட்டான். ஆண்டியினுடைய உதவியால் சம்யுக்தை வீரனுடைய இருப்பிடத்தை யடைந்தாள். யுத்த வீரர்கள் அல்லும் பகலும் அவனுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தார்கள். வீரனுக்குத் தன்னுடைய வரவைத் தெரிவிக்கும்படி சம்யுக்தை வெளியில் நின்றுகொண்டிருந்த வேலைக்காரன் ஒருவனை வேண்டினுள். வேலைக்காரன் மாளிகைக்குட் சென்று, 'ஐயனே, யாரோ ஓர் அம்மையார் தங்களைக் காணுமாறு வந்து வெளியில் காத்திருக்கிறார். அவர்களுடைய பெயர் சம்யுக்தையாம்' என்று தெரிவித்தான். 'சம்யுக்தை' என்ற பெயரைக் கேட்டமாத்திரத்தில், பிரதாப்சிங் அவளுக்கு நல்வரவு கூறி எதிர்கொண் டழைக்க மாளிகையின் வாயிலை வந்தடைந்தான். வீரன் அவளைக் கண்ணுற்றதும், 'அம்மா, வாருங்கள், அடியேனை நாடி இவ்வளவு தூரம் வந்த காரணம் என்ன? வாருங்கள், வாருங்கள்' என்று சொல்லி, உள்ளே அழைத்துச் சென்று, ஓர் ஆசனமிட்டு அவளை அமரச் செய்து, தன்னை நாடிவந்த காரணத்தைப் பணிவுடன் வினவினன். சம்யுக்தை, 'ஐயா, நான் உங்களிடம் ஒரு முக்கியமான காரியத்தைத் தெரிவிக்க வந்திருக்கிறேன்' என்று சொல்லி, அவ்விடத்தில் வேறொருவரும் இல்லாதது கண்டு, தான் வந்த நோக்கத்தை அவனிடம் வெளியிட்டாள்.

ஆமதுநகரத்தின் கடை வீதியிலே ஓரிடத்தில் ஒருநாள் பெருங்கூட்டமா யிருந்தது. போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லாரும் அவ்விடத்தில் கொஞ்சநேரம் தங்கி நின்றார்கள். 'இதென்ன வேடிக்கை' என்று ஆச்சரியத்துடன் வினவினவர்களுக்கு, 'யாரோ ஒரு மொட்டைத் தலையன் பிரசங்கம் செய்கிறான்' என்று பதிலளிக்கப்பட்டது. உல

கப்பற்றை முற்றிலும் வெறுத்துத் துறவறம்பூண்ட யாரோ ஒரு புத்த சந்நியாசி புத்தமார்க்கத்தைப்பற்றிக் கடை வீதியிலே பிரசங்கம் செய்துகொண் டிருந்தார். அவர் அணிந்திருந்த உடை மஞ்சள் நிறமானது. அவருடைய தலை, சவரம் செய்யப்பெற்றிருந்தது. பிச்சை யெடுக்கும் கிண்ணமும், ஜலத்தை யுட்கொள்ளும்போது அதிலுள்ள ஜந்துக்களை விலக்க உபயோகப்படுத்தும் ஒரு நீர்வடிதட்டும் அவருக்குப் பக்கத்தில் இருந்தன. வலக்கையில் பெரிய விசிறியொன்றிருந்தது. இவற்றையெல்லாம் பார்த்து ரஜபுத்திர இந்துக்கள் பரிகாசம் செய்துகொண் டிருந்தார்கள்.

'அவனுடைய மொட்டைத்தலையின்மேல் அடியடா' என்றான் ஒருவன்.

'அவனுடைய வலக்கையில் பெரிய விசிறியைப் பார்த்தாயா.' என்றான் இன்னொருவன்.

'அடா, நீ அந்தப் புறமாகச் சென்று அவனுடைய கிண்ணத்தையும் தட்டையும் அவனறியாமல் எடுத்து மறைத்துவிடடா. அப்பால் மொட்டைத் தலையன் சாப்பாட்டுக்குத் திண்டாட்டப் படுவான்' என்றான் மற்றொருவன்.

'பெண்களைப் பார்த்தால் இவன் தன் முகத்தை விசிறியால் மூடிக்கொள்ளுகிறானே எதற்கு? பெண்ணாசை பொன்னாசை மண்ணாசை மூன்றையும் முற்றிலும் விட்ட பெரிய முனிவனோ இவன்! இப்படிப்பட்டவனை நம்பவே கூடாது' என்றான் வேறொருவன்.

'அடா! சும்மா இரு. இவன் என்ன சொல்லுகிறானென்று பார்ப்போம்' என்றான் ஒருவன்.

அந்தப் புத்தமத சந்நியாசி இந்நிந்தைகளை யெல்லாம் பொறுமையுடன் சகித்துக்கொண்டு, அங்கிருந்த கூட்டத்தாரை நோக்கி, பின் வருமாறு ஒரு பிரசங்கம் செய்தார்:—

'மானிடரே, நம்முடைய வாழ்வு அநித்தியமானது

"நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள்-நீரில்,
எழுத்தாகும் யாக்கை"

என்றார் பெரியோர். உங்களுடைய இளமைப் பருவமானது நீரில் உண்டாகும் குமிழியைப்போல் தோன்றி, சிறிது நேரத்திற்குள் அழியக்கூடிய தன்மையுடையது. நீங்கள் பெருமை பாராட்டும் செல்வமானது கடலில் காற்றினால் சுருட்டப்படுகிற அலைகளைப்போல் ஓரிடத்தில் நிலைத்திராமல் சிதறக்கூடிய தன்மையுடையது. நீரின்மேல் எழுதுகிற எழுத்தைப்போல நம்முடைய சரீரமானது நிலையற்றது. இவ்வுலகமே மாய்கை. இவ்வுலகத்திலுள்ள ஜீவராசிகளெல்லாம் கடைதேறவேண்டும். இவ்வுலகத்தில் மானிடராய்ப் பிறப்ப தரிது, நாம் செய்திருந்த நற்றவத்தின் பயனால் மானிடராய்ப் பிறந்தபோதிலும், கூன் குருடு செவிடு முதலிய அங்கஹீனமில்லாமல் பிறப்பது அதனினும் அரிது. அப்படி அங்கஹீனமில்லாமல் பிறந்தாலும், கல்வியும் கல்வியினாலாய ஞானமும் அடைவதரிது. ஒருவேளை நம் முயற்சியினால் கல்வியும், அதனா லடையும் ஞானமும் பெற்றபோதிலும், அதனா லுண்டாக வேண்டிய தானமும் தவமும் நாம் செய்வதரிது. இந்த உலகத்தில் ஒருவருக்கும் நம்மால் ஒருவித துன்பமும் அணுகவொட்டாமல், நம்மாலியன்ற அளவு தானமும், நமது ஆன்மா உய்ய வேண்டுமே என்ற நன்னோக்கமுடைய தவமும், நாம் செய்து

கொண்டு வந்தோமாகில் சர்வஜீவ தயாபரன், சர்வலோக ரக்ஷகனுகிய சர்வேசுவரன் நமது ஆன்மாவிற்கு முத்தி கொடுப்பார்' என்று அந்த சந்நியாசி பிரசங்கம் செய்து கொண் டிருந்தார்.

'உலகம் மாய்கை என்றால் இவன் ஏன் இந்த உலகத்தில் இருக்கிறான். இவனை நாம் கொன்றுவிடலாம்' என்றான் ஒருவன். இன்னொருவன், 'நம்முடைய மார்க்கத்தை இவன் கெடுக்க வந்திருக்கிறான்' என்று சொல்லி, அந்தச் சந்நியாசியினுடைய பிக்ஷா பாத்திரத்தையும் நீர்வடி தட்டையும் எடுத்துத் தரையின்மேல் படீரென்று போட்டு உடைத்தான். வேருெருவன், அவர் வலக்கையில் பிடித்திருந்த விசிறியைப்பிடுங்கிக்கொண்டு ஓடினான். மற்றொருவன், அவருக்குப் பின்புறத்தில் சென்று, அவர் அணிந்திருந்த மஞ்சள் நிறம்பொருந்திய உடையில் மைதடவினான். அவருக்குப் பக்கத்தில் துணிமூட்டையில் வேறு இரண்டு மஞ்சள் நிறமான வஸ்திரங்களும், தோல் கச்சும், கிழிந்த வஸ்திரத்தைத் தைப்பதற்கு ஒரு ஊசியும், தலையையும் தாடியையும் அடிக்கடி சவரம்செய்யும்பொருட்டு ஒரு கத்தியும் இருந்தன. இவற்றைக் கண்டதும் அவன் எல்லாரையும் சத்தமிட்டுக் கூவித் தன்னிடம் வரவழைத்து அவர்களுக்கு இவைகளை யெடுத்துக்காட்டிப் பரிகாசம் செய்தான். அம்பட்டக்கத்தியையும், ஊசியையும், தோல் கச்சையும் கண்டு எல்லாரும் விலாப்புடைக்க விடா நகைப்புக் கொண்டார்கள்.

வீரனிடம் சென்றிருந்த சம்யுக்தை தன்னுடைய நோக்கத்தை முடித்த பின்பு, மாளிகைக்குத் திரும்புவா

ளாயினள். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பதுபோல், ரமணி வீரன்மேல் காதல்கொண்டிருப்பதையும், அவள் ரஜபுத்திர இந்துவான ஒருவனுடைய புதல்வி என்பதையும் சம்யுக்தை அந்த வீரனுக்குத் தெரிவித்தவுடனே, ரமணியைத் தவிர வேறு ஒரு மங்கையைத் தான் மணம் புரிவதில்லையென்று அவன் தீர்மானங்கொண்டான். வீரனுக்குக் கிடைத்த மேலானபதவியைக்கண்ட சம்யுக்தை அதை ரமணியிடத்தில் தெரிவிக்க வெகு ஆவலாயிருந்தாள். சம்யுக்தை சந்தோஷத்தினால் சடுதியில் மாளிகைக்கு விரைந்து சென்று ரமணியைக் கண்டு வீரன் அடைந்த மேன்மையை விவரமாய் எடுத்துரைத்தாள். முதலில் ரமணி அதை நம்பவில்லை. சம்யுக்தையைப் பல முறையும் வினவினாள். ஆனந்தத்தினால் கண்ணீர் சொரிந்தாள். இந்தச் சந்தோஷச் செய்திகொண்டுவந்த சம்யுக்தையைத் தழுவி முத்தமிட்டாள். வீரனைக் கண்டடைந்தும் அவனுடன் சம்பாஷித்த சகல விஷயங்களையும் தனக்கு விவரமாய் உரைக்கும்படி அவளை வேண்டினாள். சம்யுக்தை தான் முதலில் சத்திரத்திற்குச் சென்றதையும், அவ்விடத்திலுள்ள ஆண்டிகள் தனக்குச் சொன்ன செய்தியையும், ஆண்டிகளில் ஒருவன் தன்னை வீரனதிருப்பிடத்திற்கு வழிநடத்தியதையும், வீரனுடைய மாளிகையைத் தான் கண்டடைந்ததையும், அவனுடன்பேசின சமாசாரங்களையும் ஆதியோடந்தமாய் ரமணிக்கு எடுத்துரைத்தாள். இவர்கள் இவ்வாறாகச் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது, புருஷோத்தமர் அவ்விடம் வந்தார். அப்போது சம்யுக்தை அவரை நோக்கி; 'ஐயா, ஒரு சந்தோஷமான செய்தி. நமது புதல்வியைத் தீயினின்றுங் காப்பாற்றின ரஜபுத்திர வீரனாகிய பிரதாப்சிங் சுல்தா

னுடைய சேனைக்கு உதவித் தளகர்த்தராக நியமிக்கப் பெற்றார்' என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டு அதிக ஆச்சரிய மடைந்த புருஷோத்தமர் சம்யுக்தையை நோக்கி, 'சம்யுக்தா, நீ சொல்லுகிறது உண்மைதானா? அந்தச் சமாசாரம் உனக்கு எப்படித் தெரியவந்தது' என்றார். சம்யுக்தை, 'ஐயா, உண்மைதான். நான் இன்று காலையில் கடைக்குப் போகும் போது, வீரன் வியாதியாய்க் கிடந்த சத்திரத்தில் வசிக்கும் ஆண்டியொருவனை அவ்விடத்தில் சந்தித்தேன். அப்போது வீரனைப்பற்றிய ஞாபகம் வந்ததும், நான் அந்த ஆண்டியிடத்தில் வீரனுடைய சுகத்தைப் பற்றி விசாரித்தேன். அதற்கு அவன், "அம்மா, வீரர் சௌக்கியமாய்த் தான் இருக்கிறார். இனி அவர் வீரர் அல்லர். சுல்தான் அவரைத் தம்முடைய சேனைக்கு உதவித் தளகர்த்தராக நியமித்திருக்கிறார். இப்போது அவர் சத்திரத்தைவிட்டு மாளிகையில் வசிக்கிறார்" என்றான். இதைக் கேள்வியுற்ற நான் சொல்லமுடியாத ஆச்சரிய மடைந்தேன்' என்று விடை யளித்தாள். புருஷோத்தமர், 'ஆஹா, அப்படியா! வீரன் குணசாலி, பரோபகாரி, தேவதாபக்தியுள்ளவன். தனது பகைவர்களை அடக்கி யாளுவதைப்போல் பஞ்சேந்திரியங்களையும் அடக்கியாளும் ஆற்றலுள்ளவன். ஆதலால், அவனுக்கு இதைவிட மேலான உத்தியோகமும் கிடைக்க வேண்டு மென்பது என்னுடைய விருப்பம்' என்றார்.

இவ்வாறு அவர்கள் வீரனைப்பற்றிச் சம்பாஷித்துக் கொண் டிருக்கையில், ஒரு வேலைக்காரன் புருஷோத்தம ரிடம் வந்து, 'பிரபுவே, கடைவீதியில் புத்த சந்நியாசி யொருவர் புத்தமார்க்கத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்து

கொண் டிருந்தார். இந்த நகர வாசிகளாகிய ரஜபுத்திர இந்துக்கள் அவரைப் பலவாறு நிந்தித்துத் துன்புறுத்தி வருகின்றனர்' என்றான். இதைக் கேள்வியுற்றதும், புருஷோத்தமர் அவனை நோக்கி, 'அப்பா, நீ உடனே கடைவீதிக்குச் சென்று அம் மகானை இவ்விடம் பத்திரமாய் அழைத்துவா' என்றார்.

வேலைக்காரன் அப்படியே சென்றான். சம்யுக்தை தன்னுடைய காரியங்களைக் கவனிக்கப் போய்விட்டாள். ரமணி, அறைக்குட் சென்று தன்னுடைய காதலனுக்குற்ற உயர்நிலையை நினைத்து நினைத்து மனமகிழ்ச்சி யடைந்தாள். புருஷோத்தமரோ, மாளிகையின் வெளியே நின்றுகொண்டு, அந்தச் சந்நியாசியினுடைய வரவை எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார். சிறிது நேரமானபின் வேலைக்காரன் சந்நியாசியை அழைத்துக்கொண்டு அங்கே வந்தான். புருஷோத்தமர் அவரைக் கண்ணுற்றதும், விரைந்தோடி, நல்வரவு கூறி, மாளிகையினுள்ளே அவரை யழைத்துச் சென்று, ஆசனத்தில் அமரச்செய்தார். சீக்கிரத்தில் போஜனம் தயார் செய்யும்படி வேலைக்காரர்களுக்குக் கட்டளை யளிக்கப்பட்டது. பதங்குலைந்து வந்த புத்த சந்நியாசி புருஷோத்தமரைச் சிறிது நேரம் உற்று, நோக்கினபின் 'உம்முடைய நாமம் என்ன? உம்முடைய ஊர் எது?' என்று அவரை வினவினர்.

புருஷோத்தமர் :—'முனிசிரேஷ்டரே, என்னுடைய நாமம் புருஷோத்தமன். என்னுடைய ஊர் ஜபல்பூர்' என்று பகர்ந்தார்.

சந்நியாசி :—'ஆ நண்பரே, நீர் இந்நகரத்திலா வசித்து வருகிறீர்? நாம் யாரென்று நீர் அறியவில்லை போலும்!'

புருஷோத்தமர் :—முனிவரே, தமது நாமதேயம் அடியேன் அறிய அநுக்கிரகம் செய்யவேண்டும்.

சந்நியாசி :—புருஷோத்தமரே, ஜபல்பூரில் நாம் இருந்த காலத்தில் நீர் நமது நண்பர் அல்லவா ? நான் ஜபல்பூர் அரசனுடைய பிரதான அமைச்சனுயிருக்கவில்லையா ?

புருஷோத்தமர் :—ஆஹா, அப்படியா ? அடியேனுடைய இருப்பிடம் இன்றைக்குத்தான் பெரும்பாக்கியம் பெற்றதாயிற்று. ஜபல்பூர் அரசனுடைய முதல் மந்திரியாயிருந்த தேவரீர் உலகப்பற்றை முற்றிலும் விட்டுத் துறவறம் பூண்டு புத்த சந்நியாசியானது எவ்விதம் ?

சந்நியாசி :—புருஷோத்தமரே, புத்த மார்க்கத்தை ஸ்தாபித்த கௌதம சாக்கிய முனிவர், போதனை செய்தபடி, நாம் வாசம் செய்யும் இவ்வுலகமானது மாய்கையென்றும்; சொல்ல முடியாத துன்பங்களை யுடையதென்றும் கண்டு, இவ்வுலகத்தின் துன்பங்களிலிருந்து நீங்க வகையைத்தேட ஆரம்பித்தேன். சித்தார்த்தருடைய காலடிகளைப் பின்பற்றி, உலகப்பற்றை விட்டுத் துறவியாவதே பாடற்ற நிலைமையை யடையும்விதம் என்றறிந்தேன். ஒருநாள் என்னுடைய மனைவி மக்கள் அறியாமல் என்னுடைய உத்தியோகத்தையும் ஆஸ்தியையும் பாராமல் உருவிலையென்னும் வனத்திற்கு ஓடிப்போய் அவ்விடத்தில் தவம் செய்துகொண் டிருந்த புத்தமகா முனிவருடைய பாதங்களை யடைந்தேன். அவரிடம் சில வருஷங்களாகத் தொண்டுபுரிந்து, பாடற்ற நிலைமையை யடைவதற்கான வழி வகைகளைச் சரிவரக் கற்றுணர்ந்தேன். ஒருநாள் அந்தக் குரு என்னைப் பார்த்து, “ பலவிடங்

களுக்குச் சென்று, புத்த மார்க்கத்தைப் பிரசங்கித்து, துன்பகடலில் அமிழ்ந்து கிடக்கும் மானிடரைக் கரையேற்றுவாய்' என்று எனக்கு ஆஜ்ஞாபித்தார். உடனே, நான் அம் மகானிடத்தில் விடைபெற்று, பல விடங்களுக்கும்சென்று பாடற்ற நிலைமையைப்பற்றிப் பிரசங்கம் செய்துகொண்டு வருகிறேன். அவ்விதமே நான் இந்நகரை யடைந்து, கடை வீதியில் பிரசங்கம் செய்துகொண் டிருந்தேன். அப்போது அவ்விடத்தில் கூடியிருந்த ரஜபுத்திர இந்துக்கள், என்னைப் பலவிதமாய் நிந்தித்து, என்னுடைய கிண்ணத்தையும் நீர்வடிக்குந் தட்டையும் பிடுங்கித் தரையில் போட்டு உடைத்து,என்னுடைய வஸ்திரங்களைச் சின்னபின்ன மாகக் கிழித்து என்னை ஹிம்சித்தார்கள். அந்தச் சமயத்தில் யாரோ ஒருவன் என்னை யடைந்து, என்னை அவர்களுடைய கைக்குத் தப்புவித்து இவ்விடம் அழைத்து வந்தான். இதுதான் என்னுடைய வரலாறு. நான் இவ்விடம் வந்து உம்மைக் கண்ணுற்றுப் பேரானந்த மடைந்தேன். புருஷோத்தமரே, நீர் ஜபல்பூரை விட்டு இந்நகர்க்குவந்த காரணமென்ன? என்றார்.

புருஷோத்தமர்:—'மனோ வாக்கு காயம் என்னும் திரி கரணங்களாலும் தூய்மையுடைய முனி சிரேஷ்டரே, ஜபல்பூரை யாண்டு வருபவன் நல்லவனல்லன்; ஆகையால் அந்நாட்டில் வசிக்க எனக்குப் பிரியமில்லை.மேலும் அவன் புத்த மார்க்கத்திற்குச் சத்துரு. அம்மார்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவன் துன்பம் செய்து வந்தான். ரஜபுத்திர அரசர்கள் புத்த மார்க்கத்

துக்கு விரோதிகளானபடியால், சுல்தான் சாலீம் அரசாட்சி புரிந்து வரும் ஆமதுநகரத்தை வந்தடைந்தேன்"

இவ்வாறு இவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் போஜனம் தயாராயிற்று. புருஷோத்தமர் சந்நியாசியை மஞ்சன அறைக்கு அழைத்துக்கொண்டு போய், ஸ்நானம் செய்வித்தார். ஸ்நானம் முடிந்த பின்பு போஜனம் பரிமாறப்பெற்றது. இருவரும் போஜனம் அருந்தி ஓரிடத்தில் உட்கார்ந்து பின் வருமாறு சம்பாஷித்தனர்.

புருஷோத்தமர் :—முனிவரே, தாங்கள் தரிசித்துவந்த க்ஷேத்திரங்களைப்பற்றி அறிய அடியேன் அபேக்ஷையுள்ளவனாயிருக்கிறேன்.

சந்நியாசி :—புருஷோத்தமரே, பாட்னாவுக்கு அருகில் கயா என்னும் பழைய பட்டணம் ஒன்று இருக்கின்றது. அஃது உலகத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்கள் அனைத்திலும் முக்கியமானது. அவ்விடத்தில்தான் கௌதம சாக்கியமுனி மாரனைவென்று சர்வ ஞானமும் பெற்றுப் பாடற்ற நிலைமையை அடைந்தார். பரிசுத்தத்தில் கயாவுக்கடுத்தது சாரநாத். அவ்விடத்தில் அசோகராஜனால் கட்டப்பெற்ற ஸ்தூபியொன்று இருக்கிறது. புத்த மார்க்கம் அவ்விடத்தில் அதிக பிரசித்தி பெற்றிருக்கிறது. அந்த ஸ்தூபியிலே சித்தார்த்தருடைய உருவச் சிலையொன்றிருக்கிறது. ஓரிஸ்ஸா நாட்டிலே புத்தமத ஆலயங்கள் பல உண்டு. அஜந்தாவிலுள்ள ஆலயத்தில் புத்தருடைய ஞாபகச்சின்னம் ஒன்றிருக்கிறது. அவ்விடத்தில் ஒரு மடாலயமும், அந்த ஆலயத்தில் புத்தர் சிம்ஹாசனபதியாய் வீற்றி

ருக்கும் மூலஸ்தானமும் இருக்கின்றன. அந்த மடத்தில் அநேக புத்த சந்நியாசிகள் வசிக்கின்றனர்.' புத்தருடைய ஜீவியத்தைப்பற்றிய சித்திரங்கள் அவ்வாலயத்தின் சுவர்களிலே அமைக்கப்பெற்றிருக்கின்றன. எல்லோரா என்னுமிடத்திலுள்ள ஆலயத்தில் புத்தருடைய பல் ஒன்று பொற்றாமரைமேல் வைக்கப்பெற்றிருக்கிறது. அம் மகானுடைய ஞாபகச்சின்னங்கள் இன்னும் வேறு இடங்களிலும் மகிமையுடன் விளங்குகின்றன' என்றார்.

புருஷோத்தமர்:—'அம் மகாத்துமாவே நம்முடைய தஞ்சம். முனிவரே, தாங்கள் என்னோடு சிலநாள் தங்கியிருக்கும்படி தங்களைப் பிரார்த்திக்கிறேன்' என்றார்.

## 10. சையத் அப்துல்லா

சம்யுக்தை மூலமாய்ச் சகலமும் அறிந்த வீரன் ரமணியையே தனக்கு மனைவியாகப் பெறவேண்டுமென்று தீர்மானம் கொண்டான். ரமணி, புருஷோத்தமருடைய புதல்வியல்லளென்று அவனுக்குத் தெரியவந்ததும், உடல் பதைத்து, 'ஆ, இதென்ன ஆச்சரியம்! சகல சுகுணங்களும் பொருந்திய புருஷோத்தமர் இப்படிப்பட்டவர் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையே. ரமணி அவருடைய புதல்வியல்லள் என்று யாருக்குத் தெரியும். ரஜபுத்திர இந்துவான ஒருவனுடைய புதல்வியைத் தன் சொந்தப் புதல்வி யெனப் போலியாகப் பாராட்டி அம் மங்கையைப் புத்தமதக் கோட்பாடுகளின்படி வளர்த்து வருவது பெரிய பாவமல்லவா? சகல கதைகளையும் சாஸ்திரங்களை

யும் கற்றுணர்ந்த புருஷோத்தமர் ரமணியைத் தம் புதல்வி யென்று கூறி உலகை ஏமாற்றி வருகின்றனரே! "பலநாட் கள்ளன் ஒருநாள் அகப்படுவான்" என்னும் பழமொழி பொய்த்து விடுமோ? ரமணி—இது எவ்வளவு இனிமையான பெயர். இப்பெயரிற்கேற்ப அவள் அழகே வடி வெடுத் தாற்போல் இருக்கின்றனளே. அவளை யான் மாளிகையில் கண்ணுற்ற காலத்தில் என் மனம் அவளுக்கே அடிமைப் பட்டு விட்டது. அவளும் என்னைத்தவிர வேறு புருஷனை மணம் புரிவதில்லை என்னும் தீர்மானம் கொண்டிருப்பதாகச் சம்யுக்தை மூலமாக அறிந்தேன். தன்மேல் காதல் கொண் டிருக்கும் மங்கையைத் தவிர்த்து, அவள் மனம் துன்ப மடையத் தான் உயிர் வாழ்வது, நன்மை கடைப்பிடித்தலில் நோக்கமாயிருக்கும் ஒரு வீரனுடைய செய்கையாகுமா? இல்லற வாழ்க்கையில் ஈடுபடுபவர் பலர் அநுபவிக்கும் கஷ்டங்களைக் கண்டு கலியாணம் இல்லாமல் இருத்தலே மேன்மையென்று நான் நினைத்திருந்தேன். ஆனால், ரமணி யென்னும்பெண்மணியைத் துணைவியாகக்கொண்டு இல்லறம் நடத்தி வருவதைவிட வேறு இன்பம் இவ்வுலகில் எனக்கு இல்லை என்பது இப்போது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகிறது. ரமணியினுடைய ரூபலாவண்ணியத்தைக் கண்டு அவளுடைய குணாதிசயங்களையும் சம்யுக்தையின் மூலமாய்த் தெரிந்துகொண்ட யான், அவ் விலைமதிக்க முடி யாத ரமணியை மணம் புரியாமல் உயிர் வாழ்ந்திரேன். புரு ஷோத்தமர் மாளிகை தீப்பற்றியகாலத்தில் அவளை யான் என் கரத்தில் ஏந்திக்கொண்டுவந்தபோதே, அவள்தன் அழகிய மேனியால் என் மனத்தை வென்றாள். யான் பெறுதற்கரிய அப் பைங்கிளியானது மறுமுறையும் என் கரத்திற்கு எப்

போது பறந்தோடி வருமோ? என்ன செய்வேன்! எதுரி டம் சென்று முறையிடுவேன். கொலையாளியினுடைய கையி னின்று என்னுயிரைக் காப்பாற்றியவரும், வயிற்றுப் பிழைப் புக்கு வருந்திக்கொண் டிருந்த என்னைத் தமது சேனைக்கு உதவித் தளகர்த்தராய் நியமித்து என்னைக் காப்பவரும் ஆகிய சுல்தான் சாலீம் இடத்தில் சென்று என் குறையை முறையிட்டால்தான் என்ன!' என்று, அவ் வீரன் தனக் குள்ளே தீர்மானித்து, அதை உடனே நிறைவேற்ற உறுதி கொண்டான்.

அரண்மனையில் அழகிய சிங்காரமண்டபம் ஒன்று இருந்தது. அம் மண்டபத்தின் சுவர்கள் வெண்மையான சுண்ணச்சாந்து தீட்டப்பெற்றிருந்தமையால், அவைகள் களங்கத்தினின்றும் நீங்கிய வெள்ளிய சந்திரன்போல் விளங்கும் பளிங்குச்சுவர்களை ஒத்திருந்தன. பெரியதோர் இரத்தினக் கம்பளத்தை விரித்தாற்போலப் பல வர்ணக் கற்களால் அம்மண்டபத்தின் தரை அமைக்கப்பெற்றிருந் தது. இடையிடையே நவரத்தினங்களால் இழைக்கப் பெற்ற வெள்ளி ஸ்தம்பங்களோ என்று பார்ப்போர் வியப் படையும்படி, வெண்மையான சலவைக் கற்களாலாகிய தூண்களில் அழகிய கொடி செடி போன்ற சித்திரங்கள் வரையப்பெற்றிருந்தன. விசித்திரப் பதுமைகள் அமைந்த தூண்களைக்கண்டு, உண்மையான மாதர்களோ என்று யாவ ரும் தியக்கமடைந்தனர். மிகச் சிறப்பினையுடைய மேற் றுறையிலிருந்து தொங்கவிடப்பெற்றிருந்த தீபங்கள் சூரி யனைப்போல் துலங்கின. கண்களுக்கு ஆனந்தத்தையும், மனத்திற்கு இன்பத்தையும், காதிற்கு இனிமையையும் விளை விக்கக்கூடிய பலபொருட்கள் அம்மண்டபத்தில் காணப்

பட்டன. உலகத்திலுள்ள பொருட்களெல்லாம் அவ்விடத்தில் விளங்கின. அன்று பூத்த புஷ்பங்களினால் அம்மண்டபம் அலங்கரிக்கப் பட்டிருந்தது. விசித்திரமானதும் கண்களுக்கு ஆனந்தத்தை உண்டாக்கக்கூடியதுமான பல படங்கள் சுவர்களில் தோன்றின. உலகப்பிரசித்தியுடைய சிற்பாசாரிகளால் அமைக்கப்பெற்ற சித்திரங்களும், சிலைகளும் ஆங்காங்கு விளங்கி நின்றன. அழகிய ஆசனங்கள் பல அவ்விடத்தில் அமைந்திருந்தன. சித்திரம் தீர்ந்த தந்தத்தாலாகிய மிகச்சிறந்த ஆசனமொன்று அம்மண்டபத்தினுள்ள சற்று உயர்ந்த இடத்தில் அமைக்கப்பெற்றிருந்தது. அவ்வாசனத்திலே வெல்வெட் பட்டினாலாகிய பஞ்சணைகள் பல போடப்பட்டிருந்தன. அதற்கடியில் மிருதுவான ரத்தினக் கம்பளம் ஒன்று விரிக்கப்பெற் றிருந்தது. அதற்கருகில் இருந்த மேஜையின்மீது வெள்ளிப் பாத்திரங்களில் அறுசுவை உண்டிகள் அமைக்கப் பெற்றிருந்தன. அவ்விடத்தில் குற்றேவல் புரிபவர் சில பெண்களே யன்றி வேறெவரும் இலர். சுல்தான் சாலீம் அம்மண்டபத்திற்குள் நுழைந்ததும் அப்பெண்கள் தங்கள் தங்கள் வேலையைச் செய்ய ஆரம்பித்தனர். சுல்தான் ஆசனம் உயர்ந்த இடத்தில் இடப்பெற்றிருந்தது. சுல்தான் ஆசனத்தில் அமர்ந்தார். அப்பெண்களில் ஒருத்தி மயிலின் தோகையினாலாகிய ஆலவட்ட விசிறியொன்றை அவரருகில் நின்று அசைத்துக்கொண் டிருந்தாள். வேறொருத்தி, வெள்ளித்தட்டில் சிற்றுண்டிகளில் சிலவற்றைக் கையில் ஏந்தி நின்றாள். இன்னொருத்தி ஷர்பத் என்னும் இனிமையான பானத்தை வைத்திருந்தாள். வேறு சில பெண்கள் அவர் முன்னே பாடிக்கொண்டு நடனம் செய்தார்கள். வேறு

சிலர், பாட்டிற்கும் நடனத்திற்கும் தகுந்தபடி வீணை முதலிய இனிய வாத்தியங்களை வாசித்தார்கள். சுல்தான் சிற்றுண்டிகளில் சிலவற்றை அருந்தியபின் ஒருத்தி பொன்பாத்திரமொன்றில் ஷர்பத்தை வார்த்துக் கொடுக்க அவர் அதைப் பருகினார். பின்பு வேறொருபெண் 'உக்கா'வைக்கொண்டு வந்து, பலவித பழங்கள் சேர்த்துப் பதம் செய்த புகையிலையில் கொஞ்சம் அதிலிட்டு நெருப்பு மூட்டி அவர் கையில் கொடுத்தாள். சுல்தான் ஆனந்தத்துடன் பஞ்சணையின்மீது சாய்ந்துகொண்டு புகையை வாயின் உள்ளே இழுப்பதும் வெளியே விடுவதுமாக இருந்தார். அப்போது நடனமாதர் அவர் முன்னே பாடிக்கொண்டு நடனம் செய்தனர். அப்பெண்களுடைய நடையுடை பாவனைகள் பார்ப்போர் மனத்தைக் கவர்ந்தன. அவர்கள் அணிந்திருந்த ஆடையாபரணங்கள் எண்ணில்லாத் தீபங்களின் பிரகாசத்தினால் கண்கூசும்படி சொலித்தன. அவர்கள் பாடிய இனியபாடல்களைக்கேட்டு அங்கிருந்த சித்திரப் பதுமைகளும் தலையசைப்பனபோல் இருந்தன. சுல்தான் 'பேஷ், பேஷ், சபாஷ்' என்று சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டு இருந்தார். அம் மங்கையர் சிங்கார மண்டபத்தை யடையும் சுல்தானுக்குத் தினம் அப்படி ஆனந்தம் உண்டாக்கி வருவது வழக்கம். அஃது அந்தப் புரத்திற்கு அருகில் இருந்தபடியால் அவரைத் தவிர வேறொருவரும் அவ்விடம் வரக்கூடாதென்பது கட்டளை.

இவ்வாறு சுல்தான் சிங்காரமண்டபத்தில் இருக்கும்போது, 'உதவித் தளகர்த்தர் மகாராஜாவைக்காண விரும்புகிறார்' என்று மண்டபத்தின் வெளியிலிருந்து ஒரு சத்தம் வந்தது. உடனே ஆடலும் பாடலும் நின்றன. பெண்கள்

யாவரும் மண்டபத்தை விட்டு அகன்றனர். சுல்தான் வெளியே எழுந்து வந்து அவ்வாறு சத்தமிட்ட வேலைக் காரனை நோக்கி, 'அவரைச் சிங்காரமண்டபத்திற்கு அழைத்துவா' என்றார். அம்மண்டபத்திற்குச் சுல்தானைத் தவிர வேறு ஆடவர் வரக்கூடாதென்றால், வீரனை மாத்திரம் அவ்விடம் அழைத்துவரச்சொன்னதற்குக்காரணம் என்ன? வீரன் ஆடவன் அல்லனோ? இதைப்போன்ற கேள்விகள் இதை வாசிப்பவருடைய மனத்தில் எளிதில் தோன்றலாம். வீரனை மாத்திரம் சிங்காரமண்டபத்திற்கு வரவழைக்கச் சுல்தான் வெகுநாளாய் எண்ணங்கொண்டிருந்தார். காரணம் என்ன? சுல்தான் சாலீமுடைய மனைவி வீரனுடைய சௌந்திரியத்தையும் அப்துல்லாவின் சாயலையும் பெற்றிருப்பதைக் கேள்வியுற்று அவனைக் காண வெகுநாளாய் ஆசைகொண் டிருந்தாள். சுல்தானுக்கும் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். அவர், வீரனை ஒருநாள் சிங்காரமண்டபத்திற்குத் தனியாய் வரவழைத்துத் தமது மனைவிக்குக் காட்டச் சித்தம்கொண்டார். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல, வீரன் தானே சுல்தானை நாடிச் சிங்காரமண்டபத்திற்கு வர நேர்ந்தது.

சுல்தான், வீரனை அழைத்துவர வேலைக்காரனை அனுப்பிய பிறகு, அந்தப்புரத்திற்குச் சென்று தமது மனைவிக்கு வீரனுடைய வரவைத்தெரிவித்து, அவளைத் தம்முடன் சிங்காரமண்டபத்திற்கு அழைத்து வந்து விசித்திரமாகத் தொங்கவிடப்பெற்றிருக்கும் திரைகளுக்கிடையில் அவள் மறைவாக நின்றுகொண்டு வீரனைப் பார்க்கும்படி ஏற்பாடு செய்தார். வேலைக்காரன் மண்டபத்திற்கு வெளியே நின்று, 'மகாராஜாவே, உதவித் தளகர்த்தர் வந்

திருக்கிறார்' என்று அறிவித்தான். சுல்தான் வெளியே சென்று அவனுக்கு நல்வரவு கூறினர். சிங்காரமண்டபத்தின் சிறப்பைப் பார்த்து ஆச்சரியமடைந்தவனாய், வீரன், உள்ளே நுழைந்து ஆசனமொன்றில் அமர்ந்தான். சுல்தான் அவனை நோக்கி, 'அப்பா, பிரதாபா, நம்மை நாடிவந்த காரணம் என்ன?' என்று அன்புடன் வினவினர்.

**பிரதாப்சிங்** :—மகிபதி, தங்களுடைய தயவையே அடியேன் நாடி வந்திருக்கிறேன்.

**சுல்தான்** :—பிரதாபா, முதல் உன்னைக் கண்ணுற்றபோது நாம் உன் மேல் வைத்த அன்பு எப்போதும் நம்முடைய மனத்தைவிட்டு அகலாது. ஆதலால், நீ நம்மை நாடி வந்த காரணமென்ன?

**பிரதாப்சிங்** :—மகிபதி, தாங்கள் அடியேன்மேல் அன்பு கொண்டிருப்பது அடியேன் செய்த அரியதோர் பாக்கியமே. இத்தருணம் அடியேன் தங்களை நாடி வந்து செய்துகொள்ளும் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த் தருளும்படி பிரார்த்திக்கிறேன். நான் தங்களுடைய கருணையால் கொலையாளியினுடைய கைக்குத் தப்பி இந்நகரில் உயிர்வாழ்ந்திருக்கும் காலத்தில், ஒருநாள் நள்ளிரவில் இந்நகரவாசிகள் யாவரும் அயர்ந்து நித்திரை செய்துகொண் டிருக்கும்போது, புத்த மார்க்கத்தைச்சேர்ந்த புருஷோத்தமருடைய மாளிகை தீப்பற்றியது. அதைக் கண்டு நகரவாசிகள் திரண்டு போகும்போது நானும் அவர்களுடன் அவ்விடம் சென்றேன். மாளிகையின் பின்புறம் தீப்பற்றி நன்றாய்ச் சுவாலித்து எரிந்துகொண்டிருந்தது. நாங்கள் அவ்விடத்தை யடைந்தகாலத்தில், அத்

தீயானது மாடியையும் தாக்க ஆரம்பித்தது. அக் தருணத்தில் மாளிகையிலுள்ளவர்கள் சாமான்கள் எடுப்பதை நிறுத்தி ரமணி யென்னும் ஒரு பெண்ணைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அவளுடைய படுக்கை அறைக்குள் தீப் பாய்ந்ததனால் அத்தீயினின்று அவளை இரட்சிக்க ஒருவனும் துணியவில்லை. மாடியில் அயர்ந்து நித்திரை செய்யும் அம் மங்கை தீயில் மாண்டு போகிறாள் என்று நான் கேள்விப்பட்டதும், அவளை எப்படியாவது அக்கொடிய தீயினின்றுந் தப்பு விக்கத் தீர்மானங் கொண்டேன். உடனே நான் தீப்பற்றி எரியும் படிக்கட்டின்வழியாய் ஒரு க்ஷணப் பொழுதில் மாடியை யடைந்து, மூர்ச்சையாய்க் கீழே விழுந்துகிடந்த அம் மங்கையை என் கரத்திலேந்திக் கொண்டு வந்து அவளுடைய உயிரைக் காப்பாற்றி னேன். அவளுடைய தந்தையாகிய புருஷோத்தமர் அப்போது அவ்விடத்தில் இல்லை. நான் அவருடைய புதல்விக்குச் செய்த உபகாரத்தைப் பின்பு கேள்விப் பட்டுப் புருஷோத்தமர் வியாதியால் பீடிக்கப்பெற்றுச் சத்திரத்தில் கிடந்த என்னைக் கண்டடைந்து, தமது மாளிகைக்கு அழைத்துக் கொண்டுபோய்ச் சில நாள் என்னைப் பராமரித்து வந்தார். நான் பூர்ண சுகமடைந்த பின் புருஷோத்தமரிடம் விடைபெற்று மாளிகையை விட்டுப் புறப்பட்டேன். நான் மாளிகையிலிருந்த காலத்தில் அவருடைய புதல்வியாகிய ரமணி என் மேல் அந்தரங்க காதல்கொண் டிருப்பதாக எனக்குத் தெரியவந்தது. 'பேய்கொண்டாலும் கொள்ளலாம், பெண் கொள்ளலாகாதே' என்று எண்ணியிருந்த

யான், அவளுடைய ரூபலாவண்ணியத்தைக் கண்டது மன்றி அவளுடைய குணாதிசயங்களையும் அவள் என் மேல் கொண்டிருக்கும் காதலையும் கேள்வியுற்றதும் அவளை என் மனைவியாகக்கொண்டு இல்லறம் நடாத்தி வர ஆசைகொண் டிருக்கிறேன். நான் தங்களைத் தந்தையாகப் பாவிக்கிறபடியால் அடியேன் அம் மங் கையைப்பெற்று உயிர் வாழ்ந்திருக்க அனுக்கிரகம் புரியவேண்டும். இதுவே என்னுடைய விண்ணப்பம்' என்று கூறினன்.

வீரன் சொன்ன வார்த்தைகளை யெல்லாம் மிகவும் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த சுல்தான் அவனை நோக்கி, 'பிரதாபா, நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டா. நாம் உனக்காகப் புருஷோத்தமரிடம் பரிந்து பேசுவோம். நாமும் உன்னை நம் புதல்வனுகவே பாவிக்கிறோம். ரமணி யையே நீ மணம் புரிவாய்' என்று சொல்லி, அவனைத்தேற் றினர். வீரன் சுல்தானிடம் விடைபெற்று, அரண்மனையை விட்டுப் புறப்பட்டான்.

வீரன் சிங்காரமண்டபத்தை விட்டு வெளியே சென் றதும், திரையின்பின் மறைந்துகொண் டிருந்த சுல்தானு டைய மனைவி மறைவிடத்தை விட்டு வெளியே வந்தாள். அப்போது சுல்தான் அவளை நோக்கி, 'பார்த்தாயா வீரனை? இவன் சரியாய் நம் சகோதரனுகிய அப்துல்லாவைப் போ லிருக்கிறான். இவனுடைய பெயர் பிரதாப்சிங். இவன் ஒரு ரஜபுத்திர வீரன். இந்து மதத்தைச் சேர்ந்தவன். இவ னுடைய முகச்சாயல், பேச்சு, நடை எல்லாம் அப்துல்லா வின் சாயலையும் பேச்சையும் நடையையும் ஒத்திருக்கின் றன' என்றார்.

அதற்கு அவள் 'நாதா, ரஜபுத்திரவீரனாகிய பிரதாப்சிங் அதிக செளந்தரியமுடையவனாயிருக்கிறான். அகத்தின் அழகு முகத்தில் என்பதுபோல் இவன் நற்குண நற்செயல்கள் உடையவன் என்று தெரியவருகிறது' என்றாள். சுல்தான், 'கண்மணி, அப்துல்லாவினுடைய முகக் குறிப்பும் அவ்விதமே. சிறு வயதிலேயே அவனிடத்தில் ஆண்மையும் பெருந்தன்மையும் குடிகொண்டிருந்தன. வேட்டையாடுவதில் அவனுக்கு அதிக பிரியம். வேட்டைக்குச் சென்றவன் இன்னும் திரும்பி வரவில்லை. காட்டில் வாழும் கொடிய ஜந்துக்கள் அவனைப் பக்ஷித்து விட்டனவோ? அல்லது, வெகுதூரம் சென்றமையால் திரும்பிவர வழியறியாமல் எவ்விடத்திலாவது அகதியாய் வசிக்கின்றானோ! என்னவோ! ஒன்றும் தெரியவில்லை. அவனைக் கண்டடையும்படி நாம் எடுத்த பிரயாசைகள் எல்லாம் அவலமாயின. நம்முடைய தாயார் அவனைக்காணாமல் ஏக்கமுற்றே இறந்தார்கள். அவன் வேட்டைக்குப் புறப்படும்போது, சரியாய் இவ்வீரனைப்போலவே இருந்தான்' என்று விசனத்தோடு சொன்னார். அப்போது அவருடைய மனைவி அவரைப் பார்த்து, 'நாதா, விசனப்படுவதால் என்ன பிரயோஜனம்? நம்மால் ஆவது ஒன்றுமில்லை. எல்லாம் நம்மைப் படைத்த ஈசனுடைய செயல்' என்றாள். இவ்வாறாக இருவரும் சிறிதுநேரம் சம்பாஷித்துக்கொண் டிருந்தபின் சிங்காரமண்டபத்தை விட்டகன்றனர்.

மறுநாள் புருஷோத்தமரை அரண்மனைக்கு வரவழைத்து வீரனுக்காகப் பரிந்துபேசத் தீர்மானம் செய்யப்பட்டது. புருஷோத்தமர் சுல்தானுடைய நண்பர் ஆகையால் அவர் வீரனுக்காகப் பரிந்து பேசும் பட்சத்தில், புரு

ஷோத்தமர் தமது புதல்வியை அவனுக்குக் கொடுப்பார் என்பதற்குச் சந்தேகமுண்டோ? ஆயினும், புருஷோத்த மர் பிடிவாதமுள்ளவர் ஆயிற்றே. தாம் கொண்டதே கொள்கை யென்றிருப்பவர். அவர் ஒரு தீர்மானம் செய்த பிறகு அதைக் கலைக்க ஒருவராலும் முடியாது. ஜபல்பூர் அரசன் அவரை எவ்விதத்திலாவது புத்தமார்க்கத்தினின் றும் திருப்பவேண்டுமென்று எவ்வளவோ முயன்றான்: கடைசியாக, அவனுடைய முயற்சிகளெல்லாம் கடலில் கரைத்த பெருங்காயம்போலாயின. புருஷோத்தமர் தமது மனைவியையும் மகளையும் இழந்தும் புத்த மார்க்கத்தை விட வில்லை. அப்படிப்பட்ட பிடிவாத குணமுடையவர் புரு ஷோத்தமர். அவரிடத்தில் அவருடைய தீர்மானத்திற்கு விரோதமாகப் பேசுவதென்றால் இலேசான காரியமன்று. ஆயினும், சுல்தான் தனக்காகப் பரிந்து பேசினால் தன்னு டைய நோக்கம் சித்திக்கும் என்று வீரன் நினைத்திருந்தான்.

ரமணி புருஷோத்தமருடைய புதல்வியல்லள் என்று சுல்தானிடத்தில் தெரிவிக்கவில்லை. அதைத் தெரியப்படுத் துவதற்கான அவசரமும் அவனுக்கு அப்போது ஏற்பட வில்லை. சம்யுக்தை அதைத் தனக்கு இரகசியமாய்த் தெரி வித்தபடி அதைப் பலரிடத்திலும் சொல்லிப் பிரஸ்தாபிக்க அவனுக்குப் பிரியமில்லை. சுல்தான் பரிந்து பேசியும் புரு ஷோத்தமர் சம்மதியாவிடில் தனக்குள்ள உரிமையைச் சுல் தானுக்கு வெளிப்படுத்தி அவளை மணம்புரிய வீரன் மனங் கொண்டான். சுல்தான் வீரனிடத்தில் அன்புகூர்ந்திருந்த மையால் அவனுடைய சுக க்ஷேமங்களில் அதிக கவலை கொண்டிருந்தார். மறுநாள் சுல்தான் தம்முடைய வேலைக் காரன் ஒருவனை நோக்கி, 'புருஷோத்தமரது இருப்பிடம்

சென்று அவரை நாம் காண விரும்புவதாக அவருக்குத் தெரிவிப்பாய்' என்றார். உடனே அந்த வேலைக்காரன் புருஷோத்தமரை அரண்மனைக்கு அழைத்துவரச் சென்றான். சுல்தான் சபாமண்டபத்தை யடைந்தார். அவருடைய மந்திரிகள் அன்றைக்கு அவ்விடத்தில் கூடி, ராஜாங்க விஷயங்களை நடத்திக்கொண் டிருந்தார்கள். சுல்தான் தமது குடிகளுடைய க்ஷேமத்தையும், நாட்டிலுள்ள கோயில்கள், மடாலயங்கள், அன்னதான சாலைகள், வைத்திய சாலைகள், சத்திரங்கள் முதலியவைகளைப் பராமரிக்கப்படுவதிலும், நியாய ஸ்தலங்களிலுள்ள முறைமைகளையும், நீர்வளம், நிலவளங்களையும் பற்றித் தம்முடைய மந்திரிகளை விசாரித்துக் கொண்டிருந்தார். சுல்தான், சிற்றின்பத்திலும் உல்லாசத்திலும் பிரியமுடையவராயிருந்த போதிலும், தமது நாட்டை முறை கேடில்லாமலும் நெறிதவறாமலும் அரசாண்டு வந்தார்.

வேலைக்காரன் புருஷோத்தமரிடம் சென்று சுல்தானுடைய விருப்பத்தைத் தெரிவித்தான். புருஷோத்தமர், புத்த சந்நியாசியையும் தம்முடன் அழைத்துக்கொண்டு அரண்மனைக்கு வந்தார். அவர்களைக் கண்ணுற்றதும் சுல்தான் அவர்களுக்கு நல்வரவு கூறி ஆசனம் அளித்தார். சுல்தான் புருஷோத்தமரை நோக்கி, 'புருஷோத்தமரே, இங்கு எழுந்தருளி யிருக்கும் சந்நியாசி யார்?' என்றார்.

புருஷோத்தமர்:—மகாப்பிரபு, கௌதம சாக்கிய முனிவரின் காலடிகளைப் பின்பற்றி வரும் ஒரு மகான் இவர்.

சுல்தான்:—புருஷோத்தமரே, இல்லற வாழ்க்கையை விட்டு இம்மகான் துறவறம் பூண்டதற்குக் காரணம் என்ன?

இவருடைய சவிஸ்தாரங்களை முனிவரரே நம்மிடம் சொல்லுவதற்குத் தடையொன்றுமில்லையானால் அவரையே சொல்லும்படி பிரார்த்திக்கிறேன்.

சந்நியாசி :—' மகாப்பிரபு, நான் ஒரு காலத்தில் ஜபல்பூர் அரசனுடைய முதல் மந்திரியாயிருந்தேன். புத்தமதத்தை ஸ்தாபித்த கௌதம சாக்கிய முனிவருடைய போதனையின்படி நாம் வசிக்கும் இவ்வுலகம் மாய்கையானதென்றும்; எப்போதும் எண்ணமுடியாத துன்பங்களுடையதென்றும் நான்கண்டு இவ்வுலகத்திலுள்ள துன்பங்களினின்றும் நீங்குவதற்கு ஏற்ற வழியைத் தேட ஆரம்பித்தேன். சித்தார்த்தருடைய காலடிகளைப் பின்பற்றி உலகப் பற்றை முற்றிலும் விட்டுத் துறவியாவதே இன்ப நிலையை அடைவதற்கு ஏற்றசாதனம் என்று எனக்குத் தோன்றிற்று. ஒரு நாள் என்னுடைய மனைவி மக்களுக்கும் தெரியாமல் என் உத்தியோகத்தையும் உடைமையையும் பாராமல், உருவிலை என்னும் வனத்திற்கு ஓடிப்போய், அவ்விடத்தில் தவம் செய்துகொண்டிருந்த ஒரு புத்தமத மகா முனிவருடைய பாதங்களை அடைந்தேன். ஏனென்றால், இவ்வுலகப் பற்றானது மிகவும் கொடியது. நான், அம்முனிவரிடம் அநேக வருஷங்களாகத் தொண்டுபுரிந்து கடைத்தேறுவதற்கான வகைகளைச் சரிவரக் கற்றுணர்ந்தேன். அவருடைய சிஷனாக நான் வனத்தில் இருக்கும் காலத்தில் ஒரு நாள் அவர் என்னைப் பார்த்து; 'அப்பா, புத்தமார்க்கத்தின் போதனைகளை அநுசரியாமல் துன்பக்கடலில் அமிழ்ந்து கிடக்கும் மானிடரைக் கவனிக்க வேண்டியது நமது கடமை. ஆகையால், நீ பலவிடங்களுக்கும் சென்று, இடரற்ற நிலைமையை அடைவதற்கான வழி வகைகளை-

அவர்களுக்குப் போதித்துக் கரை எற்றுவாய்' என்று எனக்குக் கட்டளேயளித்தார். உடனே நான் அவருடைய கட்டளேயை என் சிரமேற்கொண்டு அவருடைய பாதங்க ளுக்கு முத்தமிட்டுப் பலவிடங்களுக்கும் சென்று பிரசங்கம் செய்து வருகிறேன். அப்படிப் பிரசங்கம் செய்யவே இந்நகருக்கும் வந்தேன். புருஷோத்தமர், ஜபல்பூரிலிருந்த காலத்தில் அவரை நான் அறிவேன். அவர் மூலமாய்த் தங்களேயும் இப்போது அறியலானேன்' என்ருர்.

சுல்தான்:—முனிசிரேஷ்டரே, நம்முடைய மதமாகிய மகம்மதிய மதத்திலே அநேக சந்நியாசிகள் இருக்கின்றனர். ஆயினும், தங்களேப்போல் உலகப்பற்றை முற்றிலும் துறந்த வர் ஒருவரும் இல்லே என்றே சொல்லவேண்டும். புத்த மார்க்கத்தை ஸ்தாபித்த கௌதம சாக்கிய முனிவரின் சரித்திரத்தைக் கேட்க ஆவலா யிருக்கின்றேன்.

சுல்தான் புருஷோத்தமரை அரண்மனைக்கு வரவழை த்த நோக்கமென்ன, வீரனுக்கு அவருடைய புதல்வியாகிய ரமணியை மணமுடிப்பதன்ருே. அப்படி யிருக்க, இவ்வாறு வீண்கதைகளேக் கேட்டுக்கொண்டிருப்பதால் என்ன பிரயோஜனம்? முதலேயானது நரியின் காலே விட்டுவிட்டு நாவல் மரத்தின் வேரைப்பற்றிய கதையைப்போல், சுல்தான் காரியத்தின்மேல் கருத்தாயிராமல் புத்தருடைய சரித்திரத் தைக் கேட்டுக்கொண்டிருப்பது என்ன மதியீனம் என்று நினேப்பீர்கள். நண்பர்காள், சுல்தான் காரியமாய்த்தான் கதையைக் கேட்டுக்கொண் டிருந்தார். ரஜபுத்திர வீரனுகிய பிரதாப்சிங் என்பவனே அரண்மனைக்கு அழைத்து வர ஆள னுப்பி வெகுநேரமாகிவிட்டது. வீரன் இன்னும் வரவில்லே. அவன் தம்மிடத்தில் வந்து முறையிட்டுக் கொண்டதாகவும்

அவனுக்காகத் தாம் பரிந்து பேசுவதாகவும் சுல்தான் புருஷோத்தமரிடத்தில் காட்டிக்கொள்ளப் பிரியமில்லை. வீரன் தானாக வேறுவிஷயமாகச் சுல்தானைக் காணவந்ததுபோலவும், அவனைக் கண்டபோதுதான் தம்முடைய மனத்தில் அந்த யோசனை தோன்றினதாகவும் பாவனைசெய்யச் சுல்தான் தீர்மானம் கொண்டிருந்தார். தாம் புருஷோத்தமரை அரண்மனைக்கு வரவழைத்த காரணம் வீரனைப்பற்றியோ என்று அவர் சந்தேகியாதபடி சுல்தான் அவர் வந்தவுடனே அவரை நோக்கி, 'நண்பரே, தங்களைக்கண்டு ஆனந்தமடைந்து வெகு நாளாகிறது. தங்கள் தரிசனம் கிடைப்பதே மிகவும் அருமையாகி விட்டது' என்று சொல்லி, அவருடைய சுக க்ஷேமங்களை விசாரிப்பதுபோல் நடித்து வந்தார். பிறகு, வீரன் இன்னும் அவ்விடம் வாராததைக்கண்டு புருஷோத்தமருடன் வந்த புத்த சந்நியாசியைப்பற்றி அவரிடம் விசாரித்தார். புருஷோத்தமரும் சந்நியாசியும் சுல்தான் காலத்தைக்கழிக்கும் காரணத்தை அறியாமல் ஏதோ அவர் புத்த மார்க்கத்தில் பிரியங்கொண்டு விசாரிப்பதாக நினைத்தார்கள்.

சந்நியாசி, புத்தனுடைய சரித்திரத்தைப்பற்றிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

## 10. கௌதமசாக்கிய புத்தன் சரித்திரம்.

'வாரணாசிக்கு நூறுமைல் வடக்கேயுள்ள கபிலவாஸ்து என்னும் இடத்தில் கௌதமர் பிறந்தார். அவருடைய தகப்பனாகிய சுத்தோதனர், சாக்கிய குலத்திற்குத் தலைவர். ஆகையினால் கௌதமருக்குச் சாக்கிய முனிவர் என்னும்

பெயர் வந்தது. அவருடைய தாயாகிய மாயாதேவி நாற்பத்தைந்து வருஷம் பிள்ளையில்லாமலிருந்து அவரைப் பெற்றாள். அவரைப் பெற்ற ஒரு வாரத்திற்குள் அவள் இறந்துபோனாள். அவருக்குப் பதினாறும் பிராயத்தில் விவாகம் நடந்தது. முப்பதாம் வயது வரையில் அவர் சகல சிற்றின்பங்களிலும் உல்லாசமாய்க் காலங்கழித்து வந்தார். உலகத்திலுள்ளவர்களெல்லாம் துக்கமில்லாமல் தம்மைப்போலவே ஆனந்தமடைந் திருக்கிறார்கள் என்பது அவர் எண்ணம். அவர் ஒருநாள் தமது சிங்காரவனத்திற்குப் போகும் போது வழியில் ஒரு வயோதிகன் தன் கையிற் கொண்டிருந்த ஒரு தடியின்மேல் சாய்ந்து நின்றுகொண் டிருந்தான். அவனுடைய கைகால்களெல்லாம் நடுக்கம் கொண்டிருந்தன. கௌதமர் அவனைக் கண்ணுற்றதும் தம்மோடு வந்த ஒருவனை நோக்கி, 'அப்பா, இவர் யார்? என் இவர் இவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு கோலின் மேல் சாய்ந்திருக்கிறார்? இவருடைய உடம்பு என் வலியற்றிருக்கிறது? என்று வினவினார். அதற்கு அவன் 'மகாப்பிரபு, இவர் வயோதிகர். இவருக்கு அதிக பிராயமாகிவிட்டதால் நரம்புகளெல்லாம் தளர்ந்து விட்டன; ஆகையால் அவர் நிற்பதற்கும் பலனற்றிருக்கிறார். இதுதான் காலத்தின் கொடுமை. இவரும் ஒரு காலத்தில் நம்மைப்போல வலியுற்றிருந்தவர்தான். இவருக்கு அதிக வயதாகிவிட்டமையால் உடம்பு தளர்ந்து வன்மையற்றது' என்றான். நாம் எப்போதும் யௌவனத்தையே அனுபவித்துக் கொண்டிருப்போம் என்று நினைத்த கௌதமர், 'நம்முடைய யௌவனம் அழியக்கூடிய தன்மையுடையதோ! உடம்பு தளர்ந்து வலிமை குன்றி இவ்வயோதிகரைப்போல் நாமும்

தடியூன்றி நிற்கும் தன்மையை அடைவோம்' என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டு, மனத்தில் வேதனை யடைந்தவராய்ச் சிங்காரவனத்திற்குப் போகாமல் அரண்மனைக்குத் திரும்பிச் சென்றார். வேறொரு நாள், கௌதமர், வனத்திற்குப் போகுங்கால், வழியில் ஒருவன் வியாதியால் பீடிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். வியாதி என்பதையே அறியாமல் எந்நாளும் சுகமுற்றிருந்த கௌதமருடைய பார்வை அவன்மேற் பட்டதும் தமக்கு அருகில் நின்ற ஒருவனை நோக்கி, 'அப்பா இவன் யார்? இவன் ஏன் இவ்வாறு வேதனையுறுகின்றான்?' என்று வினவினார். அதற்கு அவன், 'மகாப்பிரபு, இவன் நோயாளி; வியாதியினுடைய உபத்திரவத்தைச் சகிக்கக்கூடாதவனாய் இவன் இவ்வாறு கதறிக்கொண்டு தரைமீது புரளுகிறான்!' என்றான். அதைச் செவியுற்ற கௌதமர், 'ஆஹா! என்ன அறிவின்மை! இவ்வுலகத்தில் எல்லாரும் சுகத்துடன் உயிர் வாழ்ந்திருக்கிறார்கள் என்றல்லவோ நாம் நினைத்திருந்தோம். ஐயோ பாவம்! இந்த மனிதன் எவ்வளவு வேதனையுறுகின்றான். இப்போது இவ்வாறு வேதனையுறும் இவனும் ஒரு காலத்தில் நம்மைப் போலவே சுகமுற்றிருந்திருப்பான். நாமும் ஒரு காலத்தில் இவனைப்போலச் சுகமற்று வேதனையுறக் காலம் வரும் என்பதற்குச் சந்தேகமில்லை' என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டு, தம் மனத்தில் சஞ்சல மடைந்தவராய் அரண்மனைக்குச் சென்றார். மற்றொரு நாள் அவர் அவ்வாறே சிங்காரவனத்திற்குப் போய்க்கொண் டிருக்கையில், எதிரில் ஒரு பிணத்தைப் பாடையொன்றில் வைத்துச் சில மனிதர்கள் சுமந்துகொண்டு வந்தார்கள். கௌதமர் அதைக் கண்ணுற்றதும் தமக்கருகில் நின்ற ஒருவனை நோக்கி

'அப்பா, அதோ வருகிறதே அது என்ன?' என்று வினவி னர். அப்போது அவன், 'மகாப்பிரபு, மரணமடைந்த ஒரு வாலிபனை மயானத்திற்கு எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவனுடைய உற்றார் பெற்றார் உறவினரும் பிணத்தைச் சுற்றிக் கதறிக்கொண்டு வருகிறார்கள்' என்று பதில் உரைத் தான். இதைக் கேட்டதும் கௌதமர் உடல் பதைத்து, நடுநடுங்கி, 'ஆஹா, நாம் வசிக்கும் இவ்வுலகமானது மாய்கைபோலும்; இந்தச் சரீரமானது நீரில் எழுதிய எழுத்தைப்போல் நிலையற்றதாயிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில்லாத சரீரத்தைப் பெற்று மாய்கையான இவ் வுலகத்தில் சுகம் அநுபவிக்க விரும்புவது என்ன மதி யீனம். நாம் உலகத்தில் இருக்கும் காலமெல்லாம் துன்பத்தையே அநுபவித்துத் தீரவேண்டும். வயோதி கரும் வாலிபரும், ஆண்களும் பெண்களும், சிறுவரும் சிறுமிகளும் ஆகிய யாவரும் வேறுபாடில்லாமல் மாளவேண் டும்' என்று கௌதமர் தமக்குள்ளே சொல்லிக்கொண்டு, சிங்காரவனத்தையடைந்து உல்லாசமாய்க் காலம்கழிக்க எண்ணியிருந்தவர் அரண்மனைக்குச்சென்று துன்பமற்ற நிலையை யடைவதெப்படி என்று சிந்திக்கலானார். இவ்வுல கம் துக்கமுள்ளதாகையால் உலகத்தை முற்றிலும் துறந்த வர்களே இன்ப நிலையை யடைந்தவர்கள் என்பது அவ ருடைய மனத்தில் தோன்றிற்று. உடனே, உலகப்பற்றை யொழித்துத் துறவியாவதற்கு உறுதிகொண்டார். அவ் வுறுதியின்படி ஒருநாள் நள்ளிரவில் தம்முடைய மனைவியும் புத்திரனும் அயர்ந்து நித்திரை செய்வது கண்டு கௌதமர் தன் மனைவி மைந்தனையும், உற்றார் பெற்றார் உறவின ரையும், நாடு நகரங்களையும் விட்டு, ஒரு காட்டை யடைந்

தார். அவர் அவ்விடத்திற்குச் சென்று சில முனிவர்களோடு தவம்செய்யத் தொடங்கினர். அப்படியும் அவருடைய மனம் ஆறுதல் அடையவில்லை. தவம் செய்வதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லையென்று கண்டு, வீடு வீடாய்ச்சென்று பிச்சை யெடுத்துச் சில நாள் ஜீவித்து வந்தார். ஒருநாள் இரவு திடீரென்று அவருடைய மனம் தெளிவடைந்தது; துன்பமற்ற நிலையை அடையும் விஷயங்களைக் கண்டறிந்தார். அப்பால், கௌதமர் பல விடங்களுக்குச் சென்று, தாமடைந்த ஞானத்தைப் பிறருக்குப் போதித்து வந்தார். அவர் தம் சிஷரோடு ஓர் ஊருக்குப் போய்க்கொண் டிருக்கையில் தம்முடைய சரீரம் விழுவதற்குக் காலம் வந்ததென்று அவருக்குத் தோன்றிற்று. அவருடைய உடம்பு அசௌக்கியமுற்றது. பிரயாணத்தினால் சோர்வடைந்து நடக்க முடியாமல், ஒரு மரத்தடியில் சிறிது நேரம் படுத்துக்கொண்டிருந்து, அவ்விடத்திலேயே பிராணனை விட்டார். அப்போது அவ்விடத்திலுள்ளவர்கள் அனைவரும் கட்டைகளையடுக்கி அதன்பேரில் அவருடைய சரீரத்தை வைத்துத் தீமூட்டின போதிலும் கட்டையில் தீப்பற்றாமல் இருந்தது. பிறகு, அவருடைய சிஷர்கள் வந்து அவருக்குச் செய்யவேண்டிய அநுஷ்டானங்களைச் செய்து முடித்தவுடனே தீப் பற்றி எரிந்து அவருடைய சரீரம் சாம்பலாயிற்று. எப்படித் தீப்பற்றியதோ அப்படியே அத்தீயும் குளிர்ந்தது. அதன் பிறகு அவருடைய சிஷர்கள் தகனமாகாமலிருந்த சில என்புகளையும் அவர் பற்களையும் எடுத்துப் பரிசுத்தம் செய்து அவைகளை ஞாபகச்சின்னமாக சேமித்து வைத்திருந்தார்கள். இப்போதும் அம் மகானுடைய பற்களுக்குப் பெரிய ஆலயங்களைக்கட்டி புத்தர்கள் அவைகளைத் தொழுது வருகிறார்கள்.

## 11. வீரனுக்குப் பெண் நிச்சயித்தல்

இவ்வாறாகச் சந்நியாசி புத்தருடைய சரித்திரத்தை முடித்து அவருடைய போதனைகளின் சாராம்சத்தைச் சொல்ல ஆரம்பிக்கும்போது, 'உதவித் தளகர்த்தராகிய பிரதாப்சிங் சுல்தானைக் காண விரும்புகிறார்' என்ற செய்தி வந்தது. சுல்தான் அவரைச் சபாமண்டபத்திற்கு அழைத்து வர வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டார். வீரன் மண்டபத்திற்கு வந்து, சிங்காசனத்தில் வீற்றிருந்த சுல்தானுக்கும் இன்னும் மற்ற இருவருக்கும் தலை வணங்கி வந்தனஞ் செய்து ஆசனத்தில் அமர்ந்தான். புருஷோத்தமர் வீரனைக்கண்டதும், 'உதவித் தளகர்த்தரே வாழ்க' என்று புன்னகையோடு ஆசிகூறித் தமக்கருகில் அமரச் சொன்னார். சுல்தான் தம்முடைய சுக க்ஷேமங்களை விசாரிக்கும் பொருட்டே தம்மை அரண்மனைக்கு வரவழைத்தார் என்று புருஷோத்தமர் நினைத்திருந்தார். ஆனால், சுல்தானுடைய உண்மையான நோக்கம் இன்னதென்று நாம் முன்னரே தெரிவித்திருக்கிறோம். வீரனை நோக்கி, சுல்தான், 'பிரதாபரே, ராணுவ காரியங்கள் எல்லாம் எப்படியிருக்கின்றன?' என்று வினவினார். அதற்கு அவன், 'மகிபதி, எல்லாம் சரிவர நடைபெறுகின்றன' என்று பதிலளித்தான். பின்பு சுல்தான், புருஷோத்தமரை நோக்கி, 'நண்பரே, ஒரு சமாசாரம்' என்று சொல்லி, மண்டபத்திற்கருகில் இருந்த ஒரு அறைக்குள் அவரை அழைத்துச் சென்றார். அப்பால் சுல்தான் அவரை நோக்கி, 'நண்பரே, நமது ராணுவத்தில் உதவித் தளகர்த்தனாக உத்தியோகம் வகிக்கும் பிரதாப்சிங் என்னும் இவ்வாலிபனை நீர் அறிவீரா?' என்று வினவினார்.

புருஷோத்தமர், 'மகாப்பிரபு, அவரை நான் நன்றாய் அறி வேன். அவருடைய பேருதவியால்தான் என் மகள் தீயி னின்றுந் தப்பினாள். வேறு ஓர் அலுவலாய் நான் வெளியே சென்றிருந்த காலத்தில் என்னுடைய மாளிகையின் பின்புறத்தில் தீப்பற்றியது. அப்போது மாடியிலுள்ள ஒரு படுக்கை யறையில் அயர்ந்து நித்திரை செய்துகொண் டிருந்த என்னுடைய புதல்வியாகிய ரமணி, தீப்பற்றியதால் உண்டான சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்திருந்து கீழே இறங்குவதற்கு வழியறியாமல் மூர்ச்சையுற்றுக் கிடந்தாள். அந்த ஆபத்தினின்று அவளை இரட்சிக்க ஒருவரும் துணியவில்லை. தீ நன்றாய்ச் சுவாலித்து எரிந்து கொண்டிருந்தது. அப்போது, இவ் வாலிபர் திடீரென்று அத்தீயில் பாய்ந்து இமைகொட்டும் நேரத்திற்குள் அவ ளைத் தன் கரத்திலேந்தி வந்து அவளுடைய உயிரைக் காப் பாற்றினாராம். ஆதலால், இவருக்கு நான் என்ன செய்தா லும் தகும்' என்றார்.

சுல்தான் :—'நண்பரே, நாம் சபாமண்டபத்தில் வீற்றிருந்த காலத்தில் நம்முடைய மனத்தில் ஓர் எண்ணம் தோன் றிற்று. அதை அப்போதே உம்மிடத்தில் வெளியிட ஆவல்கொண் டிருந்தோம். ஆனால் வீரனும் அவ்வி டத்திலிருந்தமையால், அதை இரகசியமாய் உம்மி டத்தில் தெரிவிக்க இவ்வறைக்கு உம்மை வரவழைத் தோம். அது என்னவெனில், உமது புதல்வியாகிய ரமணியை நமது சேனைக்கு உதவித் தளகர்த்தனாக விருக்கும் பிரதாப்சிங் என்பவனுக்கு விவாகம் செய்து கொடுக்க உமக்கேதாவது தடையுண்டோ?' என்றார். புருஷோத்தமர் இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன்

திடுக்கிட்டுச் சுல்தானை நோக்கி, 'மகாப்பிரபு, நான் புத்தமதத்தன். பிரதாபன் இந்துமார்க்கத்தைச் சேர்ந்தவன். நான் என் புதல்வியை அவனுக்கு எவ்விதம் கொடுக்க முடியும்?' என்றார்.

சுல்தான் :-அப்படியா, நம்முடைய மனத்தில் அது தோன்றவில்லை. ஆயினும், நண்பரே, யாராயிருந்தாலென்ன? நற்குணமல்லவோ வேண்டியது.

புருஷோத்தமர் :-மகிபதி, தாங்கள் சொல்வது உண்மையே. ஆனல், பிரதாபன் புத்தமார்க்கத்தை அனுசரிப்பானகில், அவனுக்கு என் புதல்வியை மணம்புரிவிக்கத் தடையொன்றுமில்லை.

சுல்தான் :—'அப்படியானல், நாம் மறுபடியும் சபா மண்டபத்திற்குச் சென்று பிரதாபனுடைய அபிப்பிராயத்தை யறியவேண்டும். புத்தமத சம்பந்தமாய் அவன் கொண்டிருக்கும் சந்தேகங்களை நிவர்த்திசெய்ய முனிவரும் நம்முடன் இருக்கிறார்' என்று சொல்லிப் புருஷோத்தமரை அழைத்துக்கொண்டு சபா மண்டபத்தை யடைந்தார்.

அப்போது வீரன் மந்திரிகளோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தான். புத்த சந்நியாசி தனிமையாய் ஒரு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு தியானம் செய்பவரைப்போலிருந்தார். ஆனல், அவருடைய நோக்கம் வீரன் மேலிருந்தது. அவனையே உற்றுநோக்கின வண்ணமாய் உட்கார்ந்திருந்தார். சுல்தான், ஆசனத்தில் அமர்ந்த பின்பு வீரனை நோக்கி, 'பிரதாபா, உன்னைக்கண்ட நாள் முதற்கொண்டு, நம்முடைய மனத்தில் உன்னைப்பற்றிய கவலையொன்று உண்டாகிவிட்டது; நீ விரைவில் ஒரு மங்கையை மணம்

புரிந்து இன்பத்துடன் இவ்வுலகத்தில் உயிர்வாழ்ந்திருப் பாயாகில் நமக்கு அதிக சந்தோஷமாயிருக்கும். நமது நண்பராகிய புருஷோத்தமருடைய புதல்வியை நீ தீயினின் றுங் காப்பாற்றினை யென்று நாம் கேள்விப்பட்டு அதிக ஆனந்தமடைந்தோம். உனக்கே அம் மங்கையை மணம்புரி விக்கப் புருஷோத்தமர் விருப்பங்கொண்டிருக்கிறார். ஆயி னும், நீ ஒரு மதத்தை அநுசரிக்க, உன் மனைவி மற்றொரு மதத்தை அநுசரிப்பவளாயிருந்தால் அது நன்றாயிராதே. ஆகையால், நீ புத்த மார்க்கத்தை அநுசரித்து, அப்பெண் மணியோடு சுகித்திருக்க உனக்கு ஏதாவது தடையுண்டோ?' என்றார்.

வீரன் :-'மகிபதி, தாங்கள் அடியேனுடைய சுக க்ஷேமங் களைப்பற்றிக் கவலையுற்றிருப்பதற்கு நான் எள்ளளவும் அருகன் அல்லன். தங்களுடைய வார்த்தையின்படி நடக்க நான் கடமைப்பட் டிருக்கிறேன். ஆயினும் புத்தமார்க்கம் கடவுளற்ற மார்க்கமானபடியால், அம் மார்க்கத்தை யனுசரிக்க எனக்கு மனமில்லை' என்றான்.

வீரனையே உற்றுநோக்கிக்கொண்டிருந்த புத்த சந்நி யாசி அவன் பேசி முடிந்த பின்பு, அவனைத் தமக்கருகில் வர வழைத்து, 'அப்பா, நீ யார்? உன் பெயர் யாது? உன் வர லாறு என்ன?' என்று, அவனுடைய சவிஸ்தாரங்களை அறிய ஆசைகொண்டிருப்பவர்போல வினவினர். அவரு டைய தோற்றத்தினல் அவர் ஒரு பெரிய மகானாய் இருக்க வேண்டும் என்று தெரிந்துகொண்ட வீரன், அவரை நோக்கி, 'முனிவரரே, என் பெயர் பிரதாபன். நான் ஒரு ரஜபுத்திர வீரன்' என்றான். சந்நியாசி, 'அப்பா, நீ எந்த ஊர்? உன் தகப்பனர் பெயர் என்ன?' என்று கேட்

டார். வீரன், 'மகாத்மா, அவருடைய நாமத்தைத் தெரிவிப்பதால் என்ன் பிரயோஜனம். அவரை நீங்கள் அறிய மாட்டீர்கள். ஆயினும், உங்களைப்போன்ற பெரியவர்களுடைய விருப்பத்தை மறுக்க எனக்கு மனமில்லை. என்னுடைய ஊர் ஜபல்பூர். என் தகப்பனார் பெயர் மகாதேவ் சிங்' என்றான். சந்நியாசி, இதைக் கேள்வியுற்றதும் ஆச்சரியத்தினால் திடீரென்று ஆசனத்தை விட்டு எழுந்திருந்து, 'ஆ அப்படியா! ஜபல்பூர் அரசனுடைய தங்கையின் புதல்வன் அல்லவா நீ' என்று சொல்லிக் கண்ணீர் விட்டார். அந்தக் காட்சியைக் கண்டு வியப்படைந்திருந்த சுல்தானை நோக்கி, புத்தமத சந்நியாசி, 'மகாப்பிரபு, இவ்வீரனுடைய தகப்பனாகிய மகாதேவ் சிங் சிறுபிராயத்தில் ஜபல்பூரை வந்தடைந்த வரலாற்றைத் தெரிவிக்கிறேன் கேளுங்கள்

## 12. வீரன்பிறப்பு வெளியாதல்

ஆமது நகரத்தில் வசிப்பவர்கள் பெரும்பாலும் ரஜபுத்திர இந்துக்களென்று நாம் முன்னரே அறிந்திருக்கிறோம். சையத் அப்துல்லா தன்னுடைய சிறு பிராயமுதல் ரஜபுத்திர இந்துக்களோடு பழகிவந்தவனாகையால் அவர்களுடைய பாஷையையும் பாவனைகளையும் எளிதிற் கற்று அவர்களைப்போலவே நடந்து வந்தான்; அவர்களுடைய பழக்க வழக்கங்களையே அநுஷ்டித்தான். தன்னை ரஜபுத்ரனென்று எல்லாரும் அழைப்பதே அவனுக்குப் பிரியம். ஒருநாள் அவன் காட்டிற்கு வேட்டையாடத் தனிமையாய்ச் சென்றான். பொழுதுபோனதும் அக்காட்டின் ஓர்

இடத்தில் பதுங்கியிருந்த ஒரு பெரும் புலியைக்கண்டு அவனுடைய குதிரை வெறண்டு காற்றைப்போல் பறந்தோடி அவனைக் காட்டினுள்ளே வெகுதூரம் கொண்டு போய்விட்டது. இரவும் வந்தது. அவன் ஆமது நகரத்துக்குத் திரும்பிப்போகப் பாதையறியாமல் திகைத்தான். பின்பு இன்னது செய்வதென்று தெரியாமல் தன் குதிரையை ஒரு மரத்தடியில் கட்டிவிட்டு அம்மரத்தின் மேலேறி விசாலமாய்ப் படர்ந்திருந்த சில கிளைகளுக்கு மத்தியில் தன்னுடைய ஆடைகளை விரித்துப்போட்டுப் படுத்து உறங்க நினைத்தான். ஐயோ பாவம்! சிறு வாலிபன் என்ன செய்வான். பஞ்சணையில் படுத்துறங்கின காலம் போய்க் கரடுமுரடான மரக்கிளைகளின்மேல் படுக்கக் காலம் வந்தது. பயத்தினால் அவனுக்குத்தூக்கம் வரவில்லை. இருட்டு ஒரு பக்கம். அக்காட்டில் வசிக்கிற கொடிய ஜந்துக்களின் கூச்சல் ஒரு பக்கம். மரத்தில் கட்டப்பட்டிருந்த குதிரையும் பயத்தினால் கலக்கமடைந்தது. அப்துல்லா இரவெல்லாம் மனக்கலக்கமுற்றிருந்தான். அதன்பிறகு அவன் அதிகாலையில் எழுந்திருந்து தனக்கு அதிக பசியாயிருந்தமையால் அவ்விடத்திலிருந்த குட்டையொன்றில் தந்தசுத்தி செய்து சில காய் கனிகளைப் பறித்துப் புசித்தான். பின்பு தனது குதிரையைப் புல்லுள்ள இடத்திற்குக் கொண்டுபோய் சிறிது நேரம் மேயவிட்டான்.. பின்பு, பிரயாணம் செய்ய மனமுடையவனாய்க் குதிரையின் மேல் ஏறிச்சென்றான். ஆயினும் ஆமது நகரம் எந்தத் திசையில் இருக்கிறதென்று அவனுக்குத் தெரியாது. ஐந்தாறு நாட்கள் குதிரை மேலேறிப் பிரயாணம்செய்தான். பசியுண்டாகும்போதெல்லாம் குதிரையைவிட் டிறங்கிக்

காய் கனிகளைப் புசித்துக் களைப்பை ஆற்றிக்கொண்டான். எந்தப் பக்கம் போனபோதிலும மனித சஞ்சாரமற்ற காடாகவே இருந்தது. ஆறும் நாள் வெகு தூரத்தில் ஒரு பட்டணம் கண்ணுக்குத் தோன்றிற்று. அப்துல்லா அப்பட்டணத்தை நோக்கிச் சென்றான். தான் அணிந்திருந்த சில ஆபரணங்களை விற்றுப் பசியாறினான். ஆமது நகர் எவ்விடத்தி லிருக்கிறதென்று அந்த ஊரிலுள்ளோரை விசாரித்தான். அந்தப் பெயரையே தாங்கள் கேள்விப்பட்டதில்லை யென்று பதிலுரைத்தார்கள். ஏனென்றால், ஆமது நகரத்திற்கும் ஜபல்பூருக்கும் வெகுதூரம். அக்காலத்தில் போக்குவரவுக்கு வேண்டிய ஏற்ற சாதனங்கள் இல்லாமையால் ஒரு நகரத்தில் வசிப்பவர்களுக்கும் அடுத்த நகரத்தில் உள்ளவர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அப்படியிருக்க வெகு தூரத்திலுள்ள ஆமதுநகரைப்பற்றி அறிந்தவர்கள் ஜபல்பூரில் எவரும் இல்லை. அப்துல்லா தன்னை மகம்மதியன் என்றால் அந்நாட்டிலுள்ளோர்களுக்கு வெறுப்பை யுண்டாக்கும் என்று நினைத்து, தன் பெயரை மாற்றிக்கொள்ள மனங்கொண்டு தன்னை ஒரு ரஜபுத்திர இளவரசன் என்று சொல்லி வந்தான். அவன் அதிக செளந்தர்ய முள்ளவனென்றும் அதிக சாமர்த்தியமுள்ளவனென்றும் கண்டு ஜபல்பூர் அரசன் அவனிடத்தில் பிரியங்கொண்டு தன்னுடைய சேனைக்கு அவனை அதிபதியாக்கித் தன்னுடைய தங்கையையும் அவனுக்கு மணம் புரிவித்து அவனைத் தன்னிடமே வைத்துக்கொண்டான். மகாதேவ்சிங் என்று மறுநாமம் பூண்ட சையத் அப்துல்லா அவ்வரசனுடைய தங்கை அதிக ரூபலாவண்ணிய முடையவளென்று கண்டு அவளுடன் ஜபல்பூரிலேயே வசிக்க

ஆசைகொண்டு தன்னுடைய நாட்டிற்குத் திரும்பிப் போக மனமில்லாதவனாய் அவ்விடத்திலேயே தங்கிவிட்டான். அதன் பிறகு அரசருடைய தங்கை ஓர் அழகிய ஆண்மகவைப் பெற்றாள். அவனுக்குப் பிரதாபன் என்னும் அழகிய பெயரிட்டு, அவனை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். ஜபல்பூர் அரசனுடைய மனைவி, வெகுகாலம் பிள்ளையற்றிருந்து கடைசியில் ரமணியைப் பெற்றாள். பிரதாபன் சிறுவனாயிருக்கும்போது குழந்தையாகிய ரமணியோடு விளையாடி வருவான். இதுதான் வீரனுடைய பிறப்பைப் பற்றிய வரலாறு.

சந்நியாசி மொழிந்த யாவையும் கவனத்தோடு கேட்டுக்கொண்டிருந்த சுல்தான், இது உண்மையோ பொய்யோ என்று சந்தேகம்கொண்டவராய் சிம்மாசனத்தின்மேல் சாய்ந்துகொண்டு ஆழ்ந்த ஆலோசனையில் இருந்தார். அப்போது, சந்நியாசி பிரதாபனை நோக்கி, 'அப்பா, நீ ஆமது நகரை வந்தடைந்தது எவ்விதம்?' என்று வினவினார். அதற்கு வீரன், 'என்ன என்று சொல்வேன். நான் சிறு பிராயத்திலேயே கஷ்டங்களையெல்லாம் அநுபவிக்க ஈசன் என் தலையில் எழுதினார். நான் சிறு பையனாயிருக்கும்போது என்னை ஈன்றெடுத்த தாய் இறந்துவிட்டாள். என் தாய் இறந்த கொஞ்ச காலத்திற்குப் பின்பு ஜபல்பூருக்குப் பகைவனாகிய அரசனொருவன் ஒரு சிறிய சேனையொன்றைச் சேர்த்து ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாய் ஒரு நாள் நள்ளிரவில் அந் நகரத்தின்மேல் படையெடுத்து வந்தான். அவன் அரண்மனையை அடைந்து, வாயிலைக் காவல் காத்துக்கொண்டிருந்த வீரர்கள் யெல்லாரையும் கொன்று உள்ளே பிரவே

சிக்க எத்தனிக்கையில் அவர்களுடைய அழுகுரலைக் கேட்டு என் தகப்பனர், உடனே அவருடனிருந்த யுத்த வீரர்களை யெல்லாம் ஒருங்கே கூட்டி அவனை எதிர்த்துச் சண்டை செய்தார். தூக்கக் கலக்கத்தினுலும் சரியான ஆயுதங்களைப் பெற்றில்லாமையினுலும் அந்தச் சண்டையில் எனது தகப்பனர் தமது உயிரை இழக்க நேர்ந்தது விரோதி ஜயமடைந்ததும் அரண்மனையி லுள்ளவர்களைச் சிறையாக்கி ஜபல்பூரைக் கைப்பற்றிக்கொண்டான். இன்னும் அந்த ராஜ்யம் அவனுடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறது. சண்டை நேர்ந்த அன்றிரவு நான் அரண்மனையில் இல்லாமல் அந்நகரத்திற்கு வெளியிலிருந்த என் தகப்பனருடைய சிங்கார மாளிகை யொன்றில் வசித்து வந்தேன். ஜபல்பூரைக் கைப்பற்றிய அரசன் தான் சிறைப்படுத்தினவர்களை எல்லாம் கொன்றுவிட்டதாக நான் கேள்விப்பட்டு அக் கொலைபாதகனுடைய கைக்குத் தப்ப நினைத்து ஜபல்பூரைவிட்டுப் புறப்பட்டு வேறொரு நாட்டிற்குச் சென்றேன். அங்கே அந்த அரசன், அவ்விடத்திலுள்ள வாலிபர்களை யெல்லாம் யுத்தவீரர்களாகப் பழக்கி, தன்னுடைய சேனையில் சேர்த்து வந்தான். நான் அப்போது சிறு பையனு யிருந்தபோதிலும் வயிறு வளர்க்க ஏதாவது பிழைப்புவேண்டுமே யென்று அவ் வரசனுடைய சேனையில் சேரத் தீர்மானங்கொண்டு அந்த நகர வாலிபர்களுடன் நானும் யுத்தப்பயிற்சி செய்து வந்தேன். சில வருஷங்கள் சென்றபின்பு அவ் வரசன் என் திறமையைக் கண்டு என்னைத் தன்னுடைய சேனையின் ஒரு பிரிவிற்கு அதிபதியாககினன். பிறகு அவன் ஒரு பெரியசேனையைத் தயார் செய்து ஆமது நகருக்கு விரோதமாகப் படையெடுத்து

வந்தான். அச்சண்டையில் அவன் சேனை தோல்வியடைந்து புறங்காட்டியோடிற்று.

அப்போது யுத்தகளத்தில் முதன்மையாய் நின்று போரை நடாத்திய நானும், இன்னும் வேறு சிலயுத்தவீரர்களும் சிறையாக்கப்பட்டு இந்நகரை யடையலானோம். இது தான் நான் இந்நகரை யடைந்த வரலாறு. என் தந்தையை நான் இழந்தபிறகு எனக்கு இவ்வுலகத்தில் வேறு யார் உற்ற துணை இருக்கிறார்கள். அவர்எனக்குவைத்துப்போனபொருள் தாம் உயிரோடு இருந்த காலத்தில் அணிந்துகொண்டிருந்த இம்மோதிரம் ஒன்றே. இதைத்தான் நான் அவருடைய ஞாபகச் சின்னமாகப் போற்றி வருகிறேன்' என்று சொல்லித் தன்னுடைய சட்டைப்பையில் இருந்த கல்லிழைத்த ஒரு பொன் மோதிரத்தை எடுத்து அவர்களுக்குக் காட்டினான். ஆழ்ந்த நினைவுள்ளவராய் சிம்மாசனத்தில் வீற்றிருந்த சுல்தான் அந்த மோதிரத்தைக் கண்ணுற்றதும் எழுந்திருந்து வீரனை நோக்கி, 'பிரதாபா, அதை இங்கே கொண்டு வா பார்க்கலாம்' என்று சொன்னார். உடனே வீரன் அவரிடம் சென்று அதை அவர் கையில் கொடுத்தான். சுல்தான் அதை வாங்கிப் பார்த்தார். 'சையட் அப்துல்லா' என்று அந்த மோதிரத்தின்மேல் தம்முடைய பாஷையில்வரையப் பட்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் திடீரென்று அவர் சிம்மாசனத்தினின்றுங் குதித்து வீரனைத் தம்முடைய இரு கரங்களினாலும் தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். அப்போது வீரன் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான். அம்மண்டபத்தில் கூடியிருந்த யாவரும் இக்காட்சியைக் கண்டு ஆச்சரியத்தினால் பேசாமல் அமர்ந்து இருந்தார்கள். கல்லிழைத்த பொன்மோதிரத்தின்மேல், 'சையத்

அப்துல்லா' என்று இந்துஸ்தானி பாஷையில் வரையப் பெற்றிருந்ததை எல்லாரும் பார்த்தார்கள். ஜபல்பூரில் உள்ளவர்களுக்கு மகாதேவ்சிங், சையத் அப்துல்லா என்னும் ஓர் மகம்மதியனென்று தெரியாது. அப்துல்லா, ஜபல்பூரை யடைந்ததும் தன்னை ஒரு ரஜபுத்திர இளவரசனென்று யாவரிடத்திலும் சொல்லி வந்தான். பிரதாபனுக்கும் தன் தகப்பன் மகம்மதியனென்று தெரியாது. அவனுக்கு இந்துஸ்தானி பாஷை தெரியாதாகையால் மோதிரத்தின் மேல் வரையப்பெற்றிருந்த எழுத்துக்கள் அவனுக்கு விளங்கவில்லை. அம்மோதிரத்தின் தோற்றத்தினாலேயே அது தன் சகோதரனுடையது என்பதை சுல்தான் அறிந்து அதைத் தம்முடைய கையில் வாங்கி நன்றாய் ஆராய்ந்து பார்த்தார். கொஞ்சம் மறைந்தும் மறையாததுமாய், 'சையத் அப்துல்லா' என்று அதன்பேரில் இருப்பதைக் கண்டார். கண்டதும், வீரன் அப்துல்லாவின் புதல்வன் என்பது அவருக்குத் தெரியவந்தது. சுல்தான் அப்துல்லாவைக் காணுதபோதிலும் அவருடைய புதல்வனைக் கண்டதினாலே சொல்லமுடியாத ஆனந்தமடைந்து புத்த சந்நியாசியை நோக்கி, 'முனி சிரேஷ்டரே, இந்தப் பேருதவி புரியவந்த உமக்குக் கோடி வந்தனம். உம்மையன்றி நாம் இவனுடைய வரலாற்றை அறிந்துகொள்வது கூடாத காரியம். இவனே நம்முடைய சகோதரனாகிய அப்துல்லாவின் புதல்வன் என்று சொல்லிச் சந்தோஷமடைந்தான். மறுபடியும் சுல்தான் புருஷோத்தமரை நோக்கி, 'நண்பரே, ஆண்டவன் நம்மிடம் இன்றே அருள் புரிந்தார். இவ் வாலிபனை நாம் முதலில் கண்ணுற்றபோதே . இவன் அபதுல்லாவின் முகச்சாயலைப் பெற்றிருந்ததினாலும் இவனுக்கும் எனக்குமுள்ள இரத்த

சம்பந்தத்தினுலும் என்னை யறியாமலே எனக்கு இவனிடம் ஒரு பற்று உண்டாயிற்று. முனிவருடைய பேருதவி யினுல் நான் இவனைப் புத்திரனுக அடைந்தேன்' என்ருர்.

## 13 ரமணியை வீரன் மணம் புரிதல்

ஜபல்பூர் அரசனுடைய புதல்வியைத் தமது சொந்தப் புதல்வியென்று வளர்த்து வரும் புருஷோத்தமர் சபா மண்டபத்தில் நடந்த விஷயங்களைக் கண்டு மனக்கலக்க முற்ருர். தன்னுடைய கண்களுக்கு முன்னே நடைபெற்ற காட்சிகளெல்லாம் உண்மையா யிருக்கலாமோ என்று சந்தேகம் கொண்டார். அவருடைய சரீர முழுவதும் நடுக்க முற்றதால் தம்முடைய நிலையைப் பிறர் அறியாவண்ணம் பலமுறையும் தமது மனத்தைத் திடப்படுத்தினர். பல ஆண்டுகளுக்கு முன் தனக்கு ஜபல்பூரில் நேர்ந்த விபத்தும் அக்கொடிய அரசனுக்குப் புத்தி கற்பிக்கும்படி தான் செய்த ஏற்பாடும் அவருடைய ஞாபகத்திற்கு வந்தன. அவர் மனம் துடித்தது. கிணறு வெட்டப் பூதம் புறப் பட்ட கதைபோலத் தன் க்ஷேமங்களைத் தெரிவிக்க அவர் அரண்மனைக்குப் போக, அங்கே வீரனுடைய வரலாற்றைத் தெரிந்துகொள்ள நேர்ந்தது. ரமணி, தன் மாமனுராகிய ஜபல்பூர் அரசனுடைய புதல்வி என்று வீரன் அறிந்து கொண்டால் அவன் நம்மைச் சும்மா விடுவானு? இனி நாம் சபாமண்டபத்தில் இருப்பது சரியன்று என்று எண்ணிப் புருஷோத்தமர் சுல்தானிடத்தில் விடைபெற்றுத் தம் முடைய மாளிகையை அடைந்தார். 'நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்பது போலப் புருஷோத்தமருடைய முகக்குறிப்பினுல் அவருடைய மனவேதனையை அந்த

மாளிகையில் உள்ள யாவரும் தெரிந்துகொண்டார்கள். ஒருவரிடத்திலும் ஒன்றும் பேசாமல் புருஷோத்தமர் தமது அறைக்குட் சென்று கதவைத் தாளிட்டுச் சோபாவின்மீது சாய்ந்துகொண்டு, பின்வருமாறு ஆலோசிக்கலானார்:

'நாம் ஒன்றும் நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்து விட்டது. ரமணியைக் காப்பாற்றின வெள்ளுடை தரித்த வாலிபன் இன்னானென்று யாருக்குத் தெரியும். அவளுடைய தந்தையாகிய ஜபல்பூர் அரசன் நமக்குச் செய்த துரோகத்தினால் நாம் ரஜபுத்திர இந்துக்களை வெறுக்கவும் ரமணியை ரஜபுத்திர இந்துமார்க்கத்தைச் சேர்ந்த ஒருவனுக்கும் மணம்புரிவதில்லை என்னும் தீர்மானஞ்செய்யவும் நேர்ந்தன. ஆனால் இப்போது நமது வெறுப்பும், தீர்மானமும் என்னவாயின. பிரதாபன், ரமணியைத் தீயினின்றுங் காப்பாற்றினதுமன்றி உத்தம புருஷனும் நற்குண நற்செயல்கள் உள்ளவனுமாகையால் ரஜபுத்திர இந்துக்கள் பேரில் நான் கொண்டிருந்த வெறுப்பு இந்த வீரன்விஷயத்தில் நீங்கி விட்டது. ரமணி வீரனுக்கு மாமன் புதல்வியாதலால் அவனே அவளை மணம்புரிவதற்கு உரியவன். அவனைத் தவிர்த்து வேறொருவனுக்கு நாம் அவளைக் கொடுப்போமாயின் பெரும் பாவம் ஆகும். உலகமும் நம்மை நிந்திக்கும். ஆகையால், நாம் புத்தமதக் கோட்பாடுகளில் வளர்த்து வந்த ரமணியை இந்துமார்க்கத்தைச் சேர்ந்த ரஜபுத்திரனுக்கு மணம்புரிவிக்கக்கூடாது என்று செய்த தீர்மானம் இன்றோடு அவலமாயிற்று' என்று புருஷோத்தமர் தமக்குள் சொல்லிக்கொண்டு கதவைத் திறந்து வெளியே வந்து சம்யுக்தையைத் தமது அறைக்குள் அழைத்தார். அவள் வந்ததும் அவளை நோக்கிப் புருஷோத்தமர், 'சம்யுக்தா, கடவுளுடைய கருத்

தைக் கண்டனையோ. நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்னும் பழமொழி என்னுடைய விஷயத்தில் பலித்து விட்டது. ரமணி, ஜபல்பூர் அரசனுடைய புதல்வியென்று உனக்கு நான் முன்னமே தெரிவித்திருக்கிறேன். அந்த அரசனுக்கு ஒரு தங்கையுண்டு. அவளை வேறொரு நாட்டினுடைய ரஜபுத்திர இளவரசனாகிய மகா தேவ்சிங் என்பவனுக்கு மணம்புரிவித்தார்கள். ஜபல்பூர் அரசனுடைய தங்கைக்கு அந்த இளவரசனால் ஒரு புதல்வன் பிறந்தான். அவன் தான் ரமணியைத் தீயினின்றுங் காப்பாற்றின வாலிபன். அவன் தான் பிரதாப்சிங். அவன் தான் சுல்தானுடைய சகோதரனாகிய சையத் அப்துல்லாவின் அருந்தவப் புதல்வன்' என்றார்.

சம்யுக்தை, 'என்ன ஆச்சரியம்! வீரன் இன்னானென்று யாருக்குத்தெரியும். இவ்விஷயங்களை எப்படித் தெரிந்து கொண்டீர்' என்று புருஷோத்தமரை வினவியபொழுது, அதற்கு அவர், சுல்தான் தனது க்ஷேமங்களை அறியும் பொருட்டுத் தன்னை அரண்மனைக்கு வரவழைத்ததையும், புத்த சந்நியாசியைத் தான் தன்னுடன் அழைத்துச் சென்றதையும், அங்கே சபாமண்டபத்தில் இருக்கும்போது உதவித் தளகர்த்தனாகிய பிரதாப்சிங் அவ்விடத்திற்கு வந்ததையும், அவனைக் கண்ணுற்ற காலத்தில் சுல்தானுடைய மனத்தில் உண்டான எண்ணத்தையும் தெரிவித்தார். அதன் பிறகு அங்கே நடந்த காட்சியைக்கண்டு தனக்குண்டான நடுக்கத்தையும் புருஷோத்தமர் ஆதியோடந்தமாய்ச் சம்யுக்தைக்கு எடுத்துரைத்தார். ரமணியை வீரனுக்குக் கொடுக்கத் தான் இப்போது சித்தமாயிருப்பதையும் தெரிவித்தார். இவ்விஷயங்களை யெல்லாம் வெகு கவனத்துடன்

கேட்ட சம்யுக்தை அடைந்த ஆனந்தத்திற்கு அளவே யில்லை.

கடைசியாகப் புருஷோத்தமர் சம்யுக்தையை நோக்கி, 'சம்யுக்தா, ரமணி ஜபல்பூர் அரசரின் புதல்வியென்பது நம்மிருவரைத் தவிர வேறெவருக்கும் தெரியாது. இந்த ரகசியம், ரமணிக்காவது அவளுக்கு நாதனாகப்போகிற பிர தாபனுக்காவது தெரியுமாகில் அவர்களுக்கு என்னிடத்தில் வெறுப்புண்டாகும். அப்போது என்னுடைய வாழ்நாளும் சஞ்சலத்தோடு சீக்கிரத்தில் முடிவுபெறும். ஆகையால், இந்த இரகசியத்தை யாரிடத்திலும் சொல்லவேண்டாம்' என்று அவளை வேண்டினார்.

பின்பு, சுல்தான் புருஷோத்தமருக்கு விடை கொடுத்தனுப்பிய பின்னர், புத்த சந்நியாசியைச் சிறிது நேரம் சபாமண்டபத்தில் தங்கியிருக்கும்படி வேண்டிக் கொண்டு, வீரனைத் தமது மனைவிக்குக் காண்பித்து அவனு டைய வரலாற்றைத் தெரிவிக்க அவனை அந்தப்புரத்திற்கு அழைத்துக்கொண்டு போனார். சுல்தானுடைய மனைவி அவ னுடைய வரலாற்றைக் கேட்டு ஆச்சரியமடைந்தவளாய் 'நாதா, நாம் பிள்ளையற்றிருக்கிறோம். இவனையே நமக்குச் சுவீகார புத்திரனாக ஏற்றுக்கொள்வோம்' என்றாள். அதற்குச் சுல்தான் சந்தோஷத்தோடு சம்மதித்து அன்று முதல் வீரனைத் தன்னுடன் அரண்மனையில் வைத்துக் கொண்டார்.

வீரனுக்கு ரமணியை மணமுடிக்கும் மங்களோற்சவத் திற்கு ஏற்பாடுகள் பல நடந்தேறி வந்தன. ஆமதுநகர வாசிகள் யாவரும் அந்தத் தினத்தை ஆவலுடன் எதிர்பார்த் துக்கொண் டிருந்தார்கள். சுல்தானுடைய அரண்மனையில்

ஆகாயமட்டும் அளாவி நிற்கும் பெரியதோர் மணப்பந்தல் வெகு சிறப்புடன் அமைக்கப்பெற்றது.

அரண்மனையைத் தங்களுடைய திறமை விளங்க அலங்கரித்தனர். நகர முழுதும் தோரணங்களும் புஷ்ப மாலைகளுமாக விளங்கின. மகுடம் தரித்த மன்னர்கள் பலர், தங்கள் தங்கள் பரிவாரங்களுடனும் சதுரங்கசேனைகளுடனும் அம் மங்களோற்சவத்தைக் காணுமாறு ஆமது நகரத்தை வந்தடைந்தனர். அரண்மனையில் அவர்களுக்கு இடம் அகப்படாமையால் வயல் வெளிகளிலும் சுற்றுப் புறங்களிலும் தங்கள் பரிவாரங்களுடன் தங்கியிருந்தனர். புருஷோத்தமருடைய மாளிகையானது ஒரு சிறிய சொர்க்கலோகம்போல் விளங்கிற்று. ரமணியினுடைய மனம் எவ்வாறு இருக்குமென்று நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். மரண தண்டனைபெற்றுக் கொலைக்களத்தில் நின்று கொண்டிருக்கும் ஒருவனைப் பார்த்து நியாயாதிபதி, 'நீ குற்றமற்றவன் என்று அறிந்தோம்' என்று சொல்லி அவனை விடுதலை செய்தால், அவனுடைய மனம் எவ்வாறு இருக்குமோ, அவ்வாறு ரமணியினுடைய மனம் ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்து கிடந்தது. மங்களோற்சவ தினத்தன்று மணப்பந்தலில் மன்னர் பலர் தங்களுடைய மகுடங்கள் ஒன்றோடொன்று மோதும்படி நிறைந்திருந்தனர். ஆமது நகரவாசிகள் யாவரும் கூட்டங் கூட்டமாய் அரண்மனைக்குத் திரண்டு வந்தனர். வீடுகள் எல்லாம் சுண்ணச் சாந்து தீட்டப்பெற்றிருந்தன. அந்நகர மங்கையர், வாசல் தோறும் தண்ணீர் தெளித்துப் புழுதிபோக்கி, சித்திரக் கோலமிட்டு அலங்கரித்தனர். ஆடவர், தெருக்களிலும் வீதிகளிலும் இடையிடையே பந்தல்கள் அமைத்துப்

புஷ்பமாலைகளாலும் மாவிலைத் தோரணங்களாலும் அவை களை அலங்கரித்து வழிகளில் பூக்களையும் இலைகளையும் தெளித்து வைத்தார்கள். அரண்மனையில் அமைக்கப்பெற்ற மணப்பந்தல் மிகச் சிறப்போடு விளங்கிற்று. விசித்திரப் படங்களும், சித்திரம் தீர்ந்த சிலைகளும் ஆங்காங்கே துலங்கி நின்றன. விசாலமான விசும்பிடைப் பல வர்ணக்கொடிகள் அழகுடன் அசைந்துகொண்டிருந்தன. மணப்பந்தலி லுள்ள ஸ்தம்பங்களில் வாழை, கமுகு, கரும்பு முதலியன கட்டப்பட் டிருந்தன. கூந்தற்பனையினது சடைகள் அழ காகத் தொங்கின. விசித்திரமான காகிதத் தொங்கல்களும், பல வர்ணமுள்ள புஷ்பமாலைகளும், விளக்குகளும் அப்பந் தலில் தொங்கவிடப்பட்டிருந்தன. தரையில் பெரியதோர் இரத்தினக் கம்பளம் விரிக்கப்பெறிருந்தது. பந்தலின் ஒரு புறத்தில் புஷ்பங்களினல் அலங்கரிக்கப்பெற்ற மண வறையும், அதில் இரண்டு தங்க ஆசனங்களும், காண்பவர் மனத்தைக் கவர்ந்தன. மணப்பந்தலில் இடம் அகப்படா மையால் அரண்மனையில் உள்ளும் புறமும் ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் நின்றுகொண் டிருந்தார்கள். பந்தலி னுள்ளே மன்னர்களும், மந்திரிகளும், பிரபுக்களும், பெரி யோர்களும், பாவலர்கள் பலரும் நிறைந்திருந்தனர். ஆமது நகரம் முழுதும் மங்களபேரிகை மாண்புடன் முழங்கிற்று. காலாட்படைகளும், குதிரை வீரர்களும், ஆயுதபாணி களாய் அரண்மனையைச் சுற்றிலும் வரிசை வரிசையாய் நின்றுகொண் டிருந்தனர். சுல்தானுடைய உத்தியோகஸ் தரும், புருஷோத்தமரும் வந்தவர்களை உபசரித்தனர். மணமக்கள் மணவாடை யணிந்து மணவறையில் அழகாக வீற்றிருந்தனர். முகூர்த்தம் முடிந்ததும், சுல்தான் அவ்வி

டத்திலிருந்த மன்னர் முதலியவர்களுக்குத் தகுந்தபடி மரி யாதை செய்தனர். மகம்மதியர்களும், ரஜபுத்திர இந்துக் களும், புத்த மார்க்கத்தைச் சார்ந்தவர்களும் யாவரும் ஜாதி பேதம் மதபேதமின்றி ஒற்றுமையோடு தம்பதிகளை ஆசீர்வ தித்தனர். மங்களோற்சவமும் சிறப்பாக நடந்தேறியது.

வீரன், ரமணியாகிய கற்பரசியோடு சுகித்திருந்தான். தன்னுடைய நாயகி, புருஷோத்தமருடைய புதல்வியல்ல ளென்று அவனுக்குத் தெரியும். இதை அவளுக்கு தான் தெரிவிக்கும் பட்சத்தில் புருஷோத்தமரிடத்தில் அவளுக்கு வெறுப்பு உண்டாகும் என்று நினைத்து, அதைத் தன்னு டைய மனத்திலேயே இரகசியமாய் வைத்திருந்தான். ஆயி னும், ரமணி ஜபல்பூர் அரசனுடைய புதல்வியென்று அவ னுக்குத் தெரியாது. ஏனென்றால், சம்யுக்தை அதை அவ னுக்குத் தெரிவிக்கவில்லை. இந்துமார்க்கத்தைச் சேர்ந்த வீரன், புத்தமதத்தரான புருஷோத்தமருடைய புதல் வியை மணம்புரிந்தமையால், ஆமதுநகரில் வசித்த ரஜபுத்திர இந்துக்களுக்கும், புத்த மதத்தர்களுக்கும், ஒருவித ஐக் கியம் ஏற்பட்டுவிட்டது. இந்துக்கள், புத்தர்களுக்குத் துன்பம் செய்வதை யொழித்து அவர்களை நேசித்து வந்த னர். இந்த வீரன், சுல்தான் தமையன் புத்திரனுகையால் அந் நகரிலுள்ள மகம்மதியரும் இந்துக்களிடத்திலும், புத் தர்களிடத்திலும் நட்புக்கொண்டிருந்தனர். வீரன் ரமணி யோடு அன்புடன் இல்லறம் நடாத்திவரும் காலத்தில், ஒருநாள் சுல்தான் அவனைத் தன்னிடம் வரவழைத்து, "அப்பா பிரதாபா, நானே வயோதிகனுகி விட்டேன். எனக் குப் பிறகு நீ இந்த நகரில் அரசாட்சி செய்துவருவாய், மேலும் நீ ஜபல்பூருக்கு விரோதமாக நம்முடைய

சேனையை நடத்திச்சென்று அவ்விடத்தில் அரசாண்டு வரும் கள்ளனைக் கொலைபுரிந்து அந்நாட்டைக் கைப்பற்றிக் கொள்வாய்' என்றார். உடனே வீரன் ஒரு பெரிய சேனையைத் திரட்டி, ஜபல்பூரின்மேல் படையெடுத்துச் சென்றான். அப்போது அங்கே கடும்போர் நடந்தது. அதில் அந்நாட்டை அரசாண்டு வந்த அரசன் மாண்டு போக, வீரன் அதை உடனே தன் வயப்படுத்தி, தனக்கு நண்பனாகிய வேறொரு சிற்றரசனிடத்தில் அதை ஒப்பித்து, அவனைத் தனக்குக் கப்பங் கட்டும்படி திட்டம் செய்து, ஜயசீலனாய் ஆமதுநகரம் வந்தடைந்தான். சில வருஷங்கள் சென்றபின்பு சுல்தான் மரணமடைந்தார். அந் நகரவாசிகள் யாவரும் உடனே ஒன்றுகூடிப் பிரதாபனுக்கு மகுடாபிஷேகம்செய்து அவனையே தங்களுக்கு அரசனாக்கிக்கொண்டார்கள். அவன் செங்கோல் செலுத்தி வருங்காலத்தில் யாவரும் சண்டை சச்சரவின்றி இன்புற்று வாழ்ந்திருந்தார்கள். ஆமதுநகரம் பூலோக சுவர்க்கலோகம் போல் விளங்கிற்று.

# ஸ்ரீ த்யாகராஜ ஹ்ருதயம்

ஸங்கீதாபிமானிகட்கு இன்றியமையாத ஓர் அரிய நூல்.

ஸங்கீத ஸாஹித்ய வித்வான் கே. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டது.

இது 500 பக்கங்கள் அடங்கிய 4-புத்தகங்களாய் உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டு உயர்தர பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 4-புத்தகங்களடங்கிய ஒரு செட்டின் விலை ரூபா | 16 | 0 | 0 |
| ஒரு புத்தகத்தின் விலை ரூபா | 4 | 0 | 0 |

# ஸங்கீத ரத்னாவளி

(Third Edition Revised & Enlarged 400 pp.)

இஃது ஸங்கீதம் பயில விரும்புகிற நமது சிறுவர் சிறுமிகட்கும், ஸங்கீதத்தில் நன்கு பயின்றவர்கட்கும், ஸங்கீத உபாத்தியாயர்கட்கும், ஹார்மோனியம், பிடீல், வீணை முதலிய வாத்தியங்களிற் பயிலுகிற அல்லது பயின்றவர்கட்கும் இன்றியமையாத ஓர் அரிய புத்தகம். இதில் ஸ்வராவளி முதலிய பால பாடங்களும், வர்ணங்கள், தானங்கள், கீர்த்தனைகள் முதலிய உயர்தரப்பாடங்களும் வரைந்து த்யாகய்யர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் முதலிய அரிய வித்வான்களா லியற்றப்பெற்ற கீர்த்தனங்கள் ஸ்வர தாளங்களுடன், ஸாகித்திய பிழையின்றி, ஸ்தாயி முதலியவைகட்குக் குறிகளமைக்கப்பெற்று எழுதப்பட்டிருக்கின்றன. இதில் ஹார்மோனியப் படம் ஒன்றும் வீணைப்படம் ஒன்றும் சேர்த்திருக்கிறது. முக்கியமாய் வேண்டிய ராகங்களின் அகராதியும் இதில் சேர்த்திருக்கிறது.

விலை ரூ. 3 0 0

# ஸங்கீத ரஸார்ணவம்

(Second Edition, Revised & Enlarged. 350 pp)

இதில், த்யாகய்யர், தீக்ஷிதர்கள், சதாசிவ ராவ், கர்ப்பபுரிவாஸர், சின்னசாமி ஐயர், சேஷ ஐயர், சுப்பராமய்யர், கனம் கிருஷ்ணய்யர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர் முதலாக 40 பூர்விக வித்வான்களா லியற்றப்பெற்ற கீர்த்தனங்கள், ஜாவளிகள், பதங்கள், ராகமாலிகைகள் முதலியனவும், நந்தனர் சரித்திரக் கீர்த்தனங்களும், தேவாரங்கள், காவடிச்சிந்து இராமாயணக் கீர்த்தனைகள் முதலியனவும், இன்னும் தற்காலத்தில் காலக்ஷேபங்களிலும், கச்சேரிகளிலும் பாடும் சில்லரைப் பாட்டுகளும், ஸ்வர தாளங்களுடன் எழுதப்பட் டிருக்கின்றன. மேலும் அனேக ராகங்களின் ராகலக்ஷணங்களும் ஆரோகண அவரோகண கிரமமும், இதில் அடங்கி இருக்கின்றன. இது ஒரு சங்கீத பொக்கிஷம்.

விலை ரூபா. 2 8 0

# ஸங்கீத சித்ராம்பரி

(Second Edition, Revised and Enlarged.)

**அந்தந்த பாஷைகளின் உச்சரிப்பு வரும் மாதிரியே தமிழ் எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன.**

இதில் ஹிந்துஸ்தானி, பார்ஸி பாட்டுகள், இங்கிலீஷ் நோட்டுகள், தேவாரம் முதலியவை ஸ்வரதாள ஸாஹித்தியங்களுடன் அடங்கி யிருக்கின்றன. இதில் ஹார்மோனியப் படம் ஒன்றும், வீணைப்படம் ஒன்றும் சேர்த்திருக்கிறது.

விலை ரூபா 1 0 0

**எம். ஆதி அண்ட் கம்பெனி,**

**புத்தக வியாபாரிகள், 11/286, எஸ்பிளனேட், மதராஸ்.**

1-A
3-100


# எமது சொந்த ப்ரசுரங்கள்

## புதிய தமிழ் நாவல்கள்

## இந்திரபுரி இரகசியம்.

இந்திரபுரியில் ஒரு பிரபு அந்தரங்கத்தில் விவாகம் செய்து கொண்டு ஒரு புத்திரிக்குத் தந்தையாகிறான். பிறகு அந்தப் புத்திரியும், அவள் தாயும் காணாமற் போகிறார்கள். அதைக் கண்டு பிடிக்க அந்தப்பிரபுவே வேறு உருவமாறி சித்திரத்தொழில்களைச் செய்து கொண்டு பல இடங்களில் திரிந்து கடைசியில் தன் புத்திரியைக் கண்டு பிடித்து தன் உயர் பதவியை அவளுக்குக் கொடுக்கிறான். அவன் பெண்ணாகிய இந்திராணி முதலில் தன் தந்தை தாயார் இன்னவர்களென்று தெரியாமல் தன் பாலிய தசையில் பட்ட கஷ்டமும், கடைசியில் தான் அடைந்த சௌக்கியமும் மிக்க வியப்பே மேலும் தான் துஷ்டர்களிடம் அகப்பட்டுக் கொண்டபோது அங்கே தான் நடந்து கொண்ட நல்ல மாதிரியும் அவசியம் தெரிந்து கொள்ளத் தகுந்ததே. இக்கதையை வாசிக்க எடுத்தால் கதை முடியுமட்டும் புஸ்தகத்தைக் கீழே வைக்கமாட்டார்கள்.

இதன் விலை ரூபா 1 4 0

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதிலக்ஷ்மி ... | 1 | 12 | 0 | சொக்கநாதர் ... | 1 | 0 | 0 |
| அயாஷா ... | 1 | 12 | 0 | வாணநிதி ... | 0 | 12 | 0 |
| இந்திரஜித்தன் ... | 1 | 4 | 0 | கோர்ஹஜான் ... | 0 | 10 | 0 |
| ரங்கநாயகி ... | 1 | 4 | 0 | சீனிவாசன் ... | 0 | 6 | 0 |
| அரண்மனை இரகசியம் | 1 | 4 | 0 | மோகனா ... | 0 | 5 | 0 |

**எம். ஆதி அண்ட் கம்பெனி**

புஸ்தக வியாபாரிகள்,

எஸ்பிளனேட், ஜி. டி மதராஸ்.